
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 22.11.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்






இப்போ...
72 ஸ்ரீலலிதா
68 ராணி மகாராணி
- கிச்சன் சீக்ரெட்
6 வாடகைத்தாய்
10 அவலம்
66 மியூசிக் கிச்சன்
அப்புறமா... அடுத்தடுத்து...
நட்பு ஸ்பெஷல்
இன்டர்நெட் ஸ்பெஷல்
மியூசிக் ஸ்பெஷல்
அழகு ஸ்பெஷல்
தயாராகவிருக்கு..!



'திருதிரு துறுதுறு' படத்தைத் தந்த பெண் இயக்குநர் நந்தினியைத் தொடர்ந்து, 'துரோகி'யை இயக்கி முடிக்கும் தருவாயில் உள்ளார் சுதா கோங்குரா. இவர் மணிரத்னம் பட்டறையில் பயின்ற பெண். இன்னொரு புது வரவு.





தலித் படைப்பாளியும் பேராசிரியையுமான அரங்க மல்லிகா, ''தலித் - தலித் அல்லாதோர் - அரவாணிகள் படைப்பாளிகள் இயக்கம்'' என்ற மாநில அமைப்பைத் துவக்கியுள்ளார். துவக்க விழா இம்மாதம் நடக்கவிருக்கிறதாம்.

(அதுசரி... அதுக்குள்ள பதவிக்களுக்கான இட ஒதுக்கீடு ஒழுங்காக முடிஞ்சுடுமா?)



* அரங்க மல்லிகா



நியூஸ் டூடோன்

ரெட்டைச் சுழியில் இணை இயக்குநராக அவதாரம் எடுத்த சிறுகதையாளர் சந்திராவைப் பின்பற்றி, கவிஞர் உமாசக்தி உதவி இயக்குனராகி யுள்ளார். அடுத்து நவீனக் கவிஞர் குட்டி ரேவதியும் உதவி இயக்குநராக உருமாறி உள்ளார். இப்படி பெண் கவிஞர்கள் சினிமாத் தொழிலில் கால் பதிக்க, பெண்ணியம் சைக்ளோன் கோலிவுட்டில் குடியேறியுள்ளதாம்...

(கோஷ்டிச் சண்டைக்கும் இனி பஞ்சம் இருக்காதே?!)

'**ஈ**ரம்' இயக்குநர் அறிவழகன் இன்டர் நெட்டில் தனது space book-ல் தொடர்ந்து மக்களின் கருத்தைக் கேட்கிறராம். திரை வாய்ப்புக் கோரும் அன்பர்களை 'நெட்'டிலேயே நேர்காணல் முடித்து, முடிந்தால் சினியாரிட்டியில் வாய்ப்பு தருவாராம். சபாஷ்!



* அறிவழகன்

நம்ம கல்கியில் ஜாலி ஸ்டோர்ஸ் எழுதிக்கிட்டு இருந்த நம்ம புள்ள உத்தம புத்திரன் (எம்.ஜி. கன்னியப்பன்) வசனகர்த்தாவா பிரமோஷ னாகியிருக்கார். 'நெல்லை சந்திப்பு'. ''நம்ம குடும்பங்களில் நடக்கும் சராசரி சம்பவங்களைத்தான் கோத்துக் கட்டியிருக்கோம். கனவுப் பறவை வானத் தில் சிறகசைத்தாலும் அதன் யதார்த்தத்தின் கால்கள் மண்ணில்தானே வந்தாகணும்'' என்று கதைக் கருவை காட்டுகிறார் இயக்குநர் நவீன். இவர் கே.எஸ். ரவிக்குமாரின் உதவியாளர்

(எப்படியாவது தமிழ் சினிமாவை உலகத் தரத்துக்கு உயர்த்துங்கப்பா... அது எவ்வளவு ஹைஸ்ட் இருக்கும்?)

- மோகினி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

எத்தனைதான் லேட்டஸ்ட் ஃபேஷனில் ட்ரஸ் செய்தாலும் ஒரு கம்ப்ளீட் லுக் கொடுப்பது நகைகள்தான்! ஆனால், இன்றைய பெண்களுக்கு அம்மாக்களின் இரட்டைவடம், தாட்டியான நெக்லஸ், பேசரி, கனமான தோடுகள்... இதெல்லாம் கட்டோடு பிடிப்பதில்லை. ட்ரஸ்ஸுக்கு மாட்ச்சாக விதவிதமாக, கலர் கலராக ஜுவல்லரி போடுவதே வேண்டுதலாக இருக்கிறது.

ஜுவல்லரியில் பேப்பர் ஜுவல்லரி என்று ஒரு வகை. பெண்களுடைய ஆக்சஸரீஸ் லிஸ்ட்டில் முதலிடத்தில் இருக்கிறது. பேப்பர் என்றால் நம் நினைவுக்கு வருவது செய்தித்தாள்கள்தான். ''அதை வைத்து நகைகள் கூடச் செய்ய முடியுமா? இந்த நகைகள் நாள்பட்டு நிற்குமா...? கலர் போய் விடுமா...?'' போன்ற பல 'மா'க்களுடன் நாம் தேடிப் போனது நுங்கம்பாக்கத்திலிருக்கும் மகாலட்சுமி க்ரியேஷன்ஸின் நிறுவனரான உஷா நடராஜனை.

''ரீ-சைக்கிள்டு பேப்பர்களை மில்லிலிருந்து வாங்கி, ஹார்ட்டிகல்சர் டிபார்ட்மென்டுக்கு அனுப்பி வெஜிடபிள் சாயம் பூசப்பட்டு, பிறகு எங்களிடம் வரும். எங்களிடம் பல குழுக்கள். டிஸைன் ஒருத்தர், ஷேப் ஒருத்தர், அஸெம்பிள் ஒருத்தர், ஃபைனல் டச் கொடுக்க ஒருத்தர் என டீமாகச் செயல்படுவோம். இக்கலையை இந்தியாவில் ஆரம்பித்ததே நாங்கள்தான். உரிமம் வைத்திருக்கிறோம். பல வெளிநாடுகளுக்கு எங்கள் ஜுவல்லரி போகிறது. இங்கும் பேப்பர் ஜுவல்லரி பெண்களின் ஃபேவரிட்'' என்கிறார் உஷா.

''இது ஒரு 'இக்கோ ஃப்ரண்ட்லி', ப்ரொடக்ட். அதனாலேயே பெண்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நான்- அலர்ஜிக், லைட் வெயிட் மற்றும் எக்கனாமிக்கல்... எல்லா ரேஞ்சிலும் கிடைக்கிறது. வாட்டர் ப்ரூஃப்! அதனால் தைரியமாக நனையலாம்; ஒன்றுமே ஆகாது. ஆனாலும் எந்த ஒரு ஜுவல்லரியுமே நாம் பாதுகாக்கும் முறையில்தான் இருக்கிறது. கலர் போகவே போகாது. அப்படியே இருக்கும்'' என்கிறார் உஷா.

தங்க நகைகளின் விலை ஏறிக்கொண்டே போவதாலும், ட்ரெண்டியாக ட்ரஸ் பண்ணும் மோகம் ஒரு பக்கம் பெண்களிடையே அதிகமாகி வருவதினாலும், பேப்பர் ஜுவல்லரிகளுக்கு மவுசு எகிறிவிட்டது.



உடையழகு... நடையழகு...!



பெப்பி... ப்ரெட்டி... பேப்பர் ஜூவல்லரி!

''பேப்பர் ஜுவல்லரியாக இருந்தாலும் கிறிஸ்டல், ஸ்டோன், குந்தன், போல்கி, ஸ்வரோஸ்கி, செமி-ப்ரெஷியஸ், ஸ்டோன், பீட்ஸ்... என பலவித வேலைப் பாடுகளுடன் கிடைக்கிறது. 'கஞ்சன் மாயா' என்ற பிராண்ட் நேம் எங்களுடையது.

ஜோதா அக்பரில் ஐஸ்வர்யா போட்ட நெக்லஸ், பேப்பர் ஜுவல்லரியில் தற்சமயம் ஹாட்! எங்களிடம் இருபது வயதிலிருந்து எழுபத்தைந்து வயதுள்ள பெண்மணிகள் வரை வருகிறார்கள். 45 ரூபாயிலிருந்து 45,000 ரூபாய் வரையில் பேப்பர் ஜுவல்லரி கிடைக்கும். சுமார் 80 பேர் எங்களிடம் பணி புரிகிறார்கள். மிகவும் கேர் எடுத்துச் செய்கிறோம். இட்ஸ் எ டீம் வொர்க்...'' என்கிறார். உஷாவின் இந்தக் கலைப் பணியில், அவருடைய சகோதர சகோதரிகளும் சமபங்கு வகிக்கிறார்கள்.

அலர்ஜி கொடுக்காத, வியர்வை வராத, கெமிக்கல்ஸ் கலக்காத, வாட்டர் ப்ரூஃப் + எக்கோ ஃப்ரண்ட்லியான ட்ரெண்டி பேப்பர் ஜுவல்லரி நகைகள், கேர்ள்ஸின் பெஸ்ட் ஃப்ரெண்ட்!

– லதா சேகர்

உணர்வுகள் வாடகைக்கு அல்ல!

''என் குடும்பத்தில் அனைவருக்கும் குழந்தை உண்டு. எனக்கு மட்டும் ஏன் இந்தச் சோதனை'' என்று சொல்லும் போதே பிரியாவுக்கு அழுகை வெடித்துக்கொண்டு வருகிறது.

ஜெர்மனி வாழ் தமிழரான பிரியாவுக்கு (இயற்பெயர் அல்ல) குழந்தை இல்லை. வயது ஐம்பது. மூன்று முறை கருத்தரித்து அபார்ஷன் ஆகிவிட்டது. ''செயற்கை முறையில் ''வாடகைத்தாய் மூலம் என் கணவரின் விந்து உபயோகிக்கப்படுத்தி குழந்தைப் பெற்றால் 50 சதவிகிதமாவது எங்களுடையது என்ற பிடிப்பு இருக்குமே என்பதால் இம் முயற்சிக்கு சம்மதித்தேன்'' என்கிறார்.

பிரியாவுக்காக குழந்தைப் பெற்றுத்தரப் போகும் பெண் கற்பகம் (இயற்பெயர் அல்ல). ''பணத்துக்காக மட்டும் இப்படி வாடகைக்கு என் கர்ப்பப்பையை உபயோகப்படுத்தலை. என்னால் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் நிறைவு உண்டாகும் என்கிற மகிழ்ச்சியும் தான் காரணம்'' என்கிறார்.

விஞ்ஞான முன்னேற்றத்தில் உண்மையில் இது வரம் மட்டுமேவா?

அந்நியரின் கருவைச் சுமந்து பணத்துக்காக பிள்ளை பெற்றுத்தரும் பெண்களின் (surrogate mothers) எண்ணிக்கை இன்று அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. ஆனால், இதில் மனித உரிமை, நன்நெறி என்று பல கோணங்களில் கேள்விகள் எழுகின்றன.

இந்தியாவை ஒரு மருத்துவ நலச் சுற்றுலா பிரதேசமாக ஊக்குவிக்கும் அரசாங்கம், இந்த வாடகைத்தாய் விஷயத்தில் அங்கீகாரம் அளிக்கிறது. அதிக அளவில் கட்டுப்பாடுகளும் இல்லாத நிலையில், வெளிநாட்டிலிருந்து குழந்தையில்லாத பல பெற்றோர்கள் குறைந்த ''விலையில்'' ''குழந்தை பெறும்'' வாய்ப்பைத் தேடி இந்தியாவை நோக்கி படையெடுத்து வருகிறார்கள். இந்நிலையில் இந்த வசதி அல்லது சேவை ஒரு வியாபாரமாகிவிடும் ஆபத்தும் உண்டு.

செயற்கை கர்ப்பத்தில் உடல் மற்றும் உள்ள ரீதியாக சந்திக்க நேரும் சிரமங்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளாமல், தங்களுக்கு அவற்றை எதிர்நோக்கும் சக்தி இருக்கிறதா என்று யோசிக்காமல் பல பெண்கள் வாடகைத்தாய் ஆகும் முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஏழ்மை, பணத் தேவை போன்ற பல காரணங்கள் இதற்கு.

தன் உள்ளே வளர்வது தன் குழந்தையல்ல, தன் உடல் வெறும் இயந்திரம் போல்தான் செயல்படுகிறது என்ற யதார்த்தத்தை மீறி, 9 மாதம் குழந்தையை வயிற்றில்

சுமக்கும் உணர்வு ரீதியான அனு பவத்தினால், இயற்கையான உடற்கூறு மாற்றங்களால் பாதிக்கப்பட்டு, பிரிவு தாங்காமல் வேதனைப்படும் பெண் கள் ஏராளம்.

அருணா ஸ்ரீனிவாசன்

சிறந்த ஒன்றை அல்லது இரண்டைத் தேர்வு செய்து பெண்ணின் கர்ப்பப்பைக் குள் In Vitro Fertilization (IVF) முறை மூலம் செலுத்துவார்கள். பாக்கி கருக்கள் (embryos) வீண்தான்! சில சமயம் இரு கருக்கள் உள்ளே செலுத்தும்போது, இரண்டுமே ஆரோக்கியமாக வளரும் நிலை யில், இரட்டைக் குழந்தை பிறக் கும் வாய்ப்பும் உள்ளது. ஒரு குழந்தையைச் சுமக்கத் தானே பணம் பேசப்பட்டது; இரண்டு குழந்தைக்கான பணம் எங்கே? என்பது போன்ற சிக்கல்கள் எழ வாய்ப்பு உள்ளது.

கருவை உள்ளே செலுத்திய பின்னரும் அது ஆரோக்கியமாக வளரும்



ஏழைப் பெண்களின் கர்ப்பப்பைகள் வாடகை இயந்திரங்களா?

என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இயற்கையின் மேல் பாரத்தை போட்டு விட்டு காத்திருக்க வேண்டியது தான். சில சமயம் ஓரிரண்டு முயற்சிகள் தோற்ற பின்னரே நிலையாக ஒரு கரு உள்ளே வளரும். இதுபோன்ற சந்தர்ப்பங் களில் வாடகைத்தாயாக இருக்க முன் வரும் பெண்ணுக்கு, உடல் ரீதியாகவும் மனதளவிலும் அயர்ச்சி ஏற்படுகிறது.

மேலும், ஆரோக்கியமான கருவை உள்ளே செலுத்திய பின்னரும், தாயின் கவனக்குறைவால் சுற்றுச்சூழலில் ஏதாவது பாதிப்பு நேரிட்டு, உள்ளே இருக்கும்

செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கும் மருத்துவ மனைகளில், அதற் கென முன் வரும் பெண்களுக்குத் தீவிர கவுன்செலிங் கொடுத்து மனதளவில் தயார் செய்ய வேண்டும்.

செயற்கை முறையில் கருவை வெளியே வளர்க்கும்போது ஒன்றுக்கும் மேற்பட்ட கருக்களை வளர்த்து அதில்



இயற்கையின் வழியில் நமது இயலாமைகளை யதார்த்தத்தைப் புரிஞ்சுக்கிட்டு போறதுதான் சரி. கொடுப்பவருக்கும் பெறுபவர்க்கு மான மனரீதியான சிக்கலைத் தான், இந்த வாடகைத்தாய் நிலவரம் உரு வாக்கும். வளர்ந்தபின் குழந்தை எதிர் கொள்ளும் பிரச்னையும், தேடலும் விநோத மாய் அமையக்கூடும். நமது கருணையாலும் சேவையாலும் தத்தெடுத்தலால், அனா தைக் குழந்தைகளின் விடுதிகளைக் காலி செய்வதுதான் உத்தமம்.

- கவிஞர் உமாஷக்தி

கருவுக்கு பாதிப்பு ஏற்படலாம். அப்படி பிறக்கும் குழந்தை உடல் கோளாறு களோடு பிறக்க நேரிடலாம். இவ்வாறு நேரும்போது, ''பெற்றோர்கள்'' அந்தக் குழந்தையை வேண்டாம் என்றுகூட சொல்லிவிடலாம். அப்போது அந்தப் பெண்ணின் நிலை என்ன?

சென்ற வருடம் ஒரு ஜப்பானிய தம்பதியர் குஜராத்தில் குழந்தைக்கு ''ஆர்டர்'' கொடுத்து விட்டு, பின்னர் தாங்கள் விவாகரத்து செய்ததால் வாடகைத்தாய் மூலமாகப் பிறந்த குழந்தையை வேண்டாம் என்று சொல்லிவிட்டனர்!



வாடகைத் தாயாக இருக்க முன்வரும் பெண்ணுக்கு, உடல் ரீதியாகவும் மனதளவிலும் அயர்ச்சி ஏற்படுகிறது

பணத்துக்காக, ஏழைப் பெண்களின் கர்ப்பப்பை கள் ''வாடகை' இயந்திரங் களாக மாறும் வியாபாரத் தைக் கட்டுப்படுத்த இந்திய அரசு ஒரு சட்ட மசோதா இயற்றி உள்ளது.

- வாடகைத் தாயின் வயது வரம்பு
- தோல்விய டையும் செயற்கை முயற்சியால் மனம் மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்படும் பெண்...
- பிரசவம் ஆவதற்குள் பெற் றோர்கள் இறக்க நேரிட்டாலோ அல்லது வேறு ஏதாவது கார ணத்தினால் குழந்தை வேண்டாம் என்று முடிவு செய்தாலோ, வாட கைத்தாய்க்கு எழும் பிரச்சனைகளைத் தீர்ப்பது எப்படி.
- விந்து வங்கிகளில் கருமுட்டைகளைச் சேமித்து வைக்க அனுமதியளிப்பது சரியல்ல என்கிற விவாதம்...

என பல கோணங்களில் சிந்தனைகள் இடம் பெற்று, விவாதங்கள் நடந்து வருகின்றன.

பிரசவம் ஆன அடுத்த நிமிடமே, குழந்தை அதன் பெற்றோர்களிடம் ஒப் படைக்கப்பட்டுவிடுகிறது. வாடகைத்தாய் அதற்கு பால் கொடுக்கவோ அல்லது பார்க்கவோ முடியாது. ''அவள் மனத்தில் குழந்தையின் நினைவு படிந்து ஏக்கம் வந்து விடக்கூடாது'' என்று செய்யும் செய லால், தாயின் மனம் திடீரென நொறுங்கி பேதலித்து விடவும் கூடும்.

குழந்தை வேண்டி உருகும் பிரியா போன் றோரின் சோகம் மருத் துவ முன்னேற்றத்தினால் நீங்குகிறது என்பதில் சந் தேகமேயில்லை. ஆனால் அதே சமயம், கற்பகம் போன்ற வாடகைத்தாய் களின் நலன்களும் பேணப்படுகிறதா என்று பார்த்துக்கொள்வது, அக்க றையுள்ள ஒரு சமூகத்தின் கடமை. ●

மக்கள்தொகை விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி நிகழ்த்தும் ஒரு சர்வதேச நிறுவனம், தமிழ்நாட்டில் ஓர் ஆய்வை நடத்தியது. எட்டாயிரம் இளைஞர்கள், இளம் பெண்கள் மத்தியில் நடத்தப்பட்ட அந்த ஆய்வு, மனைவியை கணவன் அடிப்பது சரியா? என்று கருத்து கேட்டது. 51 சதவிகிதம் இளைஞர்களும் 56 சதவிகிதம் இளம் பெண்களும் அச் செயல் சரியே என்று கருத்து கூறியுள்ளனர்!

கணவனுக்கு மனைவியை அடிக்கும் உரிமை உண்டு என்று பெண்கள் நம்பும் அவலம் ஏன் நீடிக்கிறது? விவாதிக்கிறார்கள் டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன், (பா.ஜ.க. தமிழக பொதுச் செயலாளர்), பேராசிரியர் பர்வீன் சுல்தானா:

தமிழிசை : நமது பெண்கள், சிறிய விஷயங்கள் உட்பட பலவற்றுக்கு, கணவர்களைச் சார்ந்திருப்பதால்தான், இப்படிப்பட்ட மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படுகிறது.

பர்வீன்: இந்தச் செய்தி எனக்குப் பயங்கரமான அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. அடிப்பது பெண்களின் சுயமரியாதையை இழக்கச் செய்யும் விஷயம். பள்ளிகளில் ஆசிரியர்களிடமிருந்து கம்புகளைப் பிடுங்கிவிட்ட காலம் இது. ஏனென்றால் மாணவ - மாணவிகளை அடிப்பது கற்றலை நிறுத்தும் வகையில் முடியும் ஆபத்துண்டு. இன்னமும் சொல்லப் போனால் காவல் துறையிடமிருந்தும் கம்புகளைப் பறிக்க வேண்டும்.

தமிழிசை : நான் அதிர்ச்சியடையவில்லை. ஒரு மருத்துவராக இருப்பதால் தினசரி நிறைய பெண்களைப் பார்த்து வருகிறேன். 20 - 25 சதவிகிதம் பெண்கள் கணவருக்கு, 'அடங்கி' நடக்க வேண்டும் என்ற மனப்பான்மையோடு இருக்கிறார்கள். அடுக்களைக்கு வெளியே பெண்கள் சென்றுவிடக் கூடாது என்பதில் ஆண்களும் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். இதற்கிடையில் அடிக்கிற கைதான் அணைக்கும் போன்ற பிற்போக்குத்தனமான பழமொழிகள் வேறு. போதாததற்கு, நமது திரைப்படங்கள் பெண்களை ஒரு படி கீழே இறக்கித்தான் மதிப்பீடுகளை வைக்கின்றன. 'நான் சம்பாதிக்கிறேன்' என்ற ஆணின் ஆணவம் மனைவியை அடிக்கச் செய்கிறது. இந்த நிலைமை மிக மெதுவாகத்தான் மாறி வருகிறது. எந்தக் காரணத்துக்காகவும் கணவன் மனைவியை அடிப்பதை ஒப்புக் கொள்ளவே முடியாது.

பர்வீன்: இங்கே இன்னோர் அவலமும் நடக்கிறது. சுயமாகச் சிந்தித்து சுதந்திரமாகச் செயல்பட நினைக்கும் பெண்கள் மேல் மிகச் சுலபமாக 'ஒழுக்கக் கேடு' என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விடுகிறது. தங்கள் உடலைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததால் பெண்கள் 'அடிமைத் தனமே' சரி என்ற உணர்வில் வாழ்கிறார்களோ என்ற கவலை எனக்கு இருக்கிறது. இந்தப்



★ தமிழிசை சௌந்தர்ராஜன்

அடிப்பதை ஏற்கும்

பெண்களுக்கு எதிரான வன்முறை

பிரச்னை உளவியல் ரீதியாக அணுகப்பட வேண்டும். ஆரம்பக் கல்வியே இருபாலருக்கும் சமத்துவம் அளிப்பதாக இருக்க வேண்டும்.

தமிழிசை: இது உளவியல் மட்டுமல்ல; உடலியல், சமூகவியல் சார்ந்த பிரச்னையும் கூட. ஒரு சராசரி உணர்வைக் கூட பெண்கள் வெளிப்படுத்த முடிவதில்லை.

பர்வீன்: வீட்டில் அடிவாங்காத குழந்தைகள் கிடையாது. ஆனால் ஆண்கள் அடிவாங்குவது ஒரு கட்டத்தில் நின்றுவிடும். பெண்களுக்கு அது தொடர்கிறது. தாயை அடிக்கும் மகன்கள் உண்டு. அது ஓர் இருட்டுப் பக்கம்!

தமிழிசை : பெண்ணியவாதிகள் நிறைய பேசுகிறார்கள்; போராடுகிறார்கள்! ஆனால், அதனால் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து விடுவதில்லை. அடிமட்ட அளவில் நிறைய வேலை செய்ய வேண்டும்.

பர்வீன் : ஆணும் பெண்ணும் சேர்ந்து யோசித்துச் செயல்பட்டால்தான் இது போன்ற அவலங்களைக் களைய முடியும்.

தமிழிசை: மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் அடிபடுகிறாள் என்று ஓர் ஆய்வு சொல்கிறது. 65 சதவிகிதம் பெண்களுக்கு, குடும்ப வன்முறைச் சட்டம் இருப்பதே தெரியவில்லை. உசிலம்பட்டியில் கடந்த ஒரு வருடத்தில் பிறந்த 600 பெண் குழந்தைகளுள் இப்போது வாழ்ந்துகொண்டிருப்பது 60 பேர்தான். அவர்களுக்கு ஆரோக்கியம், கல்வி, சுயமரியாதை மறுக்கப்படுகின்றன.

பர்வீன் : இந்த மறுப்புகளுக்குக் காரணம், ''பொட்டப் புள்ளை அடங்கிதான் போகணும்''னு காலம் காலமா நம் சமூகத்துக்கு இருக்கிற ஆண்டான் - அடிமை மனப் பான்மைதான்.

தமிழிசை : பெண்களின் விழிப்புணர்வுக்கு, பெண் தலைவர்களின் பங்களிப்பு என்னவென்று யோசிக்க வேண்டியிருக்கிறது. உயர் பதவிகளில் இரண்டு சதவிகிதம் பெண்களே இருக்கிறார்கள். பெண்களை இரண்டாம் தர குடிமக்களாகக் கருதும் நிலை மாறவேண்டும். பெண்களும் தங்கள் நியாயமான உரிமைகளைப் பெற கிளர்ந்து எழ வேண்டும். பெண் தலைவர்களும் தங்கள் கடமையிலிருந்து நழுவக் கூடாது.

பர்வீன்: கட்சிகள் கூட பெண்களை வாக்கு வங்கிகளாகத்தான் கருதுகின்றன! அடிப்படையாக சில கொள்கை மாற்றங்கள் வந்தாலொழிய எந்த மறுமலர்ச்சியும் வராது.

தமிழிகை : பெண்களுக்குத் தரப்படும் அரசியல் அதிகாரம் மாற்றங்களுக்கு வழி வகுக்கும்.

பர்வீன் : மதிப்பீடுகளை உருவாக்கும்



● பர்வீன் சுல்தானா

அவலம்!



நன்றி : இண்டியன் எக்ஸ்பிரஸ்

நடுத்தரக் குடும்பத்துப் பெண்களின் மனோபாவம் மாற வேண்டும். 'ஆண்மை, அடுப்படி என்ற இரு சொற்களும் தூக்கியெறியப்பட வேண்டியவை' என்று பெரியார் சொன்னார். கணவனை, குடும்பத்தின் தேவைகளை முதன்மைப்படுத்தும் முனைப்பில் தங்களை, தங்கள் தனித்தன்மையை, திறமைகளை, பெண்கள் இன்றைக்கும் அழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதை அவர்கள் நிறுத்தாதவரை ஆண்களும் அவர்களை அடிமைகளாகவே நடத்தக்கூடும். சுதந்திரமும், சுயமரியாதையும் பெண்களின் மதிப்பைக் கூட்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழிசை: பாரம்பரியமாக நமது மண்ணுக்கான வாழ்வியல் சூழலொன்று இருக்கிறது. அதைவிட்டு வெளியே வராமல் போராட வேண்டும். அன்பும் வேண்டும், புரட்சியும் வேண்டும். தங்கள் விழிப்புணர்வு குறித்து அவர்களுக்கே ஒரு பொறி தோன்ற வேண்டும்.


பர்வீன்: பொறுப்புகளை விட்டுவிட்டு சுயமரியாதை தன்மானத்தை பெண்கள் தேடவில்லை. அந்தப் பொறுப்புகளை முள்வேலியாக்கி பெண்களை முடக்குவது சமூகத்துக்கே கேடு. சுதந்திர உணர்வுள்ள பெண்களை எப்படி நடத்துவது என்று ஆண்களுக்குதான் பயிற்சி கொடுக்க வேண்டும்.

தமிழிசை: ஒரு பக்கம் விவாகரத்துகள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உரிமைகளுக்கு மதிப்பளித்து மகிழ்ச்சி ததும்பும் குடும்பத்தில், பெண்களுக்கு மரியாதையும், கௌரவமும் தானாக வந்து சேரும். வேதனை என்னவென்றால் உரிமை குறித்த தவறான புரிதல்கள்; அதனால் எழும் வாக்குவாதங்கள்; அதனால் வன்முறைகள்- இவை பெண்ணுரிமை என்பதையே ஏதோ கெட்டவார்த்தை என்பது போல் ஆக்கிவிடுகின்றன.

பர்வீன்: ''நாம் வன்முறையால் கையாளப்படலாம்; தவறில்லை'' என்று எண்ணும் அடிமையின் மோகம் வார்த்த வரலாற்றுப் பின்னணி, நமது பெண்கள் வாழ்வில் அமைந்திருப்பது ஒரு சமூக அவலமே. இந்த இழிவிலிருந்து மீள்வதற்கான சமூக அறிவியலும், அரசியல் தெளிவும் நமக்குத் தேவை. தன் இருப்பை சுயமரியாதையுடன் உணரும், விழிப்புணர்வும், சுதந்திரமும் கொண்ட தலைமுறையை வளர்த்தெடுப்பதன் மூலமே இதைச் சரி செய்ய முடியும்.

தொகுப்பு : **கௌசி**
படங்கள் : **ராஜன்**

விலை ரூ.55/-
கூரியரில் பெற ரூ.15/-
சேர்த்து அனுப்பவும்
(DD/MO மட்டும்)



படிக்க...

பாதுகாக்க...

பரிசளிக்க...

கல்கியில்
வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்
எழுதிய

'கண்ணனைத் தேடி...'

புத்தகமாகத் தயாராகிவிட்டது

◆ உங்கள் ஊரிலுள்ள கல்கி ஏஜெண்டிடமும் வாங்கலாம்

விவரங்களுக்கு :
ஜெயா ஸ்ரீனிவாசன், 'சந்தா பிரிவு',
பரதன் பப்ளிகேஷன்ஸ், கல்கி பில்டிங்ஸ், 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32. தொலைபேசி : 044 - 4343 8888



கல்கி



2009 நவம்பர் 22
விரோதி கார்த்திகை 6
மலர் : 68
இதழ் : 17


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி!

நீதிபதி தினகரனுக்கு உச்சநீதி மன்றத்துக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டுள்ளது என்பதே, அவர் பேரில் உள்ள குற்றச்சாட்டுகள் வலுவானவை என்பதை உறுதிப்படுத்துகின்றது. "இந்நிலையில் அவர் பதவியில் தொடரக்கூடாது; விசாரணை முடியும்வரை விலகி இருக்க வேண்டும்," என்று ஆணையிடுவதில் மத்திய அரசுக்கோ உச்சநீதிமன்றத்துக்கோ ஏன் தயக்கம் இருக்க வேண்டும்?! அத்தகைய ஆணை எதுவும் வராத நிலையில், அவருக்குச் சமூக, தொழில் ரீதியான எதிர்ப்புகள் கடுமையாகி அதிகரித்தும் வந்துள்ளன. தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் நீதிபதி தினகரனுக்கு எதிராகக் கிளர்ச்சி எனில், கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் அவருக்கு நேரடியாக எதிர்ப்பு தெரிவித்து, வழக்குரைஞர்களே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்துள்ளனர்!

தாமே பதவி விலக முன்வராத தினகரனின் ராஜினாமாவை, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கோரியிருப்பாரேயானால், அவரவரும் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்ளும் சூழல் உருவாகியிராது. சட்டத்துறையினரே சட்டம்-ஒழுங்கை மீறும் அவலம் நிகழ்ந்திருக்காது.

இதுபோன்ற நிகழ்வுகளை எதிர்பார்த்து, தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் தீர்க்கதரிசனம்தான் நல்ல ஆட்சிக்கு அடையாளம். ஆனால், அந்த தீர்க்கதரிசனத்துக்குத்தான் இங்கே மிகுதியான பஞ்சம்! மஹாராஷ்டிரா சட்டச்சபையில் புதிய அரசு





பதவியேற்ற தினத்திலேயே கலாட்டா, கைகலப்பு! பிரதேசப் பித்து பிடித்த மஹாராஷ்டிரா நவநிர்மாண் சேனா கட்சியினர், சமாஜ்வாதி கட்சி எம்.எல்.ஏ அபுஆஸ்மியைக் கண் மூடித்தனமாகத் தாக்கத் துணிந்தது கொடுமை. அவர் ஹிந்தியில் பதவிப் பிரமாணம் ஏற்பது சட்டத்துக்கு உட்பட்ட செயல்! அவ்வாறிருக்க, எம்.என்.எஸ். உறுப்பினர்கள் அதை ஆட்சேபித்ததுடன் அபு ஆஸ்மியைத் தாக்கியும் இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஒரு காரணம் அவர்களது தலைவர் ராஜ் தாக்கரே அவர்களுக்குப் பரிந்தூட்டும் பிரிவினை அரசியல் சித்தாந்தம். இன்னொரு காரணம், ராஜ் தாக்கரேயின் பகிரங்க வன்முறை அழைப்புகளைக் கண்டும் காணாமல் இருக்கும் காங்கிரஸின் அரசியல் சுயநலம். சிவசேனாவிலிருந்து பிளவுபட்டு உருவாகியிருக்கும் மஹாராஷ்டிரா நவ நிர்மாண் ஸேனாவை, காங்கிரஸ் தனது எதிரியின் எதிரியாகப் பார்த்து வந்திருக்கிறது. அதன் தலைவர் ராஜ் தாக்கரே, பிரிவினை அரசியல் என்ற பெயரில் வன்முறையை அவிழ்த்துவிட்டபோதுகூட, கடும் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்தது; அவரைக் கைது செய்ய அஞ்சியது. இப்போது சட்டசபையிலேயே வன்முறை வெறியைக் காட்டியிருக்கிறது அக்கட்சி! சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில உரிமைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை அத்துமீறி துஷ்பிரயோகம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்பட வேண்டும்.

நீதிபதி தினகரன் விவகாரமும் சரி, எம்.என்.எஸ். கட்சியின் வன்முறைத் தாக்குதலும் சரி, கர்நாடகத்தில் ரெட்டி சகோதரர்களின் மிரட்டலுக்கு பா.ஜ.க. பணிந்ததும் சரி... தலைமையிலிருப்பவர்கள் தார்மிக பலத்துடன் தைரியமாகச் செயல்பட இயலவில்லை என்பதையே காட்டுகின்றன. பல்வேறு பிரச்னைகளை முளையிலேயே கிள்ளி எறியும் துணிவின்றி வளரவிடுவதைக் காட்டிலும், நாட்டுக்குப் பேரபாயம் வேறில்லை.

நீயும் எனர்ஜெடிக் ஏஞ்சல்தான்...



உலக அளவில் பெண் களுக்கு இன்ஸ்டன்ட் எனர்ஜி கொடுக்கக் கூடிய டாப் உணவு வகைகள் என, மருத்துவ உலகம் பரிந் துரைக்கும் உணவுகளில் சில, உங்கள் பார்வைக்கு :

★ **யோ யோ யொகர்ட்:** அட நம்ம ஊரு தயிரு தாங்க அது... ச்சும்மா போகும் பொழுது, வரும் பொழுது, போரடிக்கும் பொழுதுன்னு, பொழுதுக் கும் தயிர ஸ்பூன் ஸ்பூனா சாப்பிட்டு வந்தீங்கன்னா போதும்; நம்ம உடம்புக்குத் தேவையான எல்லாமே சரிவிகிதச் சமானத்துல உங்களுக்கு ஈஸியார் கிடைச்சிடுமாம்.

★ தினம் 400 மில்லி லிட்டர் ஆரஞ்சு ஜூஸ் (வைட்டமின் சி) பருகுபவர்களுக்கு, மயக்கம் என்பதோ, சோர்வு என்பதோ இருக்கவே இருக்காது என கண்டறியப்பட்டுள்ள தாம்.

★ **சோயா :** சோயால இருக்குற omega 3 fatty acid உங்களைச் சும்மா சூப்பர் எனர்ஜெடிக்கா வைக்குமாம்.

இந்த டிப்ஸை ஃபாலோ பண்ணா, அட, நீங்களும் எனர்ஜெடிக் தேவதைதான்!

– என்.எஸ்.

மூங்கில் காடுகள்



● விகடகவி

கோலிவுட்டுக்குள் நுழை யும் தகுதியாக மாறியிருக்கிறது குறும்பட இயக்கம். அந்த வரிசையில் ஊனம் என்பது உடலில் இல்லை. அது உள்ளத்தின் வெளிப்பாடு என்பதைச் சொல்லும் குறும்படம் 'மூங்கில் காடுகள்'. இதை இயக்கி உள்ள விகடகவி, ஆர்.செல்வ ராஜிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.

- ஆகாஷ்



'மூங்கில் காடுகள்' குறும்படத்தில்...





போற வழியிலெ...







இதெல்லாம் எங்க நடக்குது... தெரியுமா...?

"ஏம்பா...ஏம்பா இறங்குப்பா..." எனப் பெரும் கூச்சல்; 'ஒய்ய்...'ன்னு பெண் போலீஸ் அதட்டல்.. தெரியாத்தனமா ட்ரெயின்ல ஏறிட்ட ஒரு காலேஜ் ஸ்டுடன்ட், பேந்தப் பேந்த விழித்தபடி தலைகுனிந்து கீழிறங்குகிறார். அப்புறம்தான் தெரியுது அது லேடீஸ் ஸ்பெஷல் ட்ரெயினுன்னு.

''பின்ன என்னங்க, வீட்ல அரக்கப் பரக்க எழுந்து எல்லா வேலைகளையும் செஞ்சுட்டு, செய்ய வெச்சுட்டு தினமும் ஓட்டமும் நடையுமா இந்த ரயில் நிலையத்துக்குள்ள நுழையறோம். இங்க பார்த்தீங்கன்னா இவ்வளவு பெரிய ட்ரெயின்ல லேடீஸுக்கு மூணே மூணு கம்பார்ட்மென்ட். அதுல கதவோரம் உட்கார்ந்தபடி மற்ற பெண்களுக்கு நிற்கக் கூட இடம் தராமல் கறாராகக் கதை பேசும் கண்ணம்மாக்கள்; சும்மாவேனும் எல்லாரையும் இடித்துத் தள்ளும் இடி ராணிகள்; இவங்களை ஒரு வழியாகச் சமாளித்து நிஜமாவே





வியர்வை மழை சிந்தி நாங்க ஆஃபீஸ் போய்ச் சேர்றதுக்குள்ள... யப்பாடான்னு ஆயிடும். இந்த லேடீஸ் ஸ்பெஷல் ட்ரெயினை எடுத்துக்குங்க.. எல்லாமே ஸ்பெஷல்தான் எவ்வளவு காலியா இருக்கு பாருங்க கம்பார்ட் மென்ட்ஸ்..ஜாலியா பேசலாம், பாடலாம், ஆடலாம், ஹாயா எல்லாருக்கும் ஹாய் சொல்லிக் கிட்டே freshஆ ஆஃபீஸ் போய் சேரலாம்'' என தாம் தினம் பயணிக்கும் லேடீஸ் ஸ்பெஷல் ட்ரெயினுக்குப் புகழுரை வாசிக் கிறார் ராஜலட்சுமி.

''இந்த பாயிண்டை விட்டுட் டீங்களே.. கூட்டத்திலிருந்து எப்படிப்பட்ட எஸ்கேப் தினம் நமக்குக் கிடைக்குது. அது மட் டுமா ஜேஜேன்னு கூட்டமா ஆம்பிளைங்க காத்துக்கிட்டு இருப்பாங்க. நாங்க ஜாலியா போறோம். இப்போ, அவங் களைப் பாக்க பாவமா இருக்கு...'' என்கிறார் தீபா சிலிர்ப்போடு.



பன்னிரண்டு பெட்டிகள் கொண்ட இந்த லேடீஸ் ஸ்பெஷலில் அடுத்த கம்பார்ட்மென்டில் என்ன நடக்குது என நாம் எட்டிப் பார்க்க, அங்கே கை கொட்டி 'வா வா' என அழைத்தது பக்தி மணம்! சரி என்று, பக்தி மழையிலும் கொஞ்சம் நனையச் சென்றோம்.

நிம்மதியான ஸ்லோக புத்தகங்கள் வாசிப்பு தொடங்கி, ஹிண்டு பேப்பரோடு தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பவர்களும் சரி; 'நேற்று அந்த சீரியல்ல பச்சைப் புடைவைக்கு சிவப்பு ஜாக்கெட் போட்டுண்டு வந்தாங்களே கதாநாயகி, அது என்ன காம்பினேஷனோ தெரியலியே'' என துணியைப் பற்றிய துணிவான அலசல்கள், 'தோனிய நம்பித்தான் நம்ம இந்திய கிரிக்கெட் தோணியே(படகே) போய்க் கிட்டு இருக்கு.. அவரே இப்படி கவுத் துட்டாரே' என கிரிக்கெட் விமர்சனங் கள், க்ளோபல் வார்மிங்கைப் பற்றிய வார்னிங்குகள், காலேஜ் பெண்களின் லேட்டஸ்ட் சாய்ஸ் மசகனியா, கத களியா என்ற சாயலில் சுவாரஸ்யமான பேச்சுக்கள், தலையில் சீப்போடும், கையில் பவுடர் அப்ப பஃபோடும் சிங் காரித்து கொள்ளும் பெண்கள்..என ஜாலிலோ ஜிம்கானா இசைத்தபடியே, அல்லி தர்பாராய்ச் செல்கிறது இந்த லேடீஸ் ஸ்பெஷல் ரயில்...

ரயில்வே ஸ்டேஷனில் காத்துக்கிட்டு இருக்கும் ஆம்பிளைங்களைப் பார்க்கும்போது பாவமா இருக்கும்!



செய்திச் சித்திரம்: **நளினி சம்பத்குமார்**

தெரியாமத்தான் கேட்கறேன்

சுருளிப்பட்டி தைலா



''கோட்டை கொத்தளம் இனி கழகத்தின் பக்கம்; யானை சேனை இனி புரட்சித்தலைவியின் பக்கம்!''

- அ.தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வைகைச் செல்வன்

யானைங்களுக்குத் தீனி போட கழகத்துல ஒரு தனி பாசறை உருவாகுமா..?

காமன்வெல்த் போட்டிக்கு ஒதுக்கிய தொகையை, ரூ 767 கோடியிலிருந்து, ரூ 1,620 கோடியாக உயர்த்தியது அரசு.

இதெல்லாம் ரொம்ப காமன்தானே?

''இந்திய ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தினர் ஊட்டச்சத்துக் குறைவினால் அவதிப்படுகின்றனர்.''

- ஷரத் பவார்

அதனாலென்ன? அவங்களோட வோட்டுச் சத்துக்குக் காசு கொடுத்து வாங்கிடமாட்டீங்களா?

சென்னையில் தொடர் மழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு.

பாதிப்பே இயல்பு என்று ஆகிவிட்ட பிறகு, பாதிப்பே இல்லாட்டாத்தானே கவலைப்படணும்?

''உலகச் செம்மொழி மாநாட்டுக்கு ஆன்மிகப் பெரியோர்களை அழைக்க வேண்டும்.''

-ராம. கோபாலன்

அவங்களையெல்லாம் தண்டிக்கறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?

''கள்ளுக்கு அனுமதி கொடுக்காவிட்டால் பிராந்தி, விஸ்கி தயாரித்து விற்போம்!''

- தமிழ்நாடு கள் இயக்கம்

ரொட்டி இல்லாட்டி கேக் சாப்பிடட்டும்னு ஒரு ராணி சொன்னாங்களாமே, அது மாதிரியா?

ரேஷன் கடையில் பருப்பு விலை திடீர் உயர்வு!

கம்மி விலை பருப்பு எவ்வளவு நாளைக்கு வேகும்?

நல்லான் தமிழ்

மல்லிகா இந்தத் தகவலை சொல்லியிருக்க வேண்டியதில்லையென்றே மலர்விழிக்கு தோன்றியது. சட்டென்று ஒரு கணம் எல்லாப் பகைமையும் மறந்து ஒரு கனிவு ஏற்பட்டது. மலர்விழி அந்தக் கணத்தை வெறுத்தாள்.

அப்படியொரு உணர்வு ஏற்பட்ட போதே, தன் மீதும் மலர்விழிக்கு வெறுப்பு தோன்றியது. மல்லிகா மலர்விழிக்கு ஏற்படும் மாற்றங்களை உள்ளூற ரசித்தபடி இருப்பதும், அவளுக்கு அவமானத்தை ஏற்படுத்தியது.

''நீ இதைச் சொன்னா டென்ஷனாயிடுவேன்னு எனக்குத் தெரியும். அதான் ஃபோன்ல சொல்லாமே நேர்ல வந்து சொன்னேன்.''

''இப்ப எப்படி இருக்கான்?''

''நார்மல். பயப்படும்படி எதுவும் இல்ல...''

''ஐ.சி.யூ.ல சேர்த்திருக்குன்னு சொன்னே...'' மலர்விழியால் எதையும் முழுமையாகக் கேட்க முடியவில்லை. உள்ளூற ஒரு தயக்கம் இருந்தது.

''மிட் நைட்ல கொண்டு போனதால நேரா ஐ.சி.யூக்கு கொண்டு போயிட்டாங்க. பாலா, மது, ஜோதி எல்லாரும் கூட இருந்திருக்காங்க. கொஞ்ச நேரம் ஆக்ஸிஜன் வச்சுட்டு அப்புறமா எடுத்துட்டாங்களாம். மறுநாள் காலைல ரொம்பத் தெளிவா இட்லி வாங்கி சாப்பிட்டானாம். நீ டென்ஷனாகற அளவு எதுவும் இல்ல... இன்னும் ரெண்டு நாள்ல டிஸ்சார்ஜ் ஆயிடுவாங்க... என்றாள் மல்லிகா.

கதிர் தாங்க மாட்டான். சின்ன வலி கூட தாங்க மாட்டான். மலர்விழி இதை வாய்விட்டே சொல்லியிருக்க வேண்டும். 'என்ன' என்று கேட்டாள் மல்லிகா.

ஒண்ணுமில்லை என்பதாய் தலையசைத்து மௌனமாக இருந்தாள் மல்லிகா. தன் பலவீனத்தை மறைக்க முடியாத இயலாமை அவள் முகத்தில் இருந்தது.

மீண்டும் மல்லிகாதான் பேச்சைத் தொடங்கினாள்.

''இதை உங்கிட்ட மறைக்கக் கூடாதுன்னு தோணிச்சு. ஒரு தகவலாத்தான் இதைச் சொன்னேன். ஃபஸ்ட் அட்டாக்தான். பயப்பட வேண்டியதில்லை...'' என்றதும், மலர்விழி.

''சிகரெட்டை கொஞ்சம் குறைச்சுக்கணும்... டென்ஷனாகக் கூடாது'' என்றாள்.

மல்லிகாவுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. மலர்விழி எல்லாத் தடைகளையும் மீறி கதிரைப் பற்றி சரளமாக பேசத்



தொடங்கி இருந்தாள். 'இனி அவன் மூஞ்சிலயே முழிக்க மாட்டேன்' என்று சொன்ன தெல்லாம் காணாமல் போய்விட்டது.

''கூட யார் இருக்கா...''


''ஜோதிதான் இருக்கா...''

ஜோதி-

மலர்விழி வாழ்வில் வந்த மாயக்காற்று. அவள் வந்த பின் கதிர் மொத்தமாக மாறிப்போனான். அதில் ஏற்பட்ட இடைவெளி, தொலைதூரத்தில் தூக்கியடித்தது மலர்விழியை...

''அவனுக்கு சின்ன ப்ராப்ளம்னாலும் மனசு தாங்க மாட்டேங்குது...''

மல்லிகா எழுந்து கொண்டாள். மலர்விழி கதிரைப் பற்றி பேசத் துவங்கினாள். அந்த பேச்சு இரண்டு மூன்று மணி நேரம் கூட நீடிக்கும். மல்லிகாவுக்கு, மலர் விழிக்கும் கதிருக்கும் உள்ள காதலின் அழுத்தம் தெரியும் என்பதால் குறுக்கே



மாயக்காற்று

(ஒன்லி நூறு மீட்டர்)

எதுவும் பேச இயலாதவளாய் இருப்பாள். மலர் விழியைச் சந்திக்க வரும் பல பொழுதுகள் கதிரைப் பற்றிய பேச்சில் கழிந்திருக்கின்றன.

மிக சமீபகாலமாய் அவர்களுக்கிடையே இது மாதிரியான பேச்சு இல்லாமல் இருந்தது. காரணம் மலர்விழிக்கும், கதிருக்குமிடையே எழுந்த சண்டை.

கதிரின் புதிய ஸ்நேகிதம், மலர்விழியால் தாங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது. கதிரின் தன்னிலை விளக்கம் அவளை சமாதானப்படுத்தவில்லை. அதீத அன்பு, கோபமாய் மாற சண்டை பெரிதானது.

அவ்வளவுதான்; அதன்பின் மலர்விழி ஒரு போதும் கதிரைப் பற்றிப் பேசியதில்லை. அன்றிலிருந்து அவளது உற்சாகம் தொலைந்து போயிருந்தது.

மல்லிகா எழுந்து நின்றபோது மலர்விழி கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். ''நான் கிளம்பறேன்'' என்ற போதும் மலர்விழி எந்த பதிலும் சொல்லவில்லை.

மல்லிகா இன்னும் சற்று நேரம் இருந்திருந்தால் ஆறுதலாக இருக்கும் என்று மலர்விழிக்குத்

தோன்றியது.

''ஹாஸ்பிடல் இங்க இருந்து ஒரு நூறு மீட்டர்தான் இருக்கும் இல்ல...'' என்றாள் மலர்விழி.

''ம்...''

''நூறு மீட்டர் பக்கத்தில் அவன் ஹாஸ் பிடல்ல படுத்துக் கிடக்கறான். போய்ப் பார்க்க முடியாம இருக்கேன் பார்...சே...''

மல்லிகா சிரித்தாள். 'பேசாம படுத்துத் தூங்கு... கதிருக்கு ஒண்ணுமில்ல... நல்லா யிருக்கு...'' என்றபடி மலர்விழியின் பதிலுக்குக் காத்திராமல் வெளியேறினாள்.

''யாருக்கு உடம்பு சரியில்லைன்னா எனக்கென்ன?'' என தனக்குள் சொல்லிய படி எழுந்து கொண்டாள் மலர்விழி. அவள் வார்த்தைகளின் போலித்தனம் அவளுக்கே அன்னியமாக இருந்தது.

நெகிழ்வான ஏதேனும் ஒரு சந்தர்ப் பத்தில் கதிர் ''நீ எனக்கு அம்மா மாதிரி இருக்கே...'' என்பான். அந்த வார்த்தையில் கிறங்கிப் போவாள் மலர்விழி. அதுதான் இத்தனை விளைவுகளுக்கும் காரணி. தன்னை அவனது தாயாய் கற்பிதம் செய்து கொண்டு கண்டித்ததன் விலைதான் இந்தப் பிரிவு. எல்லாம் பழங்கதை!

மலர்விழி எழுந்து முகம் கழுவிக் கொண்டாள். மலர்விழி இருக்கும் தெருவி லிருந்து இரண்டாவது தெருவில்தான் 100 மீட்டர் தொலைவில் அந்த மருத்துவமனை இருந்தது. ஒரு சின்ன வாக் போவது போல மருத்துமவனை அருகே சென்றாள்.

உள்ளே சென்று பார்க்கலாமா..? ஒரு வேளை மல்லிகா சொல்வது பொய்யாகக் கூட இருக்கலாம். கதிருக்கு சீரியஸ் என் றால் நான் தாங்க மாட்டேன் என்று பயப்பட எதுவுமில்லை என்று சொல்லி யிருக்கலாம்.

'பைத்தியக்காரா... பைத்தியக்காரா... எல்லாம் தெரிந்து கொண்டே, அழகான காதலை ஒதுக்கி வெச்சிருக்கான்.' மலர்விழி தனக்குள் அவன் மீது முற்றாத திட்டுக்களைக் கொட்டினாள்.

மருத்துவமனையின் இரும்பு கேட் அச்சுறுத்துவதாக இருந்தது. இடப்புறம் ஒரு ஆம்புலன்ஸும், வலதுபுறம் ஒரு டாடா சுமோவும் நின்று கொண்டிருந் தது.

மனம் முழுக்க பயமும், பிரார்த்தனை யும் சமமாக நிறைந்திருந்தன.

ஹாஸ்பிடலுக்குள் நுழையாமல் வீடு திரும்பியபோது அங்கு மல்லிகா காத்தி ருந்தாள். மலர்விழிக்கு அது ஆச்சர்யமான தாக இருந்தது. மீண்டும் ஒரு முறை மல்லிகா வீட்டுக்கு வருவாள் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

பைத்தியக்காரா...பைத்தியக்காரா... எல்லாம் தெரிந்து கொண்டே, அழகான காதலை ஒதுக்கி வெச்சிருக்கான்.



''நாளைக்குக் காலைல டிஸ்சார்ஜ்'' மலர்விழியை மிக அதிக தவிப்புக்கு உள்ளாக்காமல் மல்லிகாவே பேசத் துவங்கினாள்.

...ம்...

''எங்க போயிருந்த...?''

''சும்மா... ஒரு வாக்...''

''ஹாஸ்பிட்டல் வரைக்குமா...?'' மல்லிகா கேலியாய் இதைக் கேட்கவும், உடைந்து அழுதாள் மலர்விழி.

''முடியலை மல்லிகா... ரொம்பப் பயமா இருக்கு. யார் மேலயும் இல்ல... என் மேலயே எனக்குப் பயமா இருக்கு. நான் அன்பு செலுத்தற யாரையாவது

இழந்துட்டேன்னா, அதை என்னால தாங்கிக்க முடியுமான்னு எனக்குத் தெரியல...''

''நீ மாறணும். இப்படியே இருந்தியன்னா... இந்த கழிவிரக்கமே உன்னை



அழிச்சிடும்.''

மலர்விழி மௌனமாக இருந்தாள். மல்லிகா சொல்வது சரிதான். தான் அன்பு செலுத்துகிறவர்கள் தன்னை ஒரு விதத்தில் அடக்கி ஆள்கிறார்கள். இதுவே தன்னை செயலிழக்க வைக்கிறது என்பதை மலர்விழியும் உணர்ந்தவளாகவே இருந்தாள்.

அதன்பின் மல்லிகா பேசிக் கொண்டிருந்த அந்த அரைமணி நேரப் பேச்சு வார்த்தையும், மலர்விழியை ஆறுதல் படுத்துவதாக இருந்தது. குறிப்பாக கதிருக்கு எதுவுமில்லை. நல்ல விதமாக இருக்கிறான் என்று திரும்பத் திரும்ப மல்லிகா குறிப்பிட்டது ஒரு தெளிவை ஏற்படுத்தியது.

மல்லிகா புறப்பட்டபோது மலர்விழி தவிர்க்க முடியாமல் ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''நான் அவனைப் பார்க்க முடியுமா?''

''இந்த கேள்வியில ஏதாவது அர்த்தம் இருக்கா...'' மல்லிகாவின் எதிர்கேள்விக்கு மலர்விழியால் பதில் சொல்ல இயலவில்லை

இரவு முழுக்க மலர்விழிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. காலையில் தாமதமாகத்தான் எழுந்தாள். குளித்து வெளியே புறப்படும்போது மணி பன்னிரெண்டு ஆகி இருந்தது.

நேராக மருத்துவமனை சென்று ''இங்க கதிர்ன்னு ஒருத்தரை அட்மிட் பண்ணி இருந்தாங்களே. அவர் எந்த ரூம்ல இருக்கார்ங்க?'' என்றாள்.

''அவங்க இப்பதானே டிஸ்சார்ஜ் ஆகிப் போனாங்க...'' என்றாள் ரிசப்ஷன் பெண்.

திருப்தியாகி வெளியேறினாள் மலர்விழி.

டிஸ்சார்ஜ் ஆகி இருக்கக் கூடும் என யூகித்து வேண்டுமென்றே காலதாமதமாய் வந்து கேட்ட கேள்வி அது என்பதை உணர்ந்திருந்தாலும், ''இந்தக் கேள்விக்கும் ஹாஸ்பிடல் விஜயத்துக்கும் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா..''

புரியாமலே தனக்குள் கேட்டுக் கொண்டாள் மலர்விழி.

●



'பொது இடத்தில் புகை பிடிக்கிறாயா, எடு அபராதத் தொகையை. இல்லையா... முடியாதா... நட போலீஸ் ஸ்டேஷனுக்கு' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகிறார்.

''தடை செய்யப்பட்ட சிகரெட்டுகள், பான்பராக், பிளாஸ்டிக் பொருட்களை விற்கிறாயா? கட்டு கல்லாவை. இல்லையா இழுத்து மூடு கடையை.

கல் வெச்சு மாம்பழம் பழுக்க வைக்கறியா? மெழுகை பூசி ஷோ காட்டி ஆப்பிள் விற்கிறியா... டன் டன்னாகக் கொட்டு குளத்தில்.''

மருத்துவக் கழிவுகளா? கமர்ஷியல் குப்பைகளா? பொது சாக்கடையில் பொது இடங்களில் வீசுகிறார்களா...? அவர்கள் கொட்டும்போதே அவர்களுக்குத் தெரியாமல் புகைப்படம் எடுத்து, அதைக் காட்டி ஃபைன் கட்ட வைக்கிறார்.'' தில்லா இதெல்லாம் செய்யறது ஆம்பிளை இல்ல... ஒரு பெண்! ஆமாங்க...

பல மருத்துவர்களுக்கு - நர்ஸிங் ஹோம்களுக்கு, டாக்டர் சுமதின்னாலே சிம்ம சொப்பனம்தான். எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் மீண்டும் மீண்டும் செய்பவர்களது உரிமங்களை ரத்து செய்ய அதிரடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார்.

புகையிலை, புகையற்ற நகரமாக சுத்தமான, ஆரோக்கியமான நகரமாக கோவையைக் கொண்டு வர, தனக்குக் கீழ் பணி செய்யும் நான்காயிரத்துக்கும் அதிகமான ஊழியர்களை, ரிமோட் கன்ட்ரோலாக, பரபரப்பாக இயக்குகிறார் இவர்.

நிறைய இடத்தில் இவரை கேரோ செய்வார்களாம். நடப்பது நடக்கட்டும் என்று காவல் துறை அதிகாரிகள் வரும் வரை அங்கேயே தைரியமாக நின்று விடுவாராம்.

தப்பு செய்பவர்கள் எத்தனை பேரானாலும் ஒத்தையா நின்னு சமாளிக்கும் இவர், ஆளும் கட்சி கவுன்சிலர்கள், சேர்மன்கள் என நிறையப் பேர்களின் கடுப்பைச் சுமந்து கொண்டு சுற்றுகிறார்.

''எனக்குப் பின்புலமாக, பக்கபலமாக இருப்பது மாநகராட்சி கமிஷனரும், மேயரும்தான். அவர்களது ஊக்குவிப்புத்தான் எனக்குப் பெரிய பூஸ்ட்'' என்கிறார்.

கோவையில் பிரபல மருத்துவமனை பன்றிக் காய்ச்சல் பாதித்த ஒருவரை, கார்ப்பரேஷன், அரசு பொது மருத்துவமனை என யாருக்கும் தெரிவிக்காமல் மறைத்து வைத்து சிகிச்சை தருவதைக் கண்டுபிடித்து விட்டார்.

அப்புறம் அந்த மருத்துவமனை போய் எம்.டி.யுடன் பெரிய அளவில் தகராறு செய்து, கடைசியில் மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் அளவுக்குப் போனது.

மாநகராட்சி பெண்கள் பள்ளியில் நாப்கின் மெஷின்கள் வைத்து மாணவிகளுக்கு, பீரியட்ஸின் போது ஹைஜீனிக்



அதிகாரம் இல்லேன்னா அம்பேல் தான்!

காக இருப்பது எவ்வளவு அவசியம் என்பதை வலி யுறுத்தி வருகிறார். ''பெண்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவ சியம். கைப்பற்றிய அதிகாரத்தை நெஞ்சுரத் தோடு செயல்படுத்துவது மிக மிக அவ சியம். பெண் இனத்தின் முன்னேற்றத் துக்கு, பெண் அதிக ஆசைப்படணும். அதிகாரம் இல்லேன்னா அம்பேல்தான்.

அதிகாரம் கையில் இருப்பதால் மட்டும் நான் இதைச் செய்யவில்லை. சாதாரணப் பெண்ணாக இருந்தாலும் உரிய அதிகாரியிடம் முறையான புகார்களைக் கொடுத்து பெண்களின் பிரதிநிதியாய் போராடித்தான் இருப்பேன். சுகாதாரம், ஆரோக்கியம் என்ற விஷயங் களில் ஒரு சங்கிலித் தொடர் மாதிரி எல்லோருக்கும் பொறுப்பு இருக் கிறது. பொறுப்புக்களை தட்டிக் கழிப்பது கோழைத்தனமில்லையா?'' என்று கேட் கிறார் டாக்டர் சுமதி. போராட்டங்கள், சிறைவாசம் என நிறைய அனுபவங்கள் இவருக்கு உண்டு.

''எனக்குத் தரப்பட்டுள்ள அதிகாரத் தைச் செயல்படுத்தக்கூட நான் நிறையப் போராடத்தான் வேண்டி இருக்கிறது. இருந்தாலும் நல்லது செய்ய எதற்கும் துணிந்து நிற்பேன்'' என்கிறார் இந்த நகர நல அலுவலர்.

செய்திச் சித்திரம் : **ஆர்.பாலா**



கோடா(னு)



வருமான வரித்துறையினர் நவம்பர் முதல் தேதி ராஞ்சி, டெல்லி, ஜாம்ஷெட்பூர், நாசிக், லக்னோ, சாய்பாசா, கொல்கத்தா, மும்பை என்று மொத்தம் எட்டு ஊர்களில் அதிரடியாக சோதனை நடத்தினார்கள். வருமான வரித்துறையின் வரலாற்றில் இது போன்ற மெகா ரெய்டுகள் மிகச் சிலதான். இந்த சோதனையில் சட்டத்துக்குப் புறம்பாகச் சேர்த்து வைத்திருக்கும் சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஆவணங்கள் சிக்கி இருப்பதாக வருமான வரித்துறை கூறி இருக்கிறது. இந்தச் சொத்துக்கு சொந்தக்காரர் மது கோடா. செப்டெம்பர் 2006 முதல் ஆகஸ்ட் 2008 வரை ஜார்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். இப்போது பாராளுமன்ற உறுப்பினர். மும்பையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம், மது கோடா பல அயல்நாடுகளிலும் ஓட்டல்களிலும், இதர வகைகளிலும் முதலீடு செய்திருப்பது அம்பலமாகி இருக்கிறது. இவரது சொத்தின் மதிப்பு, ஜார்கண்ட் மாநிலத்தின் வருடாந்திர பட்ஜெட்டில் ஐந்தில் ஒரு பங்கு என்று சொல்லி மலைக்க வைக்கிறது மீடியா.

சுமார் 400 கோடி ரூபாய் அளவுக்கு ஹவாலா உட்பட பலவிதங்களில் அயல் நாடுகளுக்கு பணம் அனுப்பப்பட்டிருக்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும், சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மும்பையிலுள்ள மூன்று கம்பெனிகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஜார்கண்ட் மாநில லஞ்ச ஒழிப்புத் துறை, வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக வழக்கு தொடர்ந்துள்ளது. தவிர, ருஷ்யத் தரகர் ஒருவர் மூலமாக ஆப்ரிக்க நாடான லிபெரியாவில் 1.7 மில்லியன் டாலர் (ரூ.8.5 கோடி) விலையில் நிலக்கரிச் சுரங்கம் வாங்கியது குறித்த அமலாக்கப்பிரிவினரின் வழக்கு இன்னொரு பக்கம். இந்நிலையில் கோடாவின் 70 வங்கிக் கணக்குகளும், லாக்கர்களும் முடக்கப்பட்டுள்ளன.

போலீஸ் எந்த நேரமும் கைது செய்யும் என்ற சூழ்நிலை ஏற்பட்டவுடன், மது கோடாவுக்கு திடீரென்று நெஞ்சு வலி. உடனே மருத்துவமனையில் அட்மிட் ஆகிவிட்டார். இரண்டு வாரங்களுக்கு முன்பு கோடாவுக்கு நிஜமாகவே வயிற்றில் ஒரு ஆபரேஷன் நடந்தது. ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் தங்கி இருந்துவிட்டு வீடு திரும்பினார். இப்போது ரெய்டால் நெஞ்சுவலி! டிஸ்சார்ஜ் ஆன கையோடு 'நான் எந்தத் தவறும் செய்யவில்லை' என்றும் சொல்லியிருக்கிறார். விசாரணை தொடரவிருக்

கிறது.

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் மது கோடா. மாணவர் இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு பா.ஜ.க.வின் இளைஞ ரணியில் சேர்ந்து, பாபுலால் மராண்டியின் ஆதரவில் எம்.எல்.ஏ. சீட் பெற்று, 1999ல் ஜகன்னாத்பூர் தொகுதியில் போட்டி யிட்டு வென்றார்.

அவர் முதல்வர் நாற்காலி யைப் பிடித்த கதை கூட சுவாரசியமானதுதான். 1999ல் கோடா ஜெயித்த ஜகன்னாத்பூர் தொகுதியில், 2006ல் போட்டியிட பா.ஜ.க. அவருக்கு டிக்கெட் கொடுக்க வில்லை. ஆனாலும் அதே தொகுதி யில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பத்தாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் ஜெயித் தார் கோடா.

அந்தத் தேர்தலில் மொத்த இடங் களான 81ல், பா.ஜ.க.வுக்கு 36 இடங் கள்தான் கிடைத்தன. எனவே மது கோடாவுக்கு சுரங்கத்துறை மந்திரி பதவி கொடுத்து, அவரது ஆதர வைப் பெற்றார் அன்றைய பா.ஜ.க. முதல்வர் அர்ஜுன் முண்டா. அமைச்சரவையில்

கோடிகள்!

இருந்தபோதே, ''மாநில அமைச்சர் ஒருவர், முதல மைச்சரிடம் கூடத் தெரி விக்காமல் அயல் நாட்டுப் பயணங்கள் மேற்கொள்வது தவறு'' என்று கோடா பற்றிக் குறிப்பிட்டார் முண்டா. ஆனாலும் முண்டா அரசைக் கவிழ்த்துவிட்டு, காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், சிபு சோரன் கட்சி மற்றும் சுயேச்சைகளின் ஆதரவுடன், சுயேச்சை எம்.எல்.ஏ.வான கோடா ஜார்கண்ட் முதலமைச்சர் ஆனார்.

இப்போது அவரின் தங்க நகைகளின் மதிப்பு இரண்டு கோடி! ரொக்கம் சுமார் இரண்டே முக்கால் கோடி! ஆனால், 2005ஆம் வருடம், தேர்தல் கமிஷனுக்கு மது கோடா அளித்த தகவலின்படி, அவருடைய சொத்து மதிப்பு வெறும் 12 லட்சம்தான்!

- எஸ்.சந்திரமௌலி



மிஸ்டர் & மிஸஸ் மேல்மாடி

சீக்ரெட் ஆஃப் ப்ரெய்ன்

என்னுடைய நீண்ட நாள் பேஷண்ட் ராகவன். ரிடையர்டு கணக்கு டீச்சர். வெளியூர் சென்று பேரன் பேத்திகளிடம் கழித்துவிட்டு ரொம்ப நாளைக்கப்புறம் என்னிடம் வந்திருந்தார்.

''என்ன ராகவன் எப்படி இருக்கீங்க? பேரக் குழந்தைகளுடன் இருந்ததில் வியாதியின் தீவிரமும் தெரிந்திருக்காதே?'' என்றேன்.

''ஆமாம் டாக்டர் நிஜம்தான்'' என்று கூறி விட்டு, ''எனக்கு ஒரு சந்தேகம்'' என்று ஆரம்பித்தார்.

''என்ன?''

''இரட்டைக் குழந்தைகளான என் பேரன் பேத்தி ரெண்டு பேரும் ஒரே ஸ்கூல்லதான் படிக்கிறாங்க. ஒரே இடத்துலதான் ட்யூஷனும் போறாங்க. எல்லாத்துலயும் கெட்டிக்காரியா இருக்கற பேத்தி மேத்ஸ்ஸுக்கு மட்டும் ரொம்பத் திணறுறா. பேரன் மத்த எல்லா சப்ஜெக்ட்லயும் சுமார்தான். ஆனா ரொம்ப மெனக்கெடாட்டாலும் கணக்குல எப்பவுமே சென்ட்டம்தான். பேத்திகூட டெய்லி உக்காந்து சொல்லித் தரத்தான் நேரம் சரியா இருந்தது. அடுத்த மாசம் போர்டு எக்ஸாம் வேற'' என்று முடித்தார்.

''இதுல கவலைப்பட என்ன இருக்கு? அவளால முடிஞ்சது அவ்வளவுதான்'' என்றேன்.

''என்ன டாக்டர் சொல்றீங்க? புரியல...'' என்றார்.

எல்லோருக்கும் புரியும்படியாக விளக்குகிறேன்.

இடம் சார்ந்த அல்லது ஸ்பேஷியல் திறன் என்போம். ஒரு பொருளை உருவகப்படுத்தி மனத்தில் நினைப்பது , அதன் வடிவம், முப்பரிமாணம், அளவுகள், அசைவு, திசை என்று பலவற்றையும் சிந்திப்பதுதான் இத்திறன். ஒரு பொருள் அண்டவெளியில் சுழல்வதைக் கற்பனை செய்து, அதனை வீழ்த்த எவ்வளவு வேகத்தில் தாக்க வேண்டும் என்ற கணக்கு, இத்தனையும் இருந்தால் ஓடும் ஒரு இரையைக் குறி வைத்து அடிப்பது எளிது.

கற்காலம் தொட்டே ஆணுடைய முதல் மற்றும் முக்கிய வேலையே இரையைக் கொன்று கொண்டு வந்து போடுவதுதான். அதற்குப் பல வகைகளில் சிந்தித்து இந்த ஸ்பேஷியல் திறனைப் பெருக்கிக் கொண்டான்.



டாக்டர் **ஏ.வி.ஸ்ரீனிவாசன்**

கவலைப்பட என்ன இருக்கு! 6

சரி. அறிவியல் இதனை எப்படி விளக்குகிறது? பார்க்கலாம்.

நரம்பியல் நிபுணர் டாக்டர் கமில்லா பென்போ லட்சக்கணக்கான சிறுவர் மற்றும் சிறுமியரின் மூளையை ஆய்வு செய்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இந்த ஸ்பேஷியல் திறன் ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்குமிடையே அவர்களது நான்காவது வயதிலேயே வித்தியாசப்பட ஆரம்பித்து விடுகிறது. சிறுவர்கள் ஒரு பொருளை முப்பரிமாணத்தில் பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

அதனால்தான் வீடியோ கேம்ஸ் விளையாடுவது பெரும்பாலும் சிறுவர்களாகத்தான் இருக்கும். ஆனால் சிறுமிகள் இரு பரிமாணத்தில் பார்க்கிறார்கள். வளர வளர ஆணுக்கு இத்திறனும் அதிகரிக்கிறது.



வளர்ந்த ஓர் ஆணின் மூளையைப் பரிசோதித்தால், அதன் வலது அறைக் கோளத்தில் அதிக பகுதிகளையும் இடது அறைக் கோளத்தில் சில பகுதிகளையும் இத்திறனுக்கு உபயோகிக்கிறான் என்பது தெரிய வரும். ஆனால் பெண் இடது அறைக்கோளத்தில் மிகச் சிறிய அளவையே இத்திறனுக்கு உபயோகிக்கிறாள்.

கற்கால மனிதனுக்கு இரையைப் பிடிக்கவும், காடுகளில் நெடுந்தூரம் சென்றாலும் திசை அறிந்து இருப்பிடம் சேரவும் இத்திறன்தான் உதவியது. குகைகளில் குழந்தைகளுடன் காத்திருந்த அக்கால பெண்ணுக்கோ இத்திறன் தேவையில்லாமல் இருந்தது.

இப்போது ஆண் வேட்டையாட வேண்டியதில்லை. ஆனால் பல்வேறு செயல்களில் இத்திறனைப் பிரதிபலிக்கிறான். கணக்குகளைத் தீர்ப்பது, குறி வைத்து கோல்ஃப் விளையாடுவது, இரையை ஓடிப் பிடிப்பது போல் பந்துகளைப் பிடிப்பது,

குறி பார்த்து எறிவது... என்று சொல்லிக் கொண்டே போகலாம். அதனால்தான் பேஸ்கட்பால், ஃபுட்பால், கோல்ஃப் போன்ற விளையாட்டுகளில் ஆண்களின் ஆதிக்கமே அதிகம் இருக்கிறது. அவ்வளவு ஏன்? நிறுத்தப்பட்டிருக்கும் ஆயிரக்கணக் கான வண்டிகளுள் தனது வண்டியை நோக்கிச் சரியாகச் சென்றடைந்து ஸ்டார்ட் செய்யும் திறனும் அவனது ஸ்பேஷியல் திறனுக்குச் சிறந்த உதாரணம்.

எந்தப் புது இடத்தில் கொண்டு விட் டாலும், அதிகம் சிரமப்படாமல் அவனால் திரும்பி வந்து விட முடியும். பெண்களால் அது முடியாது. ('எங்களுக்கு வாயிலிருக்கு வழி'ன்னு சொல்றது கேக்குது!) அவனது முப்பரிமாணப் பார்வை மற்றும் திசை அறியும் திறனால் வரைபடங்களையும் எளிதில் புரிந்துகொள்ள முடியும். பெண் களுக்கு மேப்(வரைபடம்)பைப் புரிந்து கொள்வது கடினம்தான்.

இப்போது புரிகிறதா ஆண்கள் ஏன் கணக்கில் புலி என்று? அதனால் பெண் களுக்குக் கணக்கு வராது என்று அர்த்தம் அல்ல. கடினமான கணக்குகளையெல்லாம் ஆண்கள் எளிதில் போட்டு விடுவார்கள். இதற்கு விதிவிலக்காகச் சில பெண்கள் இருப்பதும் உண்மையே. ஆனால், பொதுக் குணம் என்று பிரித்துப் பார்க்கிறபோது இந்த வேறுபாடு பளிச்சென்று புலப்படும்.



வலப்பக்க அறைக் கோளத்தில் நடப்பவை:
உணர்வுகள் மற்றும் கற்பனைகளைப் புரிந்து கொண்டு செயல்படுதல், கலை உணர்வு மற்றும் படைப்பாற்றலை வெளிப் படுத்துதல், கற்பனை, நுண்ணறிவு, கலை ஆர்வம், இசையில் நாட்டம், முப்பரிமாண உணர்வு போன்ற திறமைகள் வளர்ச்சி அடைவதுடன் உடலின் இடப்பக்க இயக்கமும் செயல்படுத்தப்படுகிறது.

அறிவியல் மாமேதை **ஆல்பர்ட் ஐன் ஸ்டீன்** இறந்த பிறகு, அவரது மூளையை ஆராய்ந்தார்கள். அவருடைய காலகட்டத் தில் இறந்த 35 ஆண்கள் மற்றும் 56 பெண் களின் மூளையோடு ஒப்பிட்டார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஸ்பேஷியல் திற னைப் பயன்படுத்தும் மூளையின் குறிப்பிட்ட பகுதி பிறரை விட இவருக்கு 15% அதிகமிருந்ததாக அறியப்பட்டது.

சரி. ஆண்களுக்கு இல் லாத ஒரு திறன்... பெண்களுக்கு மட் டுமே உள்ள அந்தத் திறனைப் பற்றியும் சொல்லியாக வேண் டும்...

(அலசுவோம்)

எழுத்தாக்கம்: **லக்ஷ்மி மோகன்**



அருள்வாக்கு

சக்தி



தாயன்பைப் போலக் கலப்படமே இல்லாத பூரணமான அன்பை இந்த லோகத்தில் வேறெங்குமே காண முடியவில்லை.

குழந்தையாகப் பிறக்கிற போதே அம்மாவிடம்தான் ஒட்டிக் கொள்கிறோம். ஆகாரம் தருவதிலிருந்து சகலத்துக்கும் அவள்தான் குழந்தைக்குக் கதியாக இருக்கிறாள். வயது ஏறுகிற சமயத்தைவிட பால்யத்தில்தான் தாயார், குழந்தை இருவருக்கும் பரஸ்பர அன்பு மிக அதிகமாக இருக்கிறது. அதிலும் மனித இனத்தை விடப் பசுக்குலத்திடம்தான் இந்த அன்பு நிரம்பித் ததும்புகிறது. கன்று ''அம்மா!'' என்று கத்துவதில் உள்ள ஆவல் மாதிரி வேறெங்கும் அன்பைப் பார்க்க முடியவில்லை. இதைப் பார்த்துத்தான் மநுஷ்ய ஜாதியே, ''அம்மா!'' என்று கூப்பிட ஆரம்பித்ததோ என்று தோன்றுகிறது.

இந்த அம்மாவின் அன்பு ஒருபக்கம் இருக்கட்டும். இப்படிச் சரீரத்துக்கு மட்டும் அம்மாவாக இல்லாமல், உயிருக்கு அம்மாவாக இருக்கிற ஒருத்தி இருக்கிறாள்.

இந்த உயிரின் அம்மாதான் நமக்கு சாசுவதமாக, நிரந்தரமாக, எந்நாளும் தாயாராக இருந்துகொண்டிருக்கிறாள்.

நமக்கு இருக்கிற சக்தி எல்லாம் அவளுடையதுதான். நாம் எதைச் செய்திருந்தாலும் எல்லாம் அவள் கொடுத்த சக்தியால்தான் நடக்கிறது. இதை உணர்ந்து அகம்பாவம் சிறிதும் இல்லாமல் அவளிடம் சரணாகதி செய்தால் ஒரே அம்மாவான அவள் இகத்திலும் பரத்திலும் பரமாநுக்கிரஹம் செய்வாள்.

சகல லோகத்துக்கும் நிறைவான இன்பம் வேறில்லை. சகல லோகமும், சமஸ்த ஜீவராசிகளும் க்ஷேமமாக இருக்க அன்பே உருவான சாக்ஷாத் அம்பிகையை எப்போதும் ஆனந்தமாக நினைத்துக் கொண்டிருப்போம்.

– ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

பகல் மீன்கள்

6

டிக்கெட் பரிசோதகருடன் அவன் தன்னருகே வருவதைக் கண்டதும் தேன்மொழி சட்டென எழுந்து கொண்டாள். முகத்தில் செயற்கையான ஒரு சிரிப்பு அதுவாக வந்து விழுந்தது. சரி காரியம் முடிந்தது. அவன் எப்படியோ டி.டி.ஆரிடம் நிலைமையை எடுத்துப் பேசித் தன்னைக் காப்பாற்றியிருப்பான். வெளியே கிளம்பலாம் எனப் புறப்பட நினைத்தவளுக்கு, டி.டி.ஆர். ஃபைனைக் கட்டச் சொல்லும் விதமாக பில் புத்தகத்தைப் பிரித்தவுடன் சட்டென வியர்த்தது.

தொடக்கத்தில் டி.டி.யிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

தனது ஆங்கிலத்தின் நளினத்தைச் செம்மையாக்கி உச்சரிப்பில் வேகத்தைக் கூட்டினாள். ''சார்ட்டில் பாருங்கள் ஏ.தேன்மொழி என இருக்கும்'' என நயமாகவும், பின் கோபமாகவும் பேசிப் பார்த்தாள். இவன் தடுத்த போது,

''இல்லைங்க பைசா பிரச்னையில்லை. இவ்வளவு சொன்னபிறகும் பெரிய்ய இவன் மாதிரி பிஹேவ் பண்றான்'' என்றாள்.

ஆனால், அந்த யெற்ரலகுடி சுப்பாராவ்... (நேம் டாக்கில் அப்படித்தான் இருந்தது)... கடைசி வரை மசியவே இல்லை. வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே தெலுங்கும் ஆங்கிலமும் கலந்த இங்கிலீஷில் ப்ரொஃபஷனல் எதிக்ஸ் பேசியது. உடன் சிரிப்பும் கறாருமாக ஒருவித ஜென்டில் வில்லத்தனத்தைக் காண்பித்தது.

தேன்மொழி மேலும் பிடிவாதமாகச் சண்டைக்குப் போக, அவன் சரியான சமயத்தில் சிரித்துக்கொண்டே இருவருக்கும் குறுக்காகக் கைகளை நீட்டினான்.


''எதுக்குப் பிரச்னை... ஃபைனைக் கட்டிடலாம்.'' டி.டி.யிடம் திரும்பி, ''எவ்வளவு ஸார்?'' ஆங்கிலத்தில் கேட்டான்.

''டிக்கெட் சார்ஜ் ப்ளஸ் டூ ஃபிஃப்டி ஸார்... டோட்டல் ஃபைவ் சிக்ஸ்டி.''

அவளுக்கு இதுபோல சண்டை போடப் பிடிக்காது. என்ன செய்வது? சண்டை போட்டால் டி.டி. விட்டுவிடும் என மோதிப் பார்த்தாள்... ம்ஹ்ஹூம்.

அவன் பணத்தைத் தருகிறேன் என்றதும், அந்த நிமிடம் தேன்மொழிக்கு அருயையாக இருந்தது. ப்ச்... ஹூம் ஆனாலும் வேறு வழியில்லை. அதுதான் ஒரே தீர்வு என்பதால் போலி நாகரிகம் எதுவும் காண்பிக்காமல் அந்த இடத்திலிருந்து விலகிப் போய் ஓரிடத்தில் நின்று கொண்டாள்.

கொஞ்சம் சங்கடம்தான். ஆனாலும் அதுவரை இருந்த பதற்றம் விலகி முதுகில் பச்சை வண்ணத்தில் ஒரு இறக்கை விரிவதை உணர்ந்தாள்... ஸ்ஸ்... அப்பாடா... நல்ல நேரத்துல இவன் வந்தான். இல்லாட்டி... மனசுக்குள் கால்கள் தாளம்



அஜயன் பாலா

போட்டன... கூடவே உடலில் ஒரு ஜுரம். இப்போதுதான் அவனை ஓரக்கண்ணால் நிதானமாகப் பார்த்தாள். இறுகப் பற்றிக் கிடந்த கறுப்பு நிற டீ ஷர்ட், அகலமாக விரிந்துகிடந்த தோள்களின் உறுதியைக் காண்பித்தது. தோளிலிருந்து சரிவாக இறங்கும் முழங்கை. முழங்கைக்குக் கீழே தசைப்பிடிப்பு... கல்யாணம் ஆகியிருக்குமா? ம்ம்... தெரியவில்லை. ஆனால் அதற்குச் சரியான வயசு.

ம்ம்...ஹூம். தேன்மொழி சட்டென விழித்துக் கொண்டாள். இது ஒரு ஆபத்தான, ஆனால் மகிழ்ச்சியான உணர்வு. இதை நீட்டித்தாலும் ஆபத்து. அதே சமயம் இதை அவ்வளவு சுலபத்தில் விட்டுத் தொலைக்கவும் மனசு வராது. வெறுமனே உதவி செய்கிறான் என்பதற்காக அல்ல... அதற்கு முன்பே அவன் மனசில் தன் குரலால் அவன் சலனமேற்படுத்தி இருந்தாள். தேன்மொழி இப்போது மீண்டும் அவனைப் பார்த்தாள். அவனது தோற்றத்தில் ஒரு பாதுகாப்பை உணர்ந்தாள். அவன் எங்கே போக இருந்தானோ தனக்காக இறங்கிவிட்டான். ஒரு வேளை அவனுக்கும் தன்மேல் காதல் வந்திருக்குமோ...? அதனால்தான் நம்மிடம் ரொம்ப நல்லவனாக வேஷம் கட்டுகிறானோ...? தேன்மொழியின் தன்னுணர்வு துளிர்த்த போது, அவன் ரசீதை வாங்கி பர்ஸில் வைத்துக் கொண்டு சிரித்தபடி இவளருகில் வந்தான். அந்த டி.டி. அருகில் வந்து, ''இட்ஸ் மை ட்யூட்டி... டோண்ட் ஆங்ரி'' என இளித்துவிட்டுப் போனது.

கண்களாலேயே, ''போகலாமா?'' என்றான். முன்னால் நடக்கத் துவங்கினான். இவள் பெட்டியை இழுத்துக் கொண்டு அவன் பின்னால் நடந்தாள். இப்படி தனக்காக மொய் எழுதிவிட்டானே... இவனிடம் செலவுக்கு இங்கிருந்து போவதற்குப் பணம் இருக்குமா? நாம் போன பின் அம்மா தாயே என பிச்சை எடுக்கப் போகிறான். இவளுக்குச் சிரிப்பு வந்தது. அவனும் அவளும் வாசலை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். தன்னை விட அவன் எவ்வளவு உயரம்... அவன் அருகில் இணையாக நடக்க விருப்பப்பட்டு கொஞ்சம் வேகமாகப் பெட்டியை இழுத்து நடந்தவள் சட்டென தனக்குத்தானே குட்டுவைத்துக் கொண்டு நிதானமானாள்.

இருவரும் வெளியே வந்தனர். வாசலுக்கு வரும் வரையில் ஆச்சர்யமாக அவனும் ஒரு வார்த்

இதெல்லாம் எங்க டேஸ்ட்!



கல்கி மகளிர் சிறப்பிதழில் இடம் பெற்றுள்ள சிரிப்புக் கொத்துகளை ஜோக்ஸை சின்ஸியரா செலக்ட் பண்றோம் பாருங்க!

தைகூடப் பேசவில்லை. தேன்மொழியும் எதுவும் பேசாமல் வந்தாள். ஏதோ ஒன்று தடுத்து அவனை அமைதியாகப் பார்க்க வைத்தது. கண்ணில் மட்டும் அவனைப் பார்க்கும்போது பட்டாம்பூச்சிகளைப் பறக்க விட்டாள்.

'அவன் யார்? பெயர்கூட இந்த நிமிடம் வரை தெரியாது. கேட்கலாமா? ஏன் அவன்தான் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ளட்டுமே...?'

இதற்குள் இருவரும் வாசலுக்கு வந்துவிட்டிருந்தனர்.

'சரியான கொடாக் கண்டன். நாம்தான் பேசியாகவேண்டும் போலிருக்கிறது.'

''தேங்க்ஸ்''

அவன் சிரித்தான். ''இட்ஸ் ஓகே''

''நீங்களும் இங்க வைசாக் தான் டிக்கெட் எடுத்திருந்தீங்களா இல்லை...''

''ம்ம்ம்... நல்லா கேட்டீங்க. கல்கத்தா போக வேண்டிய நான் உங்க நிலைமையைப் பார்த்து ஹெல்ப் பண்ணுவமேன்னு டிரெயினை விட்டு இறங்கினா?''

''எனக்காகவா?''

''ஹலோ மேடம் என்ன நான் பொய்யா சொல்றேன்...? இந்த ஸ்டேஷன்ல நான் இறங்கினதே தண்ணி பிடிக்கத்தான். அப்பதான் நீங்க பர்ஸைத் தவறவிட்டுட்டு டிக்கெட்டும் இல்லாம நிக்கற தகவலை என்கிட்ட சொன்னீங்க. நீங்க சொன்னவுடனே ட்ரெயினுக்கு ஓடிப்போய் நம்ம கூட பாட்டுபாடின டீம்கிட்ட கேட்டேன். அவங்க அப்படி பர்ஸ் எதுவும் பாக்கலைன்னு சொன்னாங்க. அப்புறம் நானும் என்ன பண்றதுன்னு நெனைச்சு என் சீட்ல போய் உக்காந்துட்டேன். ஆனாலும் மனசு



கேக்கல... காலைல வண்டி நின்னப்ப நீங்க பாடுன அந்தப் பாட்டு வேற மனசுலயே தங்கியிருந்துச்சு.... ஒரு நிமிஷம்தான்... யோசிக்காம இறங்கிட்டேன்.''

இப்படி அவன் சொன்னதும் தேன்மொழிக்குள் அதுவரை இருந்த பூடகம் முழுமையாக உடைந்தது. உடலை மிகவும் லகுவாக்கிக் கொண்டாள்.

''கொஞ்சம் இதைப் பாத்துக்குங்க... நெக்ஸ்ட் ஹவுரா ட்ரெயின் எப்பன்னு கேட்டுட்டு வந்துடறேன்.''

அவன் கொடுத்துச் சென்ற அந்தப் பின்பக்கச் சுமையைக் கையில் வைத்திருந்தவள், சட்டெனத் தன் தோளில் மாட்டிக் கொண்டாள். மகிழ்ச்சியாக இருந்தது.

ஆட்கள் நடமாட இடைஞ்சல் இல்லாமல் ஒதுங்கி நின்றவள், அருகிலிருந்த எடை பார்க்கும் மிஷினில் முதுகில் சுமந்த அவன் பேக்குடன் ஏறி நின்றாள்.

மெஷின் துப்பிய அட்டையை அவசரமாகத் திருப்பினாள்.

முகமும் மனசும் ஒரு சேர பிரகாச

சொல்லமுடியுமா?

ராஜாஜி அவர்களிடம் இருந்த ஒரு சிறந்த பழக்கம், வந்த கடிதங்களுக்கெல்லாம் உடனே பதில் எழுதிப் போட வேண்டும் என்கிற கட்டாயத்தைக் கடைப்பிடித்தது. இப்படி உடனுக்குடன் பதில் எழுதிப் போடுவது பற்றிக் கேட்டால், ''டெலிஃபோனில் ஒருத்தர் பேசினால் நாளைக்குப் பதில் சொல்றேன்னு சொல்ல முடியுமா? இந்தச் சாதாரண ஆசாமியிடம் டெலிஃபோன் வசதி இல்லாததால் கடிதம் எழுதியிருக்கிறார். அதுக்கு மட்டும் நாளைக்குப் பதில் போட்டால் எப்படி?'' என்று வாதாடுவாராம்.

தகவல் - சீதா

மாகின.

சட்டென அவன் வர உள்ளங்கையை இறுக்கியபடி மிஷினை விட்டு இறங்கினாள். தோளில் போட்டிருந்த அவனது சுமைப் பையை அவசரமாகக் கழற்றினாள்.

''ட்ரெயின் ஈவ்னிங் அஞ்சு மணிக்குத் தான்'' அவன் வருத்தப்பட்டான்.

''அப்ப என்கூட கல்யாணத்துக்கு வந்துடுங்க'' அவள் கேஷுவலாகக் கூறினாள்.

''கல்யாணமா...?

ஆமாம். நான் கல்யாணத்துக்குத்தான் இங்கே வந்துருக்கேன். என் ஃப்ரெண்ட் கார்த்திகாவுக்கு'' என்றவள், அவசரமாகப் பையிலிருந்த பத்திரிக்கையைத் துழாவி எடுத்துக் காண்பித்தாள்.

''ஸாரி... பரவாயில்லை... நீங்க கிளம்புங்க'' எனத் தயக்கம் காட்டியவன், ''மண்டபம் எந்த இடம்னு சொல்லுங்க, ஆட்டோக்காரன்கிட்ட கேட்டுப் பார்ப்போம்.'' உரிமையுடன் பத்திரிக்கையை வாங்கிப் பார்த்தவன், ''ஓ ஹோட்டலா?'' எனத் தவறைத் திருத்திக் கொண்டு, அருகிலிருந்த ஆட்டோக்காரனுக்குக் கை அசைத்தான். அவனிடம் விசாரித்தான்.

என்ன இது? இவன் யார்? பேரைக் கூடக் கேட்கவில்லை... அட்ரஸ் வாங்கவில்லை... ஃபோன் நம்பர் பரிமாறவில்லை... அதற்குள் அனுப்பி வைப்பதில் குறியாக இருக்கிறானே... தேன்மொழி நகத்தைக் கடித்தாள்.

அதற்குள் இவளை நோக்கித் திரும்பியவன் மகிழ்ச்சியுடன், ''பரவாயில்லை... இவனே அம்பது ரூபாதான் கேக்கறான்... ஹோட்டல் ரொம்ப பக்கம்தான் போலருக்கு.''

அந்த ஆட்டோக்காரன் வேறு வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்து இவர்களுக்காகத் தயாராக நிறுத்தினான். அவனோ அவசரமாக ஆட்டோவில் ஏற்றுவதற்காக அவளது உருளைகள் பொருத்தப்பட்ட சிவப்புப் பெட்டியை இழுத்துக் கொண்டு ஆட்டோவை நோக்கிப் போக, அந்தச் சக்கரங்கள் உருளும் ஓசையில்



என்ன இது? எடைமிஷினில் வந்த இன்றைய ராசி பொய்யாகிவிடுமா? அதைப் பார்த்து மனசு மகிழ்ச்சியில் துள்ளி ஒரு நிமிடம் ஆகவில்லை.



இவளுக்குப் பதை பதைப்பு கூடியது.

என்ன இது? எடைமிஷினில் வந்த இன்றைய ராசி பொய்யாகிவிடுமா? அதைப் பார்த்து மனசு மகிழ்ச்சியில் துள்ளி ஒரு நிமிடம் ஆகவில்லை. அதற்குள் இப்படி ஆகிவிட்டதே... சட்டென எதுவோ தனக்குள் தொலைவதை உணர்ந்தாள். அவனைப் பார்த்தாள். ஆட்டோக்காரனிடம் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்தான்.

சந்தேகத்துடன் மூடிக்கிடந்த உள்ளங்கையைத் திறந்து பார்த்தாள். அங்கு அந்த எடை மிஷின் துப்பிய அட்டையில் ''இன்று உங்கள் வாழ்க்கையின் துணையைத் தேர்ந்தெடுப்பீர்கள்'' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

(மீன்கள் துள்ளும்)

பாட்டி வூட்டு பாயாசம்
அத்தை வூட்டு அதிரசம்
சித்தப்பா வூட்டு உளுந்து வடைன்னு
அத்தனை வூட்டு பலகாரத்தையும்
அடுக்கி அடுக்கித்
துன்ன எனக்கு
சாம்பார் வாசனைகூட
வெளிய விடாம
சாத்தியே கிடக்குது
பட்டணத்துப் பக்கத்து வூடு!

சி.கலைவாணி

நகர்உறவு





அம்மாவின் பாடல்

பவித்ரா நந்தகுமார்

ஓடும் மிக்ஸி அரவையிலும்
மின் மோட்டார் சத்தத்திலும்
பாடிக் கொள்வாள் அம்மா
கழுதை வருது
எனச் சொல்லும்
அப்பாவுக்குப் பயந்து!



"உங்களோட முதல் காதல் பதிமூணு வயசுல வந்ததா சொன்னீங்க... கடைசி காதல்...?"

"அதை கடைசி காலத்துலதானே சொல்ல முடியும்!"

- சீர்காழி வி.ரேவதி



"ஏன் ரொம்ப சோகமா இருக்கே?"

"என் மனைவி என்னோட ஒரு மாசம் பேச மாட்டேன்'னு சபதம் போட்டு இருக்கா."

"அது சரி, இதுல வருத்தப்பட என்ன இருக்கு?"

"அவ சொன்ன ஒரு மாசம் இன்னையோட முடியுதே!"

- எஸ்.ஏ.தாஹிர்



"ஆபரேஷன் தியேட்டர் கதவுல ஏன் 'எல்' போர்டு போட்டிருக்காங்க?"

"இதுதான் டாக்டர் பண்ற மொத ஆபரேஷனாம்!"

- எஸ்.ஏ.தாஹிர்

மனைவியின் சபதம்

‘‘மாடியில் இருந்து விழுந்துட்ட உன் புருஷன் இப்ப எப்படி இருக்கிறார்?’’

‘‘படிப்படி’யா குணமாகிக் கிட்டிருக்கிறார்!’’

- எம்.அசோக்ராஜா





''டாக்டர் இந்த பேஷண்டுக்கு நீங்க கடைசியா இன்னும் ஒரே ஒரு டெஸ்ட்தான் எடுக்கணும்''

''அப்படியா என்ன டெஸ்ட்டு!''

''இவரு பிழைப்பாரா பிழைக்க மாட்டாரான்னு தான்!''

- பி.பாலாஜி கணேஷ்

சூப்புக்கு நான்

மேற்கு மாம்பலம் ஏரிக் கரை சாலை. சிறு சமையல் அறையை ஒட்டிய வாடிக்கையாளர் உட்கார்வதற்கான ஓர் அறையில் உட்கார இடமின்றி கூட்டம் அலை பாய்கிறது. நளபாகத்தில் அசத்தும் அந்தப் பெண்மணி நடத்துவது மாமி சூப்ஸ்... 'மாமி சூப்ஸ்' நிறுவனர் ஸ்ரீபாலாவிடம் பேசியபோது...

"இந்தக் கடையை 2003-ம் ஆண்டு தொடங்கினோம். ஆறு ஆண்டுகளாக நடத்தி வருகிறோம்.

எங்கள் வீட்டில் இதைச் செய்து வந்தனர். அதனால் நான் தனியாக இதனைத் தொடங்கினேன். இத்தொழிலில் நான் வெற்றியடைய என் கணவர் சிவகுமார் பக்கபலமாக இருந்து வருகிறார். என்னோட வெற்றிக்குப் பின்னால் ஓர் ஆண்தான். சென்னை, அதன் சுற்றுவட்டாரங்களில் எங்களோட சூப் மிகப் பிரபலம். இதற்காக கேட்டரிங் டெக்னாலஜி மாதிரி எதுவும் படிக்கவில்லை. எல்லாம் கைப்பக்குவம்தான்! சூப் தயாரிப்பில் என்னிடம் வேலை செய்பவர்களை அனுமதிப்பதில்லை. நான், என் கணவர், என் மகள் என நாங்கள் மூன்று பேர்தான் சூப்பைத் தயார் செய்வோம். இதுல தொழில் ரகசியம் அப்படியெல்லாம் கிடையாது. சரியான சமையல்காரர் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. எனவே என் கணவர் சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். சூப் தயாரிப்பு முறை பற்றிக் கேட்கும் வாடிக்கையாளர்களுக்கு அதைப் பற்றிச் சொல்வோம். என்னென்ன பொருட்கள் பயன்படுத்த வேண்டும் என்பதையும் கூறுவோம். வாடிக்கையாளர்கள் 'செய்து பார்த்தோம்; ஆனால் நீங்கள் செய்கின்ற மாதிரி வரவில்லை' என எங்களிடம் மீண்டும் மீண்டும் வருகின்றனர். இது பெருமை தரக்கூடிய விஷயம்.

ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் ஒரு பெண்ணாக சாதனை செய்துள்ளீர்கள். இதற்குக் காரணம் என்னன்னு கேக்கறாங்க. வியாபாரத்துக்கு நேர்மை முக்கியம். வாடிக்கையாளரிடம் நாங்கள் பொய் சொல்வது கிடையாது. சர்க்கரை நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் இவர்களுக்கு ஆகாது என்றால், சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்துவோம். முக்கியமாக, வாடிக்கையாளர்களிடம் கோபத்தைக் காட்ட மாட்டோம்.

எல்லாப் பெண்களைப் போலவே கடைசியாக சமையல் தொழிலுக்கே வந்து விட்டோமேன்னு நான் நினைத்துக் கவலைப்பட்டது இல்லை. செய்கின்ற தொழிலில்



ஜெயிச்சா அந்தஸ்து தானா வரும்.

நஷ்டம் வந்தால்தான் கவலை வரும். இது நல்ல தொழில். ஜெயிச்சா அந்தஸ்து தானா வரும்.

பிறந்த குழந்தை முதல் வயதானவர்கள் வரை எங்கள் வாடிக்கையாளர்கள். அரசு அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், எனப் பலதரப்பட்ட பிரிவினர் இதில் அடக்கம். முக்கியமா புரசைவாக்கத்தைச் சேர்ந்த ஒரு ஆட்டோ டிரைவர் இங்கு வரும்போதெல்லாம் சூப் சாப்பிட்ட பிறகு, 'உங்க கடை சூப்புக்கு நான் அடிமை' எனச் சொல்லிவிட்டுப் போவார்.

அடிமை!



ஆறு ஆண்டு காலத் தொழில் அனுபவத்தில் மறக்க முடியாத அனுபவம் நிறைய உண்டு. வாடிக்கையாளர்களுக்கு ஏற்றவாறு சூப் தயாரிப்பதே மகிழ்ச்சியான அனுபவம். அகோபில மடம் மாணவர்கள் இங்குதான் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள். மாதத்தில் நான்கு ஐந்து பிறந்தநாள் கொண்டாட்டங்கள் எங்கள் கடையில் நடக்கும். வெளிநாட்டில் தங்கியவர்கள் தங்கள் குழந்தைகள் மாமி சூப் கேட்டு அழுகிறது என மெயில் அனுப்புவார்கள். இதெல்லாம் மறக்க முடியாத அனுபவம். சிலர் கைக்குழந்தைகளுடன் வருவார்கள். அவர்கள் கேட்கின்ற சூப் தீர்ந்து இருக்கும். அப்போது அந்தக் குழந்தையின் கண்களில் தெரிகின்ற ஏமாற்றம் சோகமான அனுபவம். இப்படி நிறைய அனுபவங்களைச் சந்தித்து இருக்கிறேன்.

இதைத் தவிர, எங்களுக்கு சைதாப்பேட்டை, சாமியார் மடம், வடபழனி, கோடம்பாக்கம், போரூர் ஆகிய இடங்களிலும் கிளைகள் இருக்கு. எதிர்காலத்தில் இத்தொழிலை இன்னும் விரிவுபடுத்தணும். ஆர்வம் உள்ளவர்களுக்கு இதனைக் கற்றுத் தரணும். வாழ்க்கையில் கஷ்டப்படுகின்றவர்களுக்குத் தனியாக சூப் கடை வைத்துத் தர வேண்டும் என்கின்ற ஆசை இருக்கு...'' என்றபடி எனக்கும் ஒரு கப் சூப் கொடுத்து, ''நான் சொன்னது சரியான்னு பாரு'' என்றார் ஸ்ரீபாலா.

- பாலு விஜயன்

தொடங்கிய கதையை முடிக்கத் தெரியாமல் திணறிக் கொண்டிருந்த லலிதா, ''போ குட்டி அம்மாவைத் தொந் தரவு பண்ணாத... அப்பாகூடப் போய் விளையாடு'' என்றாள்.

''ம் மாத்தேன்... எனக்குக் கொடு'' - கம்ப்யூட்டர் மௌசை மீனு பிடுங்கிக் கொள்ள, கதையை முடிக்க வேண்டுமே என்று குழந்தையின் முதுகில் பட்டென ஒன்று வைத்த லலிதா, மீனுவை இறக்கிக் கீழே விட,

''அப்பா... அம்மா அடிச்சுட்டா...'' ஓவென அழுதுகொண்டே குட்டிப் பட்டாம் பூச்சியாய் ஓடி வந்தது இரண்டரை வயது மீனு.

''அப்படியா, என்ன நெனைச்சிட்டு இருக்கா அவ, தோ வரேன் - ரெண்டு பேரும் சேர்ந்து அடிப்போமா?'' - ஓடிவந்து குழந்தையை அள்ளித் தூக்கிய சேகர் குழந்தையைக் கேட்க,

'ஓ..' கண்களை அகல விரித்து உற்சாகமாய் தலையை ஆட்டியது மீனு.

''வா, வா, ஏய் லலிதா எங்கே ஒளிஞ்சிருக்க?''

ஒரு சூறாவளி போல ஹாலிலிருந்து கத்திக்கொண்டே... சேகர், முதல் அறையில் அமர்ந்து கணினியை இயக்கிக்கொண்டிருந்த லலிதாவை ஓரக் கண்ணால் பார்த்த படி கிச்சனுக்குள் புகுந்தான். லைட்டைப் போட்டவன், ''மீனுக்குட்டி அம்மா இங்கயா...'' என்று குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து, தேடி ஒரு சாக்லெட்டை எடுத்து உரித்து மீனுவின் வாய்க்குள் தள்ளி



அர்த்தமற்ற வாழ்க்கை குழந்தைத்தனமான ஆச்சரியங்களால் நிரம்பி வழிகிறது.

யவன், ''இதில் காணோம்டா'' என்றபடி குளிர்சாதனப் பெட்டிக் கதவை மூடி னான்.

''அட இதுல'' என்று பாத்திரம் அடுக்கும் ரேக்கைத் திறக்க,

மீனு பெரிய மனுஷியாய்ச் சிரித்தது. ''ஐயோ அப்பா, அங்கெல்லாம் அம்மா இல்ல.''

''அப்படியா? பின்ன எங்க? நமக்கு பயந்துக்கிட்டு மொட்டை மாடிக்கு ஓடிப் போயிட்டாங்களா?'' சேகர் - அப்பாவி யாய்க் கேட்க.

''நான் காட்டறேன் வா...'' என்ற மீனு சேகரின் கைகளில் இருந்து இறங்கி கையைப் பிடித்து இழுத்தபடி படுக்கை அறைக்குள் நுழைந்தது.

நம்மை நாம் அறிவோம்!

இந்தியாவில் 6400 சாதிகளும், 1618 மொழிகளும், இந்து மதம், இஸ்லாமியம், கிறிஸ்துவம், சமண மதம், ஜைன மதம், பார்சி ஆகிய 6 மதங்கள் உள்ளன. இத்தனை வேற்றுமைகளை வைச்சுக்கிட்டுத்தான் நாம ஒற்றுமையா இருக்கோம்னா, அது சூப்பர்தானே?!

ப.சங்கவி

கடைசி வரி!

''இங்க பாருங்க'' என்று புத்தக அல மாரியைத் திறந்து, தானும் தலையை விட்டுத் தேடியது.

''ம்... இல்லையே'' அப்பாவும் மகளும் ஆச்சரியப்பட்டு, திடீர் என ஞானோதயம் ஏற்பட குடுகுடு வென ஓடி கட்டிலுக்கு அடி யில் குனிந்து தேட, அங்கே யும் அம்மாவைக் காணோம்.

''அப்பா இங்கப்பா' என்று டேபிள் டிராயரைத் தன் இரு கைகளாலும் இழுக்க முடியா மல் இழுத்து அதற்குள் ளும் தேடியது குட்டி தேவதை. ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த லலிதா,

'அர்த்தமற்ற வாழ்க்கை குழந்தைத்தனமான ஆச் சரியங்களால் நிரம்பி வழிகிறது' என்று கம்ப் யூட்டரில் கதையை முடித்த போது, சிரித்தபடி சேரில் அமர்ந்திருந்த சேகர் மீனுவைத் தூக்கி மடிமீது வைத்துக் கொண்டு, ''என் சாமிக்கு இதெல்லாம் யாரு கத்துக் குடுத்தா?'' என்று ஆச்சரியம் தடவிக் கொஞ்சினான்.

''அப்பா நீ லூசுப்பா. சாமிக்குத்தான் எல்லாம் தெரி யுமே'' என்று கலகலத்தது. பெருமிதத்தால் அறை முழு தும் வெளிச்சமாகிக் கொண் டிருந்தது. ○



ஜெயக்குமாரி தணிகாசலம்



டாக் She!

கண்கவர் பிங்க நிறத்தில் சென்னையை ஜம்மென கடந்த இரண்டு மாதங்களாக வலம் வந்து கொண்டிருக்கும் அந்த பிங்க் கால் டாக்ஸியைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த டாக்ஸியைப் பார்த்த உடனேயே, ஏதோ ஒரு வித்தியாசம் இதில் தென்படுகிறதே என நிச்சயம் அதிசயப் பட்டிருக்கலாம். ஆம், ஆச்சரியம் கலந்த அதிசயமாக பிங்க் கால் டாக்ஸியின் ஓட்டுனிகள்(!) பெண்கள்.

பெண்ணால், பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் மட்டுமே பிரத்யேகமாக நடத்தப்பட்டு வரும் இந்த 'பிங்க் டாக்ஸி'யை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது? இதைத் தோற்றுவித்த டாக்டர் பஸிமா ஃபராவை அணுகிக் கேட்டபோது, ''நானும் என் கணவரும் ஏழு வருடங்கள் சவுதி அரேபியாவில் மருத்துவர்களாகப் பணியாற்றிவிட்டு ஜுன் 2009 சென்னைக்கு வந்தோம். ஒரு பெண் தனியாக இரவு நேரங்களில் விமான நிலையத்துக்கோ, ரயில் நிலையத்துக்கோ செல்ல வேண்டும் என்றாலோ அல்லது அலுவலக வேலை காரமாக வெளியூரிலிருந்து சென்னைக்கு வரும் போதோ ஒரு பெண்ணே ஓட்டும் கால் டாக்ஸியில் பயணித்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும் என்ற எண்ணம் எனக்குள் பல நாட்களாகவே இருந்து வந்தது. மேலும் பஸ்கள், ஆட்டோக்கள் என எல்லாவற்றையுமே பெண்கள் ஓட்டுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஒரு பெண் ஓட்டும் கால் டாக்ஸியை இதுவரை பார்த்ததே இல்லை. ஏன் இப்படி பெண்களே ஓட்டும் ஒரு கால் டாக்ஸியை ஆரம்பிக்கக் கூடாது என்று நினைத்துத்தான் இந்த 'கோ ஃபார் பிங்க்' கால் டாக்ஸியைத் துவக்கினேன். இதோ, இதில் பணியாற்றும் ஐந்து ஓட்டுனிகளும் ஒரு புதிய வரலாற்றை, சென்னை வீதிகளில் தினமும் அழுத்தமாக எழுதி கொண்டிருக்கிறார்கள்'' என்கிறார்.

வண்டி ஓட்டுவதே ஒரு சவாலான விஷயம். அதிலும் ஆம்னி வண்டிகளை லாவகமாக ஓட்டி வரும் அம்மணிகள் இந்தச் சவாலை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்று அறியும் எதிர்பார்ப்பில் அவர்களைச் சந்தித்து உரையாடினோம். முதலில், நிர்மலா பேசினார். ''எனக்குச் சின்ன வயசுலேர்ந்தே வண்டி ஓட்ட ரொம்பப் பிடிக்கும். ANEWவில் சேர்ந்து மூன்று மாதங்கள், வண்டி ஓட்டப் பயிற்சி எடுத்துக்கிட்டு, இங்க வருவதற்கு ஒரு வருஷம் முன்னால வரைக்கும் banyanக்காக நைட் ஷிஃப்ட்ல வேலை செஞ்சிக்கேன். பெண் பயணிகள் பல பேரு இப்போ எங்க வண்டில ஏறி உட்கார்ந்துக்கிட்டு



டாக்ஸி!



ரொம்ப சூப்பரா வண்டி ஓ ட் ட றீ ங் க ளே ன் னு பாராட்டும் போது ரொம்ப பெருமையா இருக்கு'' என்கிறார்.

நிர்மலாவைத் தொடர்ந்து ஜாய்ஸ், 'எத்தனையோ கர்ப் பிணிப் பெண்கள், வயசான நோயாளிகள் இவங்களை எல்லாம் பத்திரமா நம்ம கால் டாக்ஸில ஏத்திப்போய் ஆஸ் பத்திரிக்குக் கூட்டிட்டுத் திரும்பிக் கொண்டு போய் அவங்க வீட்ல சேர்க்கும் போது அவங்க கண்ல பார்க்கற அந்த நன்றி கலந்த அன்புதான் தினமும் எங்களுக்குக் கிடைக்கற அற்புத மான பரிசு'' எனக் கவிதையாக பேசுகிறார்.

பிங்க் கால் டாக்ஸிக்கு வருவதற்கு மூன்று வருடங்கள் முன் வரை விமான நிலையத்துக்காக பிக் அப், ட்ராப் என மாறி மாறி இரவு வேளைகளில் வண்டி ஓட்டிக் கொண்டிருந்த ராஜேஸ்வரி, வெளியூர் லேர்ந்து தனியாக சென்னைக்கு வர்ற பெண்களுக்கு நாங்க ரொம்ப பெரிய சேவை செய்யறோம். பெண்ணே ஓட்டும் ஒரு கால் டாக்ஸியில் நாம தனியா, துணிவா பயணிக் கலாம்னு நம்பிக்கையோட பெண்கள் எங்களை ரொம்பவே ஆதரிக்கறாங்க'' என்கிறார்.

இவர்கள் ஐந்து பேரும் வண்டிகளை சர்வ ஜாக்கிரதையாக சென்னை ட்ராஃபிக் ஜாமில் ஓட்டி செல்ல அற்புதமாகப் பயிற்சி அளித்த ANEWவையும் நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

தொடரட்டும், பெண்களின் ஆதரவும், ஆரா வாரமும்... பிங்க் டாக்ஸிக்குப் பூங்கொத்து!


- நளினி சம்பத்குமார்

காதலின் ருசி

என்னையே வரைகிறேன் – நீ
அதை 'கோலம்' என்கிறாய்!
என்ன அபத்தம் பாரேன்...!



1



நீ எப்படி காதலனானாய்?!
புள்ளிகளில் தடுக்கி விழுந்து, கோடுகளில்
சிக்கிக் கொள்ளாத உன் காதல் சந்தேகத்துக்குரியது



2

கருத்து : அமிர்தா

பெறுவதின் சங்கடம் துறந்து
எடுத்துக்கொள் நீயே மாக்கோல உணவையென
எறும்புகளைக் கௌரவப்படுத்தும் ஏகாந்தம் இது





கோலப்பொடியால் கோலாகலத்தையும்
சாலையில் செதுக்கும் சாதுர்யம் ரசி!



காதலின் ருசி தெரிய, ஆண்வெட்கம் கலைத்து
என்னோடு என் வாசல் வந்து
வெள்ளைக் கோலத்துக்கு வண்ண ஆடை பூட்டு.

கோலம் படைப்பாளிகள் : 1. சீதாலெக்ஷ்மி, 2. ஜெயஸ்ரீ, 3. பிரேமா, 4. உஷா, 5. உமா நடராஜ்


தீபு - கோபு
ஏன் தீபு என்னைப் பார்க்கவே வரல...?
பழைய பட ஹீரோ மாதிரி இருந்தா யார்தான் பார்ப்பாங்களாம்?
தீபு அசந்துபோற மாதிரி ஸ்டைலா போய்க் கலக்கணும்...
எதுவுமே பிடிக்கலையாமே! பேசாம மொட்டை அடிச்சுக்கலாமா...?
யார்றா அவன்... தலைபோற பிரச்னைல, பெயிண்டைக் கொட்டினது...?
சூப்பர் ஹேர் கலரிங், லேட்டஸ்ட் ட்ரெண்டுக்கு வந்துட்டே!
ஆக்ஸிடெண்டலா நடந்ததைப் போய்ப் புகழ்றாளே... ம்ஹும்.
கருத்து: கார்த்தி படம்: கதிர்

மாதங்கி கவிதைகள்



சொக்கட்டான்

சொற்களை தாயமாக்கிவிட்டாய்
குரலிழந்த நான்
என் பங்கு நியாயத்தை இறக்க
முடியாமல் போனேன்
பழமெடுத்து
உன் வெற்றியைப்
பறையறைகிறாய்
இதற்கு
என்னை
அழைத்திருக்கவே வேண்டாம்
நீ மட்டும் நாள் முழுதும்
விருத்தம் எடுக்க...

வெளிச்சத்தை நம்பி

சன்னல் இருக்கு
வெளிச்சத்தை நம்பி
வளரும் மணி ப்ளாண்ட்டுக்குப்
பக்கத்தில்
சாப்பிட்ட மாம்பழத்தின்
கொட்டையைப்
பிடிவாதமாக
ஒரு மண்தொட்டியில்
நட்டுவிட்டது குழந்தை
என்ன செய்வது
என்று தெரியவில்லை
ஒன்றரை அடி
உயரத்துக்கு வளர்ந்துவிட்ட
மாங்கன்றை

இது கல்கி மகளிர் சிறப்பிதழ். அதனால... இந்த வாரம் மட்டும் ஜோதிடப் பலன்கள் பெண்களுக்கு மட்டுமானது. கோவிச்சுக்காதீங்க ஸாரே!

மேஷம்: மேன்மை விரும்பும் பெண்களே! நினைத்தது நடக்கும். நவ நாகரிகப் பொருட்கள் வாங்குவீர்கள். இல்லறத்தில் இனிமை நிலவும். சில ராணிகளுக்கு அயல்தேசம் செல்ல வாய்ப்புண்டு.



ரிஷபம்: ரிதம் போல உலாவரும் யுவதிகளே! படிப்பில் இருந்து வந்த மந்தத் தன்மை மாறும். இந்த வாரம் சிலருக்குக் கல்லூரியிலும், சிலருக்குக் கணவரிடமும் பாராட்டும் பரிசும் கிடைக்கும். இதுவரை இருந்து வந்த உடல் ஆரோக்கியக் கேடு விலகும்.

மிதுனம்: மிகச் சரியாகக் கணிக்கும் தன்மை கொண்ட ராசிக்காரர்களே! நீங்கள் விரும்பிய புகழ் வந்து சேரும் தருணம் இது. புண்ணிய ஸ்தலம் செல்ல நேரிடும். ஒரு மகானைச் சந்திப்பீர்கள். அரிய ஆத்ம திருப்தி கிட்டும்.

கடகம்: கன்னியத்தை எதிலும் கடைப்பிடிக்கும் கன்னிகளே! இப்ப நடக்கும் தேர்வில் நீங்க தூள் கிளப்பப் போறீங்க. எல்லோரும் மதிக்கத்தக்க ஒரு சூப்பரான காரியத்தைத் துணிந்து சாதிக்கப் போறீங்க! வாழ்த்துகள்!

சிம்மம்: சிந்தனையில் சிறக்கும் தேவதைகளே! எதிரிகளை

தஞ்சை பரத்வாஜ்

15.11.09முதல் 21.11.09 வரை

வீழ்த்தும் சரியான தருணம் உங்களுக்கு வாய்க்கப் போகிறது. உங்கள் சாதுர்யத்தால் அவர்களே சரணயடையவும் செய்யலாம். சொத்து வாங்கும் யோகம் உண்டு.

கன்னி: கடமை தவறாத இல்லத்தரசிகளே! உறவினர்களின் உதவியால் புதிய வேலைவாய்ப்பு கிட்ட இருக்கிறது. வாரிசுகளால் வசந்தம் வீட்டை சூழக் காத்துள்ளது. உடல்நிலையும் சகஜ நிலைமை அடையும்.

தனுசு: தனித்துமான மங்கையரே! தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைப்பதிலேயே குறியாய் இருப்பீர்கள். உங்க வாக்குவன்மை ஓங்கும். புதிய பொருட் சேர்க்கை ஏற்படும். பணப் பிரச்னை தீரும் நேரமிது.

மகரம்: மகராசின்னு பேர் எடுக்கும் மங்கையர்கரசிகளே! உங்க குடும்பம் ஒருபடி முன்னேறி பெருமையடைய இருக்கிறது. சுபச்செலவு இருக்கும். உங்களுக்கு ஒரு கௌரவப் பதவி கிடைக்கும். பத்திரிகையில் பெயர் வரும். தூள் கிளப்புங்க.

நடக்குமென்பார்; நடக்கும்!

துலாம்: தும்பைப் பூப்போல மனம் கொண்டவர்களே! நீண்ட நாள் மனக் கவலை மாற இருக்கிறது. அட! நீங்க ஆசைப்பட்ட ஆபரணம் ஒன்றை வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்து வந்து சேரும். திடீர்ப் பிரயாணம் சாத்தியம் உண்டு.

விருச்சகம்: வித்தியாசமாக யோசிக்கும் தாரகைகளே! நெருங்கியவர்களை விட்டு விலக நேரிடும் (கொஞ்ச காலத்துக்குத்தான் அப்ப தானே அருமையும் பெருமையும் தெரியும்) புது வியாபாரம் துவங்கும் நேரம். வீடு மாற வேண்டியிருக்கும். மாற்றம் உற்சாகமாக்கும்.



கும்பம்: குதூகலத்தைத் தவற விடாத வனிதையரே! இருப்பிடம் மாறும் சூழல் வரலாம். மனச்சஞ்சலம் தீரவிருக்கிறது. பாகப்பிரிவினை உங்களுக்கு சாதகமாகலாம். குழந்தைகளைப் பற்றிய கவலை தீரும்.

மீனம்: மீட்பின் சூட்சுமம் அறிந்த அன்பரசிகளே! கௌரவமான வாழ்வு அமையும். புதிய வேலைவாய்ப்பு தேடி வரும். குழந்தைகளால் சுப காரியம் நிகழும். கணவருக்கு உங்களால் பெருமை கூடும். உறவுகள் மேம்படும். ○

பயணம்

காலையில் பெய்த மழையினாலா அல்லது எப்போதுமே இப்படித்தானா என்று தெரியவில்லை. கல் பாவிய அந்தச் சிறிய பாதையெல்லாம் நசநச வென்றிருக்கிறது. எதிரே வரும் மனிதர்கள், அருகில் வரும் சைக்கிள் அல்லது மாடு... இல்லாவிட்டால் ஆங்காங்கே நீட்டிக் கொண்டிருக்கும் கடையின் பலகைகள் இப்படி எதிலாவது இடித்துக் கொள்ளாமல் நம்மால் நடக்க முடியவில்லை. இடையிடையே பயமுறுத்தும் மோட்டார் சைக்கிள்கள் வேறு! இப்படி இடித்துக்கொள்வது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்ற ரீதியில் நடக்கும் மக்கள். வாரணாசியின் சிறிய சந்துகளைப் பற்றி... நிறையப் படித்திருந்தாலும் பார்க்கும் போது ஆச்சரியத்தைத் தவிர்க்க முடியவில்லை.

உலகப்புகழ் பெற்ற காசி விஸ்வநாதர் கோயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். ''இந்தச் சந்தில் போனால் 5 நிமிடம்'' என்று உள்ளூர்க்காரர் சொன்னதை நம்பி கடந்த 15 நிமிடங்களாக நடந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு சந்தின் முடிவிலும் கோணல் மாணலாக எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களையும் அம்புக்குறிகளையும் கடந்து சற்றே பெரிதாக இருக்கும் அந்தக் குறுகிய தெருவில் ஒரு நுழைவாயில். பிரம்மாண்டம், ஆடம்பரம் எதுவும் இல்லாத அந்த நுழைவாயிலின் அருகிலிருக்கும் போலீஸ் சோதனைச் சாவடிகள், கெடுபிடிகள் எல்லாம் அதுதான் கோயில் என்பதைத் தெரிவிக்கின்றன.

வெண்சலவைக்கல் விரிந்திருக்கும் ஒரு பரந்த முற்றத்தில் நடுவே நான்கு புறமும் வாயில்கள் கொண்ட ஒரு மண்டபம். அதுதான் சன்னிதி. நடுவே தரையின் நடுவில் தரையிலேயே மூர்த்தி. சுற்றி நான்கு புறமும் பூஜை செய்யும் அர்ச்சகர்கள். அவர்கள் தங்கள் உடலாலும், பூஜைப் பொருட்களாலும் நுழைவு வாயிலை மறைத்துக்கொண்டிருப்பதாலும் அதற்கு வெளியே மக்கள் நெருக்கியடித்துக்கொண்டு நிற்பதாலும் நமக்கு சன்னிதி, ஸ்வாமி எதுவும் தெரியவில்லை.

அபிஷேகம் ஆரத்தி முடிந்து கூட்டம் கலைந்தபின் அருகில் சென்று பார்க்கிறோம். வெள்ளியிலான நாக கவசம் அணிவிக்கப்பட்டு, பளீரென்று சிவப்பு, மஞ்சள் மலர்களில் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார் விஸ்வ



* வாரணாசி

தாயே

நாதர். தரிசனத்துக்குப் பின்னர் வெளியே வந்த நாம் இப்போது மற்றொரு சந்தின் தொடக்கத்திலிருக்கிறோ மென்பதைப் புரிந்து கொள்ள சில நிமிடங்களாகின் றன.

மகாகவி பாரதியார் இங்கு சிலகாலம் வாழ்ந்திருக் கிறார். அந்த இடத்தில் அவருக்குச் சிலையிருப்பது அறிந்து, பார்க்கத் தேடிச் செல்கிறோம். அதிகம்பேர் அறியாத அந்தச் சிலையிருக்குமிடத்தை அருகிலிருக் கும் பால் கடைக்காரர் ஆக்கிரமித்திருக்கிறார். நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்து... என்று புலம்புவதைத் தவிர வேறு வழி யில்லை. நண்பர்கள் சொல்லியிருந்த மணிகர்ணிகா கட்டம் அருகிலிருப்பதை அறிந்து போனோம்.

''இந்த மணிகர்ணிகா கட்டத்தில் குளிப்பது மிகப் புண்ணியம், சிவபிரான் ஸ்நானம் செய்த கட்டம், இதன் அருமை பலருக்குத் தெரியாது. நீங்கள் கட் டாயம் குளியுங்கள். புண்ணியம்'' என்று சொன்ன அந்த ரிக்ஷாக்காரரை அனுப்பிவிட்டு, குறுகிய பாதை யின் முடிவிலிறங்கும் படிக்கட்டுகளைக் கடந்து கங்கையைப் பார்க்கும் நமக்கு ஏமாற்றம். கலங்கிய கறுப்பு வண்ணத்தில் மிக மோசமாக, குப்பைகளுடன் வரும் கங்கை! நகரின் கழிவுநீரை நதியுடன் இணைக் கும் ராட்சத சைஸ் குழாய்கள் ... நிர்வாகம் எப்படி இந்தப் படித்துறையில் குளிக்க அனுமதிக்கிறது?

ரமணன்

என்பதை விட, புண்ணியம் தேடும் வெறியில் புத்திசாலித் தனத்தையே இந்த மனிதர்கள் இழந்து விட்டிருக்கிறார்களே என்பதுதான் ஆச்சரியமாக இருக் கிறது.

மணிகர்ணிகா கட்டம் அரு கிலேயே காசிநகரின் இடுகாடு, தினசரி 50-100 உடல்கள் தகனம் செய்யப்படும் இந்த இடத்தில் வசூலிக்கப்படும் 'கட்டணம்' உலகப் புகழ் பெற்றது. விலை யுயர்ந்த சபாரி சூட், கையில் தங்கப்பட்டையில் கடிகாரம், சட் டைப் பையில் தங்கப் பேனா, கையில் தொடர்ந்து ஒலிக்கும் செல்ஃபோன் என ஒரு பிஸினஸ் மேன் போலக் காட்சியளிக்கும் அந்த மனிதர்தான் இந்த இடத்தின் ராஜா. ஆமாம்; அவர்தான்


வணக்கம்!



தலைமை வெட்டியான் சத்திய நாரா யண சௌத்திரி. பரபரப்புடன் இயங் கும் அவரின் கீழ் ஆறு உதவியாளர் கள் எரியும் சிதைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மெலிந்த, உயர்ந்த உருவம், தீர்க்கமான முகம், பளிச்சென்ற கண் களுடனிருக்கும் அந்தச் சிறுவன், ''படகில் சென்று சுத்தமான கங்கை யில் நிம்மதியாகக் குளிக்க விரும்பு கிறீர்களா?'' என்று பணிவான ஆங் கிலத்தில் கேட்ட விதம், எவரையும் 'யெஸ்' சொல்ல வைக்கும். படகில் ஏறிய பின்னர்தான் தெரிகிறது ஓட்டப் போவது அந்தப் பையன் இல்லை, அவரது குடும்பப் படகுக்கு அவர் மார்க்கெட்டிங் அதிகாரி என்பது! பரந்து விரிந்திருக்கும் அந்த கங்கைக் கடலில் சீறி வரும் புது வெள்ளத்தில் சீரான வேகத்தில் படகு சென்று நிற்கும் இடம் ஒரு மணல் திட்டு. ஒரு கரையில் ஸ்நான கட்டங்களும் மறுகரையில் பழைய பனாரஸ் நகருமிருக் கும் கங்கை நதியின் நடுவே, இது போல பல திட்டுக்கள். சொன்னது போலவே நதி சுத்தமாக ஓடுகிறது. இறங்கிக் குளிக்க வசதியாக, படகிலிருந்து கயிறு கட்டித் தரு கிறார்கள். எப் படி பாதுகாப் பாகக் குளிக்க வேண்டும் என சொல்லித் தரு





❋ கங்கைக்கு ஆராதனை

மிந்தப் படகோட்டிகள், கங்கையிலேயே பிறந்து வளர்ந்து மடிபவர்கள்.

மாலையில் கங்கா ஆரத்தியை நதி யிலிருந்தே பார்க்கலாம் என அழைத்துப் போகிறார்கள். சில்லென்ற காற்றின் சுகத் தில் படகுப் பயணத்தை அனுபவித்துக் கொண்டே ஆரத்தி கட்டத்தை நெருங்கு கிறோம்.

படிகளினிடையே பலகை யினால் நிறுவப்பட்ட சிறிய மேடையில் தங்க மாய் மின்னும் ஒரு குட்டி மண் டபம். உள்ளே முகம் மட்டும் தெரியும் கங்காமாதா. அருகில் பூஜை சாதனங்கள். பக்கவாட் டில் பக்கத்துக்கு இரண்டாக நாலு சிறிய மேடைகள். அதிலும் பூஜைப் பொருட் கள். இரவு ஏழு மணி நெருங்குகிறது. படி களில் கூட்டம் வழி கிறது. மின்விளக்கு வெளிச்சத்தில் தக



தகவெனப் பளபளக்கும் ஆரஞ்சு நிறப் பட்டாடையில் பூஜை மேடை அருகே கம்பீரமாக நிற்கும் இளைஞர்கள். டாணென்று ஏழு மணிக்கு அறிவிப்பைத் தொடர்ந்து நடுமேடையில் வந்தமரும் தலைமைப் பூசாரி பூஜையைத் தொடங்குகிறார். தீபங்கள் ஏற்றப்படுகின்றன.



* பாரதி நினைவிடம்

இசைக் குழுவின் ஆரத்திப் பாடல் ஒலிக்கிறது. ஒவ்வொன்றாக ஏழுவிதமான தீபங்கள், படியிலிருந்து கங்கையை நோக்கி மூன்று திசைகளுக்கும் காண்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் ஐந்து பேரும் இசையுடன் இணைந்து துல்லியமான அசைவுகளைக் கூட ஒரு பிசிறில்லாமல் தேர்ந்த நடனக் கலைஞர்களைப் போல நேர்த்தியாகச் செய்யும் அந்தக் காட்சி நம்மைப் பிரமிக்க வைக்கிறது. கனமான அந்தக் கொதித்துக் கொண்டிருக்கும் தீபங்களை ஒருகையில் தூக்கிச் சுழற்றிக் கொண்டே மறுகையில் கனமான மணியை அடித்துக்கொண்டே ஒரு காலில் மண்டியிட்டு நான்கு பேரும் ஒரே நேரத்தில் வினாடி பிசகாமல் திரும்புகிறார்கள்.

இறுதியில் பல அடுக்கு விளக்குகளுடன் ஆரத்தி. உச்சஸ்தாயியில் இசைக் குழுவின் குரல். பக்திப் பரவசத்தில் மக்களின், **'கங்காமாதாகீ ஜே'** என்று ஓங்கி ஒலிக்கும் குரல்களின் பின்னணியில் மூன்று முறை சுழற்றப்படும் அந்தப் பெரிய தீபம் மக்களை நோக்கிக் காட்டப்பட்டு, பிறகு அணைக்கப்படுகிறது. காத்திருக்கும் மக்கள் தங்கள் கைகளில் புஷ்பங்களுடன் இலைகளில் வைத்திருக்கும் சிறு தீபங்களை மிதக்க விடுகிறார்கள். சில நிமிடங்களில் நூற்றுக்கணக்கில் நம் படகைக் கடந்து செல்லும், மிதக்கும் அந்த மின்னும் நட்சத்திரங்களை ரசித்த வண்ணம் கவனமாக அருகில் நிற்கும் படகுகளில் மாறி மாறி நடந்து கரையிலிருக்கும் அந்த ஆரத்தி இசைக் கலைஞர்களை நெருங்குகிறோம். ஆர்மோனியம் வாசித்துக்கொண்டே பாடியவரையும் தபேலா வாசித்த கலைஞரையும் பாராட்டக் கை நீட்டும் நாம், அவர்கள் முகத்தைப் பார்த்ததும் சற்று அதிர்ந்து போகிறோம். தினசரி பல ஆயிரம் கண்கள் பார்க்கும் அந்த அற்புதமான ஒளி வழிபாட்டுக்கு உயிர் தரும் இசையை வழங்கும் அந்தச் சகோதரர்களால் அதைப் பார்க்க முடியாது. ஆம்; அவர்கள் விழிகளில் ஒளியில்லை.

அந்த அற்புதமான ஒளி வழிபாட்டுக்கு உயிர் தரும் இசையை வழங்கும் அந்தச் சகோதரர்களின் விழிகளில் ஒளியில்லை

மனித வாழ்க்கைதான் எவ்வளவு ஆச்சரியங்களைக் கொண்டதாயிருக்கிறது!

படங்கள்: **ரமணன்**

நட்சத்திர சிறுகதை 6



ஆகாசத்தில் மிதக்க முடியும் இப்போது. இரண்டு கைகளையும் அகல விரித்துப் பருந்து போலப் பறக்க முடியும். சலனமில்லாத வெட்டவெளியில் அலுங்காத மிதவை போல, இரண்டு இறக்கைகள் முளைத்திருந்தன. அதற்கு இத்தனை வலுவும் சாத்தியமும் உண்டு என்பது திகைப்பை அளித்தது. தன்னுள் ஏற்பட்ட பரவசத்தைக் கட்டுப்படுத்த இயலாமல், அந்தப் பரவசமே உந்துசக்தியானதுபோல அவள் கைகளை, இறக்கைகளாக மாறிப் போன கைகளை அகல விரித்தாள். கைகள் நீண்டுகொண்டே போயின. உடல் அனாயாசமாக மேலே எழும்பிற்று. சின்னப் பெண்ணைப் போல கெக்கிலி பிக்கிலி என்று சிரிக்கத் தோன்றிற்று. சலங்கை ஒலியாக வெளிப்பட்டு வெட்டவெளியில் கலந்தது. அவளைச் சுற்றித் தவழ்ந்த மேகங்களின் ஊடாக எதிரொலித்தது. சிரித்தபடியே கிழே நோக்கியபோது, இறக்கைகளின் நீண்ட நிழல் நிலத்தில் சீரான கோடு விரித்திருந்தது. நிலத்தில் ஒட்டாமல், அதன் ஓசைகளைக் கேட்காமல், சுமையே இல்லாமல் பறக்கையில் மனசு இறகைப் போல லேசானது. சுலபமாகச் சிரிக்க முடிந்தது. கிலுகிலுப்பையைச் சுழற்றினதைப் போல. உடம்பே கிலுகிலுப்பையாகக் குலுங்கிற்று. அம்மாவின் இடுப்பில் அமர்ந்திருந்தபோது வெடித்த சிரிப்பு.

'எதைப் பாத்துடீ இத்தனைச் சிரிப்பு?' அம்மா கன்னத்தை மழிக்கிறாள்.

இதுக்கு எதைப் பாத்தாலும் சிரிப்பு.

''ராதா!''

''ராதா!''

கண்மடல்கள் திறந்தபோது அதரங்களில் இன்னமும் புன்னகை இருந்தது. கைகளை நீட்டினாள். இருளில் உருவமற்றுப் போயிருந்தன. கலவரத்துடன் கண்



அவளது தேர்வு

வாஸந்தி



களைச் சுழற்றியபோது ஜன்னல் திரைச் சீலைகளின் விளிம்பைப் பிடித்தபடி நரேன் நிற்பது தெரிந்தது. அறைக்கப்பால் இருந்த தெரு விளக்கின் மங்கிய ஒளியில் கரிய நிழல் உருவம் போல. அவள் சரேலென்று எழுந்து அமர்ந்தாள்.

''நரேன் அங்க என்ன பண்ணறீங்க?''

அவன் திரும்பவில்லை.

''நரேன்!''

அவன் மெல்லத் திரும்பினான். மேகம் படர்ந்த கண்களில் இனம் புரியாத தீவிரம் தெரிந்தது. ''உஷ்'' என்றான் அவன். ''இத்தனை நேரமா கூப்பிடறேன். நீ ஏன்னு கேக்கல்லே. இங்க வந்து பாரு. எத்தனை மயில்கள் வந்து நிக்குது. தோகை விரிச்சு ஆடுது. நீ ஆடற நாட்டியத்தைவிட நல்லா ஆடுது.''

தன் பேச்சை அவனே ரசித்தது தெரிந்தது. அவன் சிரிக்கிறானா என்று தெரியவில்லை. மனசுக்குள் சிரித்தாலும் முகத் தசைகள் வெளிக்காட்டாது.

அவள் ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

''வந்து பாக்கல்லே?''

அவள் நிதானமாக எழுந்தாள். சற்று முன் லேசாகியிருந்த மனசு கனத்திருந்தது. அவனருகில் சென்று நின்றாள். அவன் பரவசத்துடன் பார்த்துக்கொண்டிருந்த வெளியைப் பார்த்தாள். மங்கலான தெரு விளக்கு வெளிச்சத்தில் தெரு வெறிச்சோடிக்கிடந்தது.

அவன் தோகை விரித்தாடும் மயில் அசைவதுபோல தானும் அசையும் கற்பனையில் உடம்பை அசைத்தபடி அவளைப் பார்த்தான்.

''எத்தனை அழகாயிருக்கு இல்லே? உன்னாலே இப்படி ஆட முடியுமா?''

அவனை யதார்த்தத்துக்கு இழுக்கும் வெறி அவளை ஆட்கொண்டது.

''அங்கே எதுவுமே இல்லே. சும்மா ஏதோ கற்பனை பண்ணிக்கிட்டு தூக்கத்தைக் கெடுத்துக்கிறீங்க. படுங்க வாங்க.''

''நீ போய்ப் படு!''

அவன் குரலில் இருந்த வேகமும் ஆத்திரமும் சாட்டையடியாய் அவளைப் பின்னுக்கு நகர்த்தின.

''உன் கண்ணுக்குத் தெரியாது ஏன்னா உனக்கு ரசனை இல்லே. நா ரசிக்கிறதை ஏன் தடுக்கறே?''

அவள் பேசாமல் படுக்கைக்குச் சென்றாள். 'பொறுமை, பொறுமை' என்று தனக்குள் ஜபித்துக் கொண்டாள். அவன் ஏதோ வெகு நேரத்துக்கு முணுமுணுத்துக் கொண்டிருந்தான். என்ன சொற்கள் அவை

ஆம்பிளப் பையனுக்கு என்டா வேலை?



என்பதைப் புரிந்து கொள்ளும் யத்தனத்தை அவள் நிறுத்தி வெகு நாட்கள் ஆகிவிட்டன.

அவன் எப்போது வேண்டுமானாலும் படுத்துக் கொள்ளட்டும் என்று அவள் சுவர்ப் பக்கம் திரும்பிப் படுத்தாள். நாளைக்கு வழக்கம்போல வேலைக்குக் கிளம்ப வேண்டும். அவனுடன் வாதத்தில் ஈடுபட்டால் தூக்கம் கெட்டதுடன், நிம்மதியும் கெடும். ஏற்கெனவே தொலைந்து போன ஒன்று.

தூக்கம் வரவில்லை. அது வராது என்பதால் அதற்கு முயற்சிக்கக் கூட இல்லை. மந்திரம் போல புரியாத வார்த்தைகள் சரளைக் கற்களை உருட்டுவதுபோல கேட்டவண்ணம் இருந்தன. அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் இன்னும் தெருவைப் பார்த்தபடி பேசிக்கொண்டிருந்தான். இரவு மணி மூன்றிருக்கும். அவள் மெல்ல எழுந்தாள். அவனருகில் சென்று அவன் கையைப் பற்றினாள்.

''நரேன், வாங்க, படுங்க. மயிலுங்க போயிடுச்சு.''

''எங்கே?'' என்றான் அவன் விறைப்புடன்.

''காட்டுக்குப் போயிருச்சு. போகுது பாருங்க.''

அவன் மீண்டும் வெளியைப் பார்த்தான்.

ஆவேசத்துடன் மறுக்கப் போகிறான் என்று அவள் நிற்கையில், 'அப்ப சரி' என்று அவள் தோளைப் பற்றிக்கொண்டு நடந்தான். தடுமாறும் அவனைப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்தி, ''இப்பத் தூங்குங்க'' என்று சொல்லும்போது ஏதோ சாதித்துவிட்டது போல இருந்தது.

கண்ணை மூடிப் படுத்திருந்த அவன் முகத்தைச் சற்று நேரம் பார்த்தபடி அவள் நின்றாள்.

'ஈசுவரா' என்று கூவ வேண்டும் போல்

இருந்தது. எதற்கான தண்டனை இது என்று எப்போதும் எழும் கேள்வி மீண்டும் எழுந்தது. யாருக்குத் தண்டனை?

திடீரென்று சோர்வு உடலை அழுத்தியது. படுக்கையில் படுத்து உடலை ஒருக்களித்து தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். முன்பெல்லாம் உடல் சோர்வுடன் மனசும் சோர்ந்து கண்களிலிருந்து ஆறாய் நீர் பெருகும். இப்போது நீரே வருவதில்லை. சோர்வு மறைந்ததால் அல்ல. நரேனுக்கும் சேர்த்து யதார்த்தத்தை உணர்ந்து கொண்டதால். ஆனால் இந்த விவேகம் சுலபத்தில் வரவில்லை. கிட்டத்தட்ட 20 வருடங்களாகச் சுமந்து வரும் பாரம் அது. எங்கே இறக்குவது அதை என்று புரியவில்லை. அதை அவளேதான் சுமந்தாக வேண்டும் என்பது பல வருஷங்களுக்குப் பிறகுதான் விளங்கிற்று. அதுவரை அலைபாய்ந்த மனசைக் கட்டுப்படுத்த இயலாமல் எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்று ஆலாய்ப் பறந்தது. மருத்துவருக்கு அள்ளிக் கொடுப்பதோடு நாடி ஜோசியர், தேவி உபாசகர், கணித ஜோதிடர் என்று பலரை, பித்துப் பிடிக்கும் அளவுக்குத் துளைத்தெடுத்தாகிவிட்டது.

ஏன்? ஏன் எனக்கு இப்படி ஆகணும்? என்ன தப்பு செஞ்சேன்?

நேற்று தொலைக்காட்சியில் கண்ட அந்தப் பேட்டி நினைவுக்கு வந்தது. லேசாக மனத்துள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. முன்னாள் மகாராணி ஒருவருடன் நடத்தப்பட்ட பேட்டி. ஓராண்டுக்கு முன் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். நேற்றுதான் அவர் இறந்ததாகச் செய்தி வந்தது. அவரது இளமைக் காலத்து அசாதாரண அழகு முகம்கொண்ட புகைப்படங்கள் இடையில் காட்டப்பட்டன. பேட்டியில் தெரிந்த முகம் அருளற்று வண்ணம் தேய்ந்த ஓவியம் போல இருந்தது. ஆனால் கேள்விகளுக்கு நறுக்குத் தெறித்தாற்போல பதில் வந்தது. எதிர்க்கட்சி அரசியலில் பங்கு கொண்டதால், பொது வாழ்வில் ஏற்பட்ட பாதிப்புகளை ராஜ கம்பீரத்துடன் சுருக்கமான வாக்கியங்களில் 90 வயதை நெருங்கும் ராணி தீர்மானமாக வெளிப்படுத்தியது அசத்தலாக இருந்தது. ஆங்கிலேயர் போன்ற ஆங்கில உச்சரிப்பு. ஷிஃபான் சேலை. குட்டை முடி. கச்சிதமான சொற்கள். முற்போக்குச் சிந்தனையும், உயர் பண்புகளும் கொண்ட, நாகரிகத்தின் மொத்த உரு என்று அவள் சொக்கிப்போன தருணத்தில் தரை இறங்கவேண்டியிருந்தது.

'நீங்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அரண்மனையில் ரெய்ட் நடந்ததாமே?' என்ற கேள்விக்கு ராணி நிதானமாகப் பதிலளித்தார். 'ஆமாம் நடந்தது வெகு நேரம் - இல்லாத ஒன்றின் வேட்டைக்காக. அரசியலுக்குச் சம்பந்தமே இல்லாதவர்கள் வாழ்ந்த பகுதியிலும் கூட. என்னை வளைக்க எதுவுமே கிடைக்கவில்லை அவர்களுக்கு. பிறகு என்ன நடந்தது தெரியுமா? நான் கேள்விப்பட்

விளையாடிக் கொண்டிருந்த என் சக வயதுச் சிறுமிகளில் ஒருத்தி முதன் முதலாய்ச் சொன்னாள், "பொம்பளப் பசங்க விளையாடுற இடத்தில் ஆம்பிளப் பையனுக்கு என்னடா வேலை?" என்று. சிற்றில் சிதைத்து வரிப்பந்து கொண்டோடிய சங்கச் சிறுவன், என் வழியே குவிந்திருந்த அஞ்சாங்கற்களை வாரியிறைத்தான். எனக்குப் பின்னாலும் அச்சிறுவன் ஆட்டத்தைக் கலைக்கிற பணியைக் காலகாலத்துக்கும் செய்துகொண்டிருப்பான் போலும்...

(கவிஞர் பச்சியப்பன் ஒரு முன்னுரையில்)

தகவல்: சசி, படம் : பாலு விஜயன்

டேன். ரெய்ட் நடத்தியவர்கள் அனைவரும் வாழ்வில் பின்னாளில் துன்பியலைச் சந்தித்தார்கள்.'

'சாபம் என்கிறீர்களா?'

'எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் வீட்டில் ஏதோ சோகம் நடந்தது.'

அதை ராணி மிக அழுத்தமாக இரண்டு முறை சொன்னார்.

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கிராமத்துப் படிப்பறிவில்லாத பெண் கை விரல்களைச் சொடுக்கி சாபமிடுவது போல் இருந்தது. ரெய்ட் நடந்த அன்று அவர் அப்படிச் செய்திருப்பார் என்று தோன்றிற்று.

என்னை யாராவது அப்படி சாபமிட்டிருப்பார்களா?

யாரிட்ட சாபம் எனக்கு? எதற்கு சாபம்?

அதற்கெல்லாம் உண்மையிலேயே அர்த்தம் உண்டா? எண்ணங்களுக்கு அத்தகைய வீர்யமும் கொடூரமும் இருக்குமா? 90 வயது ராணியின் பேச்சில் இப்பவும் அதன் சாயல் இருப்பதாகத் தோன்றிற்று, எனக்கு யார் மீதும் கோபம் இல்லை என்று வாய் திரும்பத் திரும்பச் சொன்னாலும்.

மேஜையில் இருந்த டைம் பீஸ் ஆறு மணி என்று ஒலித்தது. அவள் சட்டென்று சுய நினைவு வந்து எழுந்தாள். நரேன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். எட்டு மணிக்கு அவனைக் கவனித்துக் கொள்ளும் பணியாள் கோபு வந்துவிடுவான்.



"எனக்காகத்தான் நா சிங்காரிச்சுக்கறேன். என்னைப் பாத்து யாரும் பரிதாபப்பட வேண்டிய அவசியமில்லை என்கிறதுக்காக."

அவள் அவசரமாகச் சமையல் வேலையை முடித்து, நரேனுக்குத் தேவைப்பட்டதை மூடிவைத்து, பிரெட் டோஸ்ட் செய்து அதைச் சாப்பிட்டபடியே அலுவலகத்துக்குத் தயார் ஆனாள். படுக்கை அறைக்குச் சென்று பார்த்தபோது நரேன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். இரவு முழுவதும் தூங்காமல் கற்பனை பிம்பங்களில் உழன்றவனுக்கு இந்தத் தூக்கம் தேவை என்கிற சமாதானத்துடன் நிலைக் கண்ணாடியில் மறுபடியும் தன் உருவத்தைப் பார்த்துவிட்டுக் கிளம்பும்போது, நரேன் அன்று கேட்டது நினைவுக்கு வந்தது.

'யாருக்காக இந்தச் சிங்காரம்?'

கேட்டபோது ஒரு விநாடி அவள் திகைத்து நின்றாள். அவனுடைய நிலையை மறந்து அன்று சுரீரென்று கோபம் வந்ததும், பிறகு தன்னை அடக்கிக் கொண்டதும் நினைவுக்கு வந்தது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் சொன்னாள்.

'யாருக்காகவாவதுதான் சிங்காரிச்சுக்கணுமா என்ன?'

'ஆமாம்.' என்றான் அவன் அழுத்தமாக.

'உங்களுக்காகத்தான் செய்துக்கறேன் நரேன்!'

'பொய்!' என்றான் அவன் ஆக்ரோஷமாக. 'நாள் முழுக்க என் எதிரவா உட்

கார்ந்திருக்கே?'

'நான் முழுக்க உங்க எதிரே உட்கார்ந்திருந்தா சோறு எப்படி கிடைக்கும்?'

தடால் என்று அவன் கைக்கு அகப்பட்ட மேஜையைத் தள்ளினான். அதன் மீதிருந்த புத்தகங்கள், பேனாக்கள், கண்ணாடி பூஜாடி, அதனுள் இருந்த பூங்கொத்து எல்லாம் தரையில் உருண்டன. ஜாடியின் நீர் சிறு நதியாய் தரையில் கோலமிட்டது. கண்ணாடித் துண்டுகள் பொடிப் பொடியாய்க் கீழே சிதறியிருந்தன. அவன் அதையெல்லாம் யாரோ செய்த வேலை போல திகைப்புடன் பார்த்தபடி நின்றான். அவனது உடல் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது, விழுந்து விடுவான் போல.

தான் பேசியது தவறு என்று அவள் உடனடியாக உணர்ந்து கொண்டாள்.

அவனருகில் சென்று, 'உட்காருங்க. நா சுத்தம் செய்துடறேன்' என்றாள் மெல்ல. அவனைப் பிடித்து நாற்காலியில் உட்கார்த்தியபோது, அவன் அதற்குள் நடந்தவற்றை மறந்திருப்பான் என்று அவளுக்குத் தெரியும்.

அவனுள் ஒரு கணத்துக்கேனும் வெளிப்பட்ட கோபம் அடிமனத்தில் கனன்று கொண்டிருக்கக் கூடிய அவன் உணராத அக்னிப் பொறி என்கிற பிரக்ஞை அவளைத் தாக்கிற்று. என்னை எப்படி நிரூபிப்பேன்? சீதைபோல தீக்குளிக்கவா?

அவனுக்கு இப்போது ஏதும் செவியில் விழாது என்கிற தைரியத்தில் அவள் சொன்னாள். 'எனக்காகத்தான் நா சிங்காரிச்சுக்கறேன். என் ரசனைக்காக. என்னைப் பாத்து யாரும் பரிதாபப்படவேண்டிய அவசியமில்லை என்கிறதுக்காக.'

உன் புருஷனுக்கு உடம்பு சரியில்லையாமே? ஐயோ பாவம். என்ன உடம்பு?

அதுவா? ஐய்யோ, அது ரொம்ப தொல்லையான நோய். ஏதோ ஆஸ்பத்திரிக்குப் போனோமா... குணமாகி வீட்டுக்கு வந்தோமான்னு இருக்காது. நரம்புக்கு மூப்பு மூளைக்கு மூப்பும்பாங்க. இத்தனை சின்ன வயசிலேயே வந்திட்டதா? வருஷக்கணக்கிலே வீட்டிலே வெச்சுப் பாத்துக்கணும் இவளே, எப்படி சமாளிப்பே?

அவள் மீண்டும் படுக்கையறைக்குச் சென்று பார்த்தாள். அயர்ந்த நித்திரையில் இருந்தான். தூங்கட்டும் என்று அவள் வெளியே வந்தாள்...

(தொடரும்)

கரெக்டா சொல்லுடி

''கவலைப்படாதே... நீ லவ் பண்றவனோட தான் உனக்கு கல்யாணம் நடக்கும்.''

''இப்படி மொட்டையா சொன்னா எப்படி? யார்னு கரெக்டா சொல்லுடி...''

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்




நூல் அறிமுகம்

வார்த்தையைப் பாதுகாப்பது எப்படி?


வள்ளல் பெருமானின் சிறப்புமிகு சிந்தனைகள் - டாக்டர் எஸ்.குலசேகரன், வெளியீடு: ஜி.பாலமுரளி, 36, சலாம்பாய் தெரு, குடியேற்றம் சாலை, காட்டுப்பாடி -632 007. விலை ரூ.30/-


இறைவனை அன்பு மயமாகக் கண்டவர் வள்ளலார். 'எல்லா உயிர்களையும் தமது உயிர்போல் நினைத்து சம உரிமை வழங்குபவரின் மனதில்தான் இறைவன் வாழ்கிறான்', 'உண்மையைச் சொல். அது உனது வார்த்தையைப் பாதுகாக்கும்' - இவை போன்ற எளிய அருளுரைகள் வள்ளல் பெருமானின் வாக்கு. ஆன்மதாகம் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கும் அவரது சிந்தனைகளின் தொகுப்பே இந்நூல்.



இதயம் - கேள்வி பதில் பாணியில் A To Z விளக்கங்கள். டாக்டர் கே.எம். செரியன், வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002. விலை ரூ.60/-

இதயத்தில் ஏற்படும் நோய்கள், இதய அறுவை சிகிச்சை, பைபாஸ் அறுவை சிகிச்சை, ரத்தக் குழாய்களில் கொழுப்பு சேருவதை எப்படித் தடுப்பது... இப்படிப் பல்வேறு விளக்கங்கள் இந்நூலில் தரப்பட்டள்ளன. இதய தானம் குறித்த விழிப்புணர்வையும் வாசகர் மனத்தில் தூண்டும் நூல்!





ஆனந்தரங்கப்பிள்ளை வி-நாட் குறிப்பு - சிரீமுக ஆண்டு (1753 - 1754) ஓர்சே மா.கோபால கிருஷ்ணன், வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர் சாலை, சென்னை - 600 014. விலை ரூ.200/-

பிரெஞ்சு ஆதிக்கத்தை, புதுச்சேரியைத் தாண்டி தமிழகமெங்கும், தென்னிந்தியா முழுவதும் கொண்டுவரும் நோக்கத்தோடு வந்தவர் பிரெஞ்சு ஆளுநர் 'துப்பிரேச்ச.' இவரது உதவியாளராகப் பணிபுரிந்த ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்புகள் அக்காலத்தின் வரலாற்றுச் சான்றாகக் கருதப்படுபவை. 1753 - 1754ம் ஆண்டில் அவரால் எழுதப்பட்ட நாட்குறிப்புச் செய்திகளின் தொகுப்பு இந்நூல். வரலாற்றுப் பிரியர்களுக்கு சுவாரஸ்யமான செய்திகளைக் கூறும் நூல்.

- நேயமுகில்



எனக்கு 3000 பிள்ளைகள்!



“நாங்க விவசாயக் குடும்பங்கள். பதினொன்றாவது படிக்கும்போதே பக்கத்திலே மோகனூர்ல கட்டிக் கொடுத்துட்டாங்க. வீட்டுக்காரர் சுப்பிரமணியன் எல்லைப் பாதுகாப்புப் படையிலே வேலை பார்க்கிறார். அஸ்ஸாம், காஷ்மீர்னு அவரோடயே பதினேழு வருஷம் இருந்தேன். ஒரு நாள் ‘இத்தனை வருஷமா பார்க்கறே... என்னோட வேலை எப்படின்னு உனக்கு தெரிந்திருக்கும். நீ உன் சொந்தக் கால்ல நிற்கணும்’ என்று சொன்னார். அவர் சொன்னது எனக்கு பகீர்னு இருந்தாலும், அதற்குள் பொதிந்திருந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டேன். என் பையனும், பெண்ணும் சுயமாக நிற்கும் அளவுக்கு வளர்ந்து விட்டார்கள். என்ன பண்ணறதுன்னு யோசிச்சேன். குடும்பத் தொழிலான விவசாயம் தான் பலிச்சென்று தோன்றியது. மோகனூரில் சுமார் மூன்று ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுத்துவிட்டு, என்னவர் கிளம்பிப் போய் விட்டார்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல ஆகிவிட்டது. என் நிலத்தில் 3000 கன்றுகள் நட முடியும். வாழையை வளர்க்கறது சாதாரண விஷயமில்லைங்க. நம்ம பசங்களை கவனிக்கறதைவிட உன்னிப்பா கவனிக்கணும். என்ஜினீயரிங் படிக்கற என் பொண்ணு ‘அம்மாவுக்கு 3000 பிள்ளைங்க... அப்புறம்தான் நாங்க’ என்று சொல்லுவா. கன்று வாங்குறது, நடறது, கிடங்கு வெட்டறது, மூங்கில் கட்டறது, உரம் அடிக்கறது... என்று தொடர்ந்து வேலைகள் இருந்துக்கிட்டே இருக்கும்.

மூங்கில் கட்டறது முக்கிய வேலை. அதனால, காற்றடிச்சா வாழை சாயாது. ஆனாலும் பாருங்க! போன வருஷம் 386 மரம் சூறாவளியில் சாய்ந்து போய்விட்டது. கலங்கிப் போயிட்டேன். இதுபோல அடிக்கடி நடக்கும். தாங்குற பக்குவம் வேணும். ஒரு மரத்தைத் தூக்கி நிறுத்த- மூங்கிலோட வைச்சு சேர்த்துக் கட்ட, நான்கு ஆம்பளைங்க வேணும். இப்ப இரண்டு பொம்பளைங்க துணையோடு மூங்கில் கட்டறேன்.

வறட்சிக் காலத்தில் காவிரியில் ஊத்து போட்டு, பல இரவுகள் மோட்டார் மூலம் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைச்சிருக்கேன்! ‘தைரியமா செய்யறா தவமணி’ என்று பலர் பாராட்டுறாங்க. காசைப்பார்க்க ஒரு வருஷம் காத்திருக்கணும். இன்னும் மின் இணைப்புக்காகப் போராடிட்டு இருக்கேன்.

பாடுபட்டதுக்குப் பலன் இருக்கத்தாங்க செய்யுது. ஆனா விவசாயத்துக்கு எதிர்காலம் இருக்கா என்று யோசனையாத்தான் இருக்கு” என்கிறார் பட்டதாரியான மோகனூர் தவமணி. விவசாயத்தில் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்க முனையும் மத்திய அரசின் உள்ளூர் கமிட்டியில், தவமணி ஒரு உறுப்பினர்.

செய்திச் சித்திரம் : ஸ்ரீநி

ஜெயா டி.வி.யில் ஆதித்யன் கிச்சன் நிகழ்ச்சியில் பல்வேறு வகையான டிஷ்களைச் செய்து அசத்தும் இசையமைப்பாளர் ஆதித்யனை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

''சார் சமையல்ங்கறதே ஒரு அற்புதமான கலை. இசைக்குக் கொடுக்கற முக்கியத்துவத்தை, சமையலுக்கும் கொடுக்கணும். சமையல் கலைக்கு ஆண், பெண் பேதமெல்லாம் கிடையாது. இன்னைக்கு ஜோரா வளர்ந்துக்கிட்டு இருக்கற ஹோட்டல் இண்டஸ்ட்ரியில சூப்பரா சமையல் பண்றதெல்லாம் கேட்டரிங் படிச்ச பசங்கதான்.'' சமையலைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தவரிடம், ''அப்பா... டீ.வி.யிலதான் புதுப் புது



தந்தை மகளுக்கு ஆற்றும் உதவி!

வெரைட்டி டிஷ்களைச் சொல்லித் தருவீங்களா? எனக்கு எதுவும் சொல்லித் தர மாட்டீங்களா?'' - ஆர்வத்துடன் பிரேக் போட்டார் அவரது மகன் பிரார்த்னா.

''சொல்லித் தந்தா போச்சு, காளானைப் பயன்படுத்தி காளான் பாசுமதி ஃப்பிரைட் ரைஸ் செய்றது பற்றிச் சொல்லித் தர்றேன்'' (அட, இதுதான் தந்தை மகளுக்கு ஆற்றும் உதவியோ?) என்றார். ''நறுக்கிய வெங்காயம், நறுக்கிய பூண்டு, சோயாசாஸ், மிளகுத் தூள், கொஞ்சம் சர்க்கரை, கொஞ்சம் உப்பு இதெல்லாம் கொண்டு வா'' என்றார் அப்பா. மகளும் அப்பாவின் கட்டளை ஏற்று இதெல்லாம் கொண்டு வரக் கிளம்பினார். இந்த இடைவெளியில் ஆதித்யன் பாசுமதி அரிசியை நன்றாகக் கழுவி குக்கரில் விசில் வரும்வரை வைத்தார்.

அப்பா சொன்ன அயிட்டங்களை எல்லாம் மகள் சில நிமிடங்களில் கொண்டு வந்தார். மகளிடம் வாணலியைக் காட்டி, ''இதில் கொஞ்சம் எண்ணெய் ஊற்று. அதுக்கும் முன்னாடி அடுப்பைப் பத்த வைச்சுக்க. எல்லாத்தையும் செஞ்சுட்டு அடுப்பை மட்டும் பத்த வைக்க ரொம்ப பேர் மறந்துடுறாங்க'' என்று கலாய்த்தார். ''நறுக்கிய பூண்டு, வெங்காயம், காளான் இந்த மூன்றையும் எண்ணெயில் போட்டு வதக்கணும். காளான் இலேசாக வதங்கும்



வரைக்கும் பொறுமையா இருக்கணும். காளானில் இயற்கையாகவே இருக்கிற நீர் நன்றாக வதக்கறது மூலமா வெளியேறிடும். அப்புறம் பாசுமதி சாதத்தை இதோடு மிக்ஸ் பண்ணணும். அப்புறம் மிளகுத்தூள், சர்க்கரை, தேவையான அளவு உப்பு போன்றவற்றைச் சேர்க்கவும். இரண்டு ஸ்பூன் சோயாசாஸை ஊற்றிக் கிளறவும்'' என்று சொல்லிக்கொண்டே செய்து முடித்தார்.

காளான் ஃபிரைட் ரைஸை ருசி பார்த்த மகள் பிரார்த்னா, ''இந்த மழை சீசனுக்கு ஃபிரைட் ரைஸ் சூப்பரா இருக்கு டாடி'' என்று பாராட்டு மழை பொழிந்தார்.

''இந்த காளான் ஃபிரைட் ரைஸ்க்கு சைனீஸ் ஃபிரைட் ரைஸ் என்ற பெயரும் உண்டு. ரொம்ப சிம்பிளான, சீக்கிரமாகச் செய்ய முடிந்த செலவு வைக்காத டிஷ் இது. இதுக்கு தக்காளி சாஸ் ஊத்திச் சாப்பிட்டா இன்னும் சூப்பரா இருக்கும்'' என்று கிச்சன் டிப்ஸ் கொடுத்தார் இந்த மியூஸிக் மாஸ்டர்.

- ராகவ்குமார்

“எனக்கு இசை உட்பட பல கலைகளில் ஆர்வமும் திறமையும் இருந்தாலும் சமையலுக்கும் இசைக்கும்தான் முதல் இடம். மாநிலத்துக்கு மாநிலம் இசை வேறுபடற மாதிரி சாப்பாடும் வேறுபடும். இசையைக் காதுல ரசிச்சிட்டு, பின்பு மனசால ருசிக்கிறோம். சாப்பாட்டை நாக்கில் ருசிச்சிட்டு மனசால ரசிக்கிறோம். இசைக்கு ராகம், தாளம், பல்லவின்னா சாப்பாட்டுக்கு உப்பு, புளி, காரம், சமையல் கத்துக்கிட்டா மட்டும் சமைக்க வந்துடாது. இசை போலவே அர்ப்பணிப்பு உணர்வு வேணும். ஹோட்டல்களில் விதவிதமா சாப்பாட்டு அயிட்டங்கள் இருந்தாலும் தொடர்ந்து சாப்பிட்டா பிடிக்காது. காரணம் வீட்டுல இருக்கறவங்க சாப்பாட்டோட அன்பையும் பரிமாறுவாங்க. நம்ம அம்மாவும், மனைவியும் சமையல் கோர்ஸ் படிச்சிட்டு வரல. ஆனா அவங்க ஆத்மார்த்தமா சமைக்கறதால சுவையா இருக்கு. நான் சமையலையும், இசையையும் எங்கேயும் கத்துக்கல. கடவுள் அருளால வந்ததுன்னுதான் நினைக்கிறேன். வழக்கமா ஒரே மாதிரி சாப்பாடு சாப்பிடறவங்களை விதவிதமா சாப்பிட வைக்கற முயற்சிதான்... ஜெயா டீ.வி.யின் ஆதித்யன் கிச்சன். இந்த முயற்சி ஓரளவு சக்ஸஸ் ஆகியிருக்குன்னு சொல்லலாம். அதுக்கு தமிழர்களுடைய டேஸ்ட் நாலெட்ஜ்தான் காரணம்.''



ராணி... மகாராணி!

இல்லத்தின் தலைநகரான சமையலறையை தமது ராஜாங்கம் மாதிரியும், பெண்கள் தங்களை மகாராணிகளாகவும் நினைத்துச் செயல்படுவது உண்மைதானா? ஆடவர் பிரவேசிக்காத, அனுமதிக்காத அந்தப் பகுதி தனக்குள் வைத்திருக்கும் அர்த்தங்கள் தான் என்ன? பிருந்தா, கீதா ரவி, விஜயசாமுண்டீஸ்வரி, ராஜேஸ்வரி ரவி, சுபா கார்த்திகேயன், சேசஸ்ரீ கிருபானந்தன் ஆகியோரிடம் கேட்ட போது...



* தீப்தி

"ஐய்யய்யோ! வேண்டாங்க. ஹெல்ப் பண்றேன்னுட்டு 'வெங்கலக் கடையில் யானை புகுந்த மாதிரி' சமையலறையையே தலைகீழா மாத்திடுவாங்க. அப்புறம் அதைச் சரிப்படுத்த நாலு நாளைக்கு மெனக்கெடணும். அதனால என்ன சிரமம் வந்தாலும் கரண்டியை கையில எடுத்துக்குவேன். அது 'மந்திரக்கோல்' மாதிரி. மனசு எவ்வளவு இறுக்கமாக இருந்தாலும், கரண்டியைக் கையில் எடுத்தால் இலேசாகிவிடும். - பிருந்தா

"எங்க குடும்பத்தோட மொத்த ஆரோக்யத்தையும் கன்ட்ரோல் பண்றது சமையலறைதாங்க. அந்த ஆரோக்யத்தில் அசால்ட்டா இருக்கலாங்களா? வீட்டில இருக்கிற ஒவ்வொருத்தரு

* சுபா



டைய உடல்நிலை, பசி, ருசி, ஒத்துக்கும், ஒத்துக்காததுன்னு பார்த்துப் பார்த்துப் பொறுமையாகச் சமைத்து அன்பையும், பாசத்தையும் கலந்து பரிமாற எங்களால் தான் முடியும். பொறுமைன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கற ஆண்களுக்கு, கிச்சனில் நுழைய அனுமதி கிடையாதுங்க.'' - சுபா

''**கா**லம் இருக்கிற இருப்புல, வெலைவாசி விக்கிற வேகத்துல கணவர்களைச் சமைக்க விட்டா ஒரு மாதக் கையிருப்பு பத்து நாள்ல பஞ்சராயிடும். (அட இங்க வாங்க... உங்க கிட்ட மட்டும் ஒரு இரகசியம் சொல்றேன்) சமையலறை தான் நம்ம கஜானாங்க. அஞ்சறைப் பெட்டி, பருப்பு டப்பான்னு அப்பப்ப அம்பது, நூறுன்னு சேர்த்து வைப்பேன். ஐயாவை உள்ள விட்டா, மொத்த டப்பும் காலியா போய்டுமில்ல.'' - கீதா

''**நா**னும் சமையலும், கிச்சனும் ஒண்ணுக்குள் ஒண்ணாப் பின்னிப் பிணைஞ்சிட்டோமில்ல. இதுல எப்பவுமே அவருக்கு no entryதாங்க. சமையல் செய்யறது ஒரு தவம் மாதிரி. அதை devotion உடன் செய்யணும். நாம் செஞ்சதை ரசிச்சு சாப்

* விஜய சாமுண்டீஸ்வரி





இல்லத்தின் தலைநகரை விட்டுக் கொடுக்காமல் இருப்பது ஏன்?

* கிருபானந்தன்



★ ஜெயஸ்ரீ

“One-woman army மாதிரி, நான் தான் இங்கு all in all இதுவும் ஒரு அதிகார மையம்தான்!”

பிடறதைப் பார்த்து வர்ற ஆனந்தம், பெரிய கொடுப்பினைங்க. இதை அனுபவிச்சுப் பார்த்தாத் தாங்க தெரியும். இதனால் சமையலறை என்னோட சாம்ராஜ்யம். One woman army மாதிரி நான்தான் இங்கு all in all. இதுவும் ஒரு அதிகார மையம்தான்.''

- சேசஸ்ரீ

‘‘சமையலறைப் பொறுப்பு என்பது, புகுந்த வீட்டில் பெண்ணுக்குத் தரும் பெரிய சீதனங்க. குடும்பத்துல மிக மிக முக்கியமான heatlh departmentஐ புதிதாக வரும் நம்மை நம்பி ஒப்படைப்பது எவ்வளவு பெரிய விஷயம். வீட்டின் பட்ஜெட்டே கிச்சனை மையமாக்கித்தானே இருக்கு! சமையலறையில் ஒரு ஹெல்த் மினிஸ்டரா, ஃபைனான்ஸ் மினிஸ்டரா சுதந்திரமாக முழு உரிமையுடன் இருக்கத்தான் விரும்பறேன்.

- ஜெயஸ்ரீ



★ பிருந்தா

‘‘திருமணத்துக்கு முன் நல்லா சமைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, ஏதாவது உதவி செய்யட்டுமா என்றால், உள்ளே வராதீங்கன்னு என் மனைவி அன்புக்கட்டளை போட்டுடுவாங்க. அவங்களுக்கு நான் உதவுவதைப் பார்த்து, என் குழந்தைகளுக்கும் அந்த மனப்பாங்கு வளரட்டும்னு நினைப்பேன். ஆனாலும் எதற்காக உள்ளே விட மாட்டேங்கிறாங்கன்னு தெரியலை.''

- கிருபானந்தன்

‘‘கணவனுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையில் மட்டுமல்ல; சமையலிலும், சரி பாதி பங்கு உண்டு. நாங்க ரெண்டு பேரும் சேர்ந்துதான் சமையல் செய்வோம். அவர் காய் நறுக்கி, மிக்ஸியில் அரைச்சுக் கொடுப்பார். நான் சமையலைச் செய்வேன்.

- விஜய சாமுண்டீஸ்வரி

அம்மணிகளிடம் பேசியதிலிருந்து தெரிந்த நீதி யாதெனில்... புருஷன்மார்கள் சமையலில் உதவவில்லை. சமையலை நாலு வரி புகழ்ந்து பேசறது இல்லைன்னு ஆதங்கப்பட்டாலும், கிச்சன் என்பதை தங்களது தனிப்பட்ட சாம்ராஜ்யமாக வைத்துக் கொள்வதில் உணர்வு ரீதியான திருப்தி அவர்களுக்கு அபரிமிதம்! வேறு முறைகளில் மறுக்கப்படும் முடிவெடுக்கும் உரிமைகளை இந்தச் சமையலறை சாம்ராஜ்யத்தில் ஈடு செய்துகொள்ள சதா முயன்று வருகிறார்கள் ராணி மகாராணிகள்!

செய்திச் சித்திரம்: **ஆர்.பாலா**

கோவையின் அழகியாக எல்லோராலும் பாராட்டப்படும் தியா, இப்போது பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிறார். இரண்டு வருடமாக UTV-யிலும் தொடர்ந்து நிகழ்ச்சித் தொகுப்பாளினியாக இருக்கிறார். ஊட்டி குளிரில் படித்த இவரின் சிந்தனையும் செயலும் கூட குளுகுளுன்னுதான் இருக்கு. மிஸ் நீங்க 'மிஸ்' பண்ணக் கூடாதுன்னு ஏதாவது பட்டியல் வைத்திருக்கிறீர்களா என்று கேட்டதும், "யெஸ்! கப்பலே கவிழ்ந்து போகிற அளவு கஷ்டம் வந்தாலும் புன்னகையை மட்டும் மிஸ் பண்ணக் கூடாது. வெற்றியோ தோல்வியோ எல்லாத்தையும் மிஸ் பண்ணாம அட்டெண்ட் பண்ணிடணும். 'லவ்'ன்ற பேர்ல லைஃபை மிஸ் பண்ணக் கூடாது. அது ஒரு பார்ட். அவ்வளவுதான்... வாழ்க்கையில ஜெயிச்சாதான் அவ உண்மையிலே பெண்... "இப்படி அடுக்கிக்



எதையும் 'மிஸ்' பண்ணக்கூடாது!



கிட்டே போனார் தியா. கர்நாடக இசை படித்துள்ள தியா, ஏழாம் வகுப்பு படிக்கும்போதே கோல்கேட் நடத்திய போட்டியில் 'அழகிய புன்னகை' விருது பெற்றார். இப்போது ரோட்டரி கிளப் யூத் பிரிவில் தலைவராக இருக்கும் தியா, படிப்புக்குப் பிறகு நடிகையாக இருக்கிறாராம். (அட... அப்ப கல்கிக்கு ஸ்பெஷல் பேட்டி உண்டு!) மிஸ் கோவை தியாவுக்கு அட்வான்ஸ் வாழ்த்தை மிஸ் பண்ணாம கொடுத்துட்டுக் கிளம்பினோம்.

- சசிகலா

பெண்களுக்காகவே ஸ்பெஷலா வேலூர் மாநகராட்சி அலுவலகத்துக்கு அருகில் மகளிர் கிளை நூலகம் இருக்கு. நூலகரும் பெண்தான். உள்ளே புத்தக இதழ்களை பூக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி!

- சூர்யவாணி

சுதா சேஷய்யன்

'அம்பாளிடம் ஒன்று கேட்டேன், கொடுத்தாள்' என்று மகிழ்பவர், நாளை அவள் வேறு ஒன்றைக் கொடுக்காமல் போனால், அதனால் பக்தி குறைந்துவிட்டது என்று சொல்லக்கூடாது. காம்யார்த்த பக்தியில் வரக்கூடிய சிக்கல் இதுதான் - 'இன்று ஒன்றைக் கேட்டேன்; கிடைத்தது' என்கிற எண்ணத்தில், நாளைக்கு இன்னும் அதிகமாகக் கேட்கத் தோன்றும்! அது கிடைக்காது போனால் கோபம் வரும்!

தகுதி அறிந்து தருபவள்

நமக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும்.

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுவதும் தருவோய் நீ

தகுதியாக இருக்கக்கூடியதைத் தரக்கூடியவள். தகுதிக்குட்படாததை வேண்டாம் என்று நீக்கக் கூடியவள். ஆனால், அவள் எதைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அவளிடத்தில் பக்தி செலுத்தக்கூடிய மஹாபலர்களுக்கு பலிப்ரியாவாக இருக்கக்கூடியவள்.

சிவசக்தி ஐக்கியம்!

பாஷா ரூபா - மொழி ஸ்வரூபமாக இருப்பவள். அதனால்தான் அபிராமி பட்டர் பாடுகிறபோது, 'சொல்லும் பொருளும் என நீயும் நின் கணவரும்' என்றார். சொல்லையும் பொருளையும் பிரிக்க முடியாது. சிவசக்தி ஐக்கியம் என்பதை எங்கே புரிந்து கொள்ளலாம் என்று பார்த்தால், சொல்லும் பொருளும் இணைந்துள்ள முறையிலே புரிந்துகொள்ளலாம்.

பரமானந்தம் தருபவள்

நான் வேண்டுவதைக் கொடுக்கக் கூடியவள். ஆனால், எனக்கு என்ன தர வேண்டும் என்பது உனக்கே தெரியும். ஒரு வேளை நான் தவறாகக் கேட்டால், எனக்கு நல்லது செய்வதற்காகவே அதைத் தராமல் இருப்பாள். நான் கேட்ட தவறான விஷயத்தைக் கொடுத்துவிட்டு அதன்பிறகு அதனிடமிருந்து என்னைக் காப்பாற்றும் காரியத்தைச் செய்ய மாட்டாள். தாய்லாந்தில் வெள்ளை யானையைப் பரிசாகத் தருவார்களாம்! பெரிய பரிசுதான். ஆனால் வைத்துக் காப்பாற்றத் தகுதி வேண்டாமா? ஆக, ஒருத்தரைத் தண்டிக்க வேண்டுமென்றால், அவரது தகுதிக்கு அப்பாற்பட்ட பரிசைக் கொடுத்தாலே போதும்!

ஒரு வார்த்தை இருக்கிறது. அதைக் காகிதத்தில் எழுதி கண் முன்னால் வைத்துக் கொள்கிறோம். 'பாஷா ரூபா' என்று தமிழிலோ தேவநாகரி லிபியிலோ எழுதி வைக்கிறோம். ஆனால், அந்த எழுத்தைப் படிக்கத் தெரியாதவர்களுக்கு, கண் முன்னால் அதைப் பார்ப்பதால் ஏதாவது புரிந்துவிடுமா! அப்படிப்பட்ட சொல்லினால் பயனில்லை.

ஒரு சொல்லின் பொருளை மட்டுமே தனியாக நினைத்துப் பார்க்க முடியுமா...? அதுவும் சாத்தியமில்லை; அதன் ஒலி-வரி வடிவங்கள் சேர்ந்துதான் மனத்துக்குப் புலனாகும். ஆக, சொல்லும் பொருளும் சேர்கிறபோதுதான் மதிப்பு. இதைத்தான் அபிராமிபட்டர் சிவ-சக்தி ஐக்கியத்தை

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம் 6


ஸ்ரீ ஆமோதனாம்பாள்
பெண்ணாடம்
வேதா

உதாரணப்படுத்தப் பயன்படுத்தினார்.

பிருஹத்ஸேனா - மிகப் பெரிய சைனியத்தை உடையவள் லலிதாம்பிகை. யார் யார் அந்த சைனியத்தில் இருக்கிறார்கள் என்று கேட்டால், இந்த அண்ட பகிரண்டத்தில் உள்ள எல்லாமே அவள் சைனியம் தான்.

பா்வ அபா்வ விவர்ஜிதா - பாவம் அபாவம் இரண்டையும் தாண்டி, அவற்றுக்கு அப்பால் இருக்கக்கூடியவள்.

அழகும் எளிமையும் தருபவள்

ஷோபனா சுலபா கதி: - ஷோபனத்தையும் சுலபத்தையும் தரக்கூடியவள். அழகையும் எளிமையையும் தர வல்லவள். அவளே அழகும் எளிமையும் பொருந்தியவள். அவளை வணங்கக்கூடியவர்களுக்கு மிக அழகாகவும் மிக எளிமையாகவும் லபிக்கக்கூடிய பிரஸாதமாக இருப்பவள்.

சுபகரீ - சுபத்தை - மங்களத்தைத் தரக்கூடியவள்.

சுக ஆராத்யா - சுகமாக ஆராதிப்பது என்பதுதான் ஆராதனை முறைகளிலேயே ரொம்ப உசத்தியானது. 'எனக்கு என்னவோ ஒன்று வேண்டும்' என்று கேட்டால் அது காம்யார்த்தம். சுற்றியிருப்பவர்களுக்கு எனது பக்தியைக் காட்ட, பிரகடனப்படுத்த நா்ன் முயற்சி செய்தால், அந்த 'பக்தி' யினாலும் ஒன்றும் பிரயோஜனமில்லை. உண்மையான பக்தி எங்கே இருக்கிறது என்றால், அம்பாளை வணங்குவதால் கிடைக்கும் சுகம் இருக்கிறதே; அந்தச் செயலினால் மட்டுமே கிடைக்கக்கூடிய ஆனந்தம் - சுகம் - அதுவே அவள் தரும் மிகச் சிறந்த பயன். நாம் கேட்டுக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் பணம், பட்டம், பதவிகளையெல்லாம்விட இந்த ஆராதனை ஆனந்தமே அதிக சுகம் தருவது, நிறைவு தருவது. எல்லையில்லா அந்த ஆனந்தத்தை, பரமானந்தத்தை அவளால் தான் பக்தர்களுக்கு வழங்க முடியும்.

சாம்ராஜ்யம் தருபவள்

அடுத்து வரக்கூடிய திருநாமங்கள் ஒரு தொகுப்பு. ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தின் ஒரு தனிச் சிறப்பு என்னவென்றால், இப்படித் தொகுப்பு தொகுப்பாகப் பல திருநாமங்கள் அதிலே இடம் பெற்றுள்ளன. ஆதார சக்கரங்களைப் பற்றிய திருநாமங்கள்



அம்பாளை வணங்குவதால் கிடைக்கும் சுகம் இருக்கிறதே; அந்தச் செயலினால் மட்டுமே கிடைக்கக்கூடிய ஆனந்தம்- சுகம், அதுவே அவள் தரும் மிகச் சிறந்த பயன்!

ஒரு தொகுப்பு. ஜகத் ஸ்வரூபிணியாக அம்பாள் எப்படி விளங்குகிறாள் என்பதை விவரிக்கும் நாமங்கள் இன்னொரு தொகுப்பு. **ராஜராஜேஸ்வரி** என்று தொடங்கி அதனைப் பின்தொடரும் சில நாமங்கள் சேர்ந்து இன்னொரு தொகுப்பு. இவை அம்பிகை எவ்வாறு கோலோச்சு கிறாள்; எப்படி நமக்கு சாம்ராஜ்ய பதவி தருகிறாள் என்று கூறுகின்றன.

ராஜராஜேஸ்வரி என்று சொல்லும் போது, அவளது உயர்வைச் சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை என்பதால் ஒரே 'ராஜ' சப்தத்தை இரண்டு முறை சொல்லி அழுத்தம் தரப்பட்டிருக்கிறது.

ராஜ்யதாயினி - தான் ராஜேஸ்வரியாக இருப்பது பெரிதல்ல; பக்தர்களுக்கும் சாம் ராஜ்யத்தைத் தரக்கூடியவள் **ராஜ்யதாயினி.**

ராஜ்யவல்லபா - ராஜ்யங்களை உரிமை யாகப் பெறக்கூடிய தகுதியுடையவர். உண் மையிலேயே ராணியாக இருக்கக்கூடிய தகுதி யாருக்கு இருக்கிறது என்றால், அம் பிகை பரமேசுவரிக்குத்தான் இருக்கிறது.

ராஜத்க்ருபா - அவளுடைய கிருபை கடாக்ஷம் எப்படி இருக்கும்...? ஒரு ராஜ் யத்தை நிர்மாணம் பண்ணுவதற்கு எவ் வளவு ஐச்வர்யமும் அதிகாரமும் தேவையோ, அந்த அளவுக்கு நமக்கு ஐச்வர்யத்தை, அதிகாரத்தை வாரித் தரும் கிருபை (கருணை) உடையவள்.

ராஜபீட நிவேசித நிஜாச்ருதா - தன்னை உண்மையாக ஆச்ரயிக்கக்கூடியவர்களுக்கு ராஜபீடத்தைத் தரக் கூடியவள். பக்தியோடு அம்பாளை வழிபடுபவர்களுக்கு அந்த ராஜ பீடத்தை அருள்பவள். அது சாதாரணமான சிம்மாசனம் அல்ல... பத்து அரசர்கள் இருந்து அவர்களுக்கு ஓர் அரசர் இருந்தால் சக்ரவர்த்தி என்று சொல்வோமே, அந்த மாதிரியான அந்தஸ்து. அதைத் தருபவள் ஸ்ரீ லலிதாம்பிகைதான்.

ராஜ்யலக்ஷ்மி - அப்படி அவள் தரக் கூடிய ராஜ்யத்துக்கு லக்ஷ்மியாக இருக்கக் கூடியவளும் அவளே! ராஜ்யம் என்று இருந்தால் அதைப் பரிபாலிக்க வேண்டும் அல்லவா...? அவ்வாறு பரிபாலிப்பதுடன், அதற்கான செல்வத்தையும் தரக்கூடியவள்.

கோசநாதா - கோசம் என்றால் பொக் கிஷம். Treasury இதை எப்படி வேண்டு மானாலும் பாஷ்யம் பிரிக்கலாம் - அன்ன மயகோசத்தில் ஆரம்பித்து, ஐந்து வித மான கோசங்கள் - அவற்றுக்கு அதி தேவதையானவள் அம்பிகை என்று சொல் லலாம்.

கோசம் என்றால் பொக்கிஷம் என்றும் ஓர் அர்த்தம் உண்டு. 'உலகில் இருக்கக் கூடிய பலவிதமான பொக்கிஷங்கள் - அவை அனைத்துக்கும் அதி தேவதை அம் பிகையே' என்றும் பொருள் கொள்ளலாம். சில வார்த்தைகள் காலப் போக்கில் நமக்கு அர்த்தம் தெரியாமல் போகின்றன. தமிழில் 'பண்டாரம்' என்ற ஒரு சொல் அப்படித் தான் ஆகிவிட்டது. ஆண்டிப் பண்டாரம்- 'ஒன்றுமே இல்லாதவன்' என்று குறிக்க இச்சொல் பயன்படுகிறது. ஆனால், பண்டாரம் என்றால் என்ன தெரியுமா?

நேர் எதிரான பொருள் அதற்கு உண்டு.

(வளரும்)

ஆண்கள் பிரவேசித்த எல்லாத் துறைகளிலும் பெண்கள் சர்வ சாதாரணமாகக் களத்தில் இறங்கி வெற்றியைச் சுருட்டிக்கொண்டு வந்தாலும், நுண்கலையில் பெறும் வெற்றியும் நகர்வும்தான் தனித்துவமானதாக படைப்பாளி என்கிற அந்தஸ்தோடு ஒளிவட்டத்தைச் சுழல வைக்கிறது. புறம் சார்ந்த சிந்தனையோடு அகம் சார்ந்த பயணத்தோடு தேடலை உள்ளடக்கியவை கலைகள். புகைப்படம், ஓவியம், சிற்பம் இந்த முத்துறைகளில் ஒளி விடும் பெண் கலைஞர்கள் பற்றி, அவர்களே...



"**நா**ன் கோவை விஞ்ஞானி ஜி.டி.நாயுடுவின் கொள்ளுப் பேத்திங்க. அவரைப் போல என்னால எதையும் கண்டுபிடிக்க முடியுமான்னு தெரியல... ஆனா... இந்தப் பறவைகள் காட்டு விலங்குகள் மட்டும் எப்படி தனித்துவமா, சுயமா, மகிழ்ச்சியா, சுதந்திரமா இருக்க முடியுதுன்னு ஆராய்ஞ்சுக்கிட்டு இருக்கேன். இதே மாதிரி பெண்களாலே ஏன் முடியலே?"



ரத்ன வர்ஷினி

தேடலை நோக்கி... தேவதைகள்...!



“சுயத்தை இழந்துவிட்ட இந்த அவசரமான உலகத்தில்... பகிர்ந்து கொள்ள முடியாத உறவுகள், உணர்வுகள் பற்றியும், தனக்கான தாகத்தைத் தேடுகிற பல்வேறுபட்ட பெண்களைப் பற்றியும் நான் ஓவியங்களில் பதிவு செய்கிறேன்.”



ஜி.லதா



‘நான் கவிஞர், சிற்பியும்கூட. இந்த ஜனவரியில்தான், ரசிகையா இருந்த நான் படைப்பாளி ஆனேன். தொடுஉணர்வு, முப்பரிமாணம் இவற்றை அனுபவிக்க சிற்பத்தில் மாத்திரமே சாத்தியம். ‘உளியின் பிடியில் கவிதை பிறந்தது’ மாதிரி ஒரு சிலையைச் செய்து முடித்ததும் அதைக் கவிதையாகவும் எழுதிடுவேன். என்னை நான் தேடி இதில் கண்டுகொண்டேன்.”



நிர்மலா ஸ்ரீதர்

தொகுப்பு : அமிர்தா
படங்கள் : சின்னராஜ்

இவங்க இப்படித்தாங்க... 6

இப்போது 'பிரபுதேவா - நயன்தாரா' பரபரப்பில் இருப்பது போல, அப்போது 'பிரபுதேவா-ரமலத்' பற்றிய காஸிப் எங்கும் பரவத் தொடங்கிய நேரம். 'பிரபுதேவாவுடன் ஒருநாள்' என்ற அசைன் மெண்டுடன் அவரைத் தொடர்பு கொண் டேன்.

மேற்படி காஸிப் குறித்து விளக்கம் பெறவே அவரை அணுகுவதாகக் கருதிய பிரபுதேவா, எளிதில் பிடிபடவில்லை. 'பிறகு பார்க்கலாம்', 'நான் அவுட்டோரில் இருக்கிறேன்', 'டைட் ஷெட்யூலில் இருக் கிறேன்' என்ற பதில்களே வந்தன.

அப்போது அவரிடம் நெருக்கமாய் இருந்த நண்பர் உதயன் என்கிற உதவி இயக்குநர் மூலம் தொடர்பு கொண்டு,

''நட்சத்திரத்துடன் ஒரு நாள்' என்கிற புதிய பகுதியை உங்களைக் கொண்டு ஆரம்பிக்கிறோம். இதில் வேறு எந்த விளக்கமும் கேட்கப் போவதில்லை. உங் களுடைய ஒரு நாள் நடவடிக்கைகளை உடனிருந்து கவனித்து எழுதுவதுதான் இந்த அசைன்மெண்டின் நோக் கம்...'' என்றதும்.

ஓ.கே. என்று ஒரு நாளைச் சொல்லி, ''அன்றிலிருந்து பத்து நாட்கள் நான் ஏவி.எம். ஸ்டூடியோ எட்டாவது ஃப்ளோரில் இருப்பேன்'' என்றார் பிரபுதேவா.

அதைக் கேட்டதும் சந்தோஷமாக, 'இந்த அளவு பிடி கொடுத்துப் பேசியது பெரிய விஷயம்தானே' என வந்து விட் டேன்.

விஜய்க்கும் பிரபுதேவாவுக்கும் ஒரு ஒற்றுமை. இந்த இருவரிடமும் எந்தக் கேள்வி கேட்டாலும் ஹைக்கூ போல பதில் வரும். தங்கள் நட்புக்கும் நம்பிக் கைக்கும் உரியவர்களிடம் சற்றுக் கூடுத லாக, புதுக்கவிதை போல பதில் வரும்.

அவரை சிலர் 'பிரபு' என்றும், 'தேவா' என்றும் அழைப்பார்கள். 'மாஸ்டர்' என்ற ழைத்தால் அவர் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்து மின்னும். கமல், ரஜினி, சிரஞ்சீவி, குஷ்பூ, நக்மா போன்ற பல பிரபலங்களை ஆட்டி வைத்தவராயிற்றே!

Money சார் ஒலி-!



சபீதா ஜோசப்

நாம் சென்றபோது மேக்கப் ரூமில் இருந்தார்.

''வணக்கம் மாஸ்டர்!'' - என்றோம்.

''உள்ளேன் அய்யா'' - என்று சிரித்தார்.

''ஃபேமஸ் ஹீரோவான பின்னும் தாடியை எடுக்காமல் இருக்கிறீர்களே. இதுக்குப் பின்னாடி ஏதேனும் லவ் ஸ்டோரி இருக்கா?''

''அப்படியெல்லாம் எந்தப் பின்னணியுமில்லேங்க. உண்மையைச் சொல்றதுன்னா என் முகம் கொஞ்சம் சதைபிடிப்புடனும்,



கொஞ்சம் முதிர்ச்சியுடனும் தெரியணும்னுதான்!''- சொல்லிவிட்டு தாடியைத் தடவிச் சிரித்தார்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் உதவி இயக்குநர் வந்து நின்றார். படப்பிடிப்புக்கான அழைப்பு வந்து விட்டது.

''ஸ்பாட்ல பேசலாம் வாங்க''- எழுந்தார். அவரைத் தொடர்ந்தோம். அவரை எங்கெல்லாம் அழைத்துச் செல்வது என்ற யோசனை ஓடியது. ''ஸ்டுடியோவுக்குள்ளே இருக்கும் டீக்கடையில் நின்று டீ குடிங்க... ஃபோட்டோ எடுத்துக்குவோம்'' என்றேன்.

''நான் டீ குடிக்க மாட்டேன்...'' என்றவர், ''சரி வாங்க'' என்று கடை முன் சென்றார், அதற்குள் ஒரு வெளிநாட்டுத் தமிழ்க் குடும்பம் சூழ்ந்து கொண்டது. ஃபோட்டோ எடுத்துக் கொண்டார்கள். தாங்கள் பார்த்து ரசித்த படத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர்களிடமிருந்து விடை பெற்று வந்தார்.

''எங்கே போனாலும் இப்படித்தான் ரசிகர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள், இதாவது பரவாயில்லே... சபரி மலைக்கு மாலை போட்டு மலையேறும் போது, 'பிரபுதேவா சாமி'னு மற்ற சாமிகள் சூழ்ந்து கொண்டு, ஆட்டோகிராஃப், போட்டோவுக்குப் போஸ் என்பதோடு சில சாமிகள் என் காலில் விழுந்து எழுவார்கள். இதெல்லாம் ரொம்ப சங்கடமாக இருக்கும்''- என்றார்.

'மிஸ்டர் ரோமியோ' படத்தின் பாடல் காட்சி அன்று படமானது. பிரபுதேவாவும் ஷில்பா ஷெட்டியும் ஆடவேண்டிய மூவ்மெண்ட்ஸை ராஜு மாஸ்டர் (அவரது அண்ணன்) விளக்கினார். ராஜுவின் அசிஸ்டெண்ட்ஸ் இருவர் ஆடிக் காண்பித்தனர். ஆறேழு டேக்குக்குப் பின்னர் அந்தக் காட்சி

“இதுக்கெல்லாம் கவலைப்படாதே. உனக்கு எதில் ஆர்வம் இருக்கோ அதுல நீ ஜெயிச்சா போதும்” என்றார்.

ஓ.கே ஆனது.

''டான்ஸர், டான்ஸ் மாஸ்டர், ஆக்டர் இந்த உயரங்களை நோக்கிய உங்கள் பயணம் எப்போது எப்படி தொடங்கியது?''

''சின்ன வயசுலே இருந்தே என்னோட ஆர்வம் ஸ்போர்ட்ஸ், டான்ஸ் என்று ரெண்டையும் சுற்றிச் சுற்றி வந்தது. அதனாலே எட்டாவதுக்கு மேல் நகர முடியவில்லை. அது மைக்கேல் ஜாக்சன் புயல் கிளப்பிக் கொண்டிருந்த கால கட்டம். அவரது கேசட் போட்டுவிட்டு பலவிதமாக ஆட ஆரம்பித்து விடுவேன்.

என் நடன ஆர்வம் தெரிந்தோ என்னவோ, நானும் ராஜுவும் முறைப்படி நடனம் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார் அப்பா. என் முதல் குரு தர்மராஜ் மாஸ்டர். எனக்கு கிளாசிகல் டான்ஸ் சொல்லிக் கொடுத்தவர் இவர்தான். அடுத்து உடுப்பி லட்சுமி நாராயணனிடம் டான்ஸ் கத்துக் கிட்டேன்.

1988-ல் எங்க நாட்டிய அரங்கேற்றம் நாரதகான சபாவில் நடந்தது. நான், ராஜு, தம்பி பிரசாத்- மூணு பேருக்கும் ஒரே நேரத்தில் அரங்கேற்றம்.



அப்புறம், 'மௌனராகம்' படத்தில் 'பனி விழும் இரவில்' பாட்டு எடுக்கிற போது நானும் அப்பா (சுந்தரம் மாஸ்டர்)கூட ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போயிருந்தேன். மணிரத்னம் சார் என்னைக் கூப்பிட்டுப் பேசினார். அதோடு அந்தப் பாட்டில் ஒரு மூவ்மெண்ட்டுக்கு என்னையும் ஆட வைத்தார். நான் டான்ஸ் ஆடிய முதல் படம் அதுதான். எனக்கு முதல் சம்பளம் போல, மணி சார் ஐநூறு ரூபாய் கொடுத்தார். ராசியான கை.

சினிமாவில் தலை காட்ட ஆரம்பித்ததும் படிப்புல கவனம் போகல. அதனால ப்ளஸ்டூ ரிசல்ட் ஊத்திக்கிச்சு. ஷூட்டிங் பிஸியிலிருந்த அப்பாவுக்கு இது தெரியாது. தெரிந்தபோதும் அப்பா கோபப்படலை. என் முதுகுல தட்டிக் கொடுத்து, ''இதுக்கெல்லாம் கவலைப்படாதே. உனக்கு எதில் ஆர்வம் இருக்கோ அதுல நீ ஜெயிச்சா போதும்' என்றார் அப்பா. என் வாழ்வை உயர்த்திய வார்த்தைகள்.

நான் மாஸ்டர் ஆகப் பிள்ளையார் சுழி போட்டவர் கமல்சார்தான். 'வெற்றிவிழா' படத்துக்கு அப்பாதான் மாஸ்டர். அந்தப் படத்தின் 'தத்தோம் தலாங்கு தத்தோம்' பாட்டுக்கு என்னை டான்ஸ் அமைக்கச் சொன்னார். நான் மாஸ்டரானது கமல் சார் படத்தின் மூலம்தான்.

பெரிய நட்சத்திரங்களை ஆட வைத்த நான், ஒரு நடிகனாக கேமரா முன் நின்ற போது வசனம் பேச உதறல் எடுத்தது'' என்றார். அதே பிரபுதேவாவை, சமீபத்தில் படத்தின் இயக்குநராகச் சந்தித்தோம். அதே தோழமையுடன் பேசினார். இடைப்பட்ட காலத்தில் அவர் பெற்ற வெற்றிகள் தடுமாற வைக்கவில்லை; வதந்திகளும் அவரை முடக்கிவிடவில்லை. இன்றும், அதே தோழமை; அதே அன்பு!

(அடுத்த வாரம்: ரஞ்சிதா)

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? ''காவல் துறையின் கடமையைப் போற்றுவோம்'' என்று கருணாநிதி கூறியுள்ளாரே?

! ''காவலர்களைப் போற்றுவோம்'' என்று அவர் கூறவில்லை. அவர்களின் ''கடமையைப் போற்றுவோம்'' என்றுதான் சொல்கிறார். கடமையை ஒழுங்காக நிறைவேற்றும் காவல்துறையைப் போற்றும் காலம் வர வேண்டும். தற்போது கொலை, கொள்ளை, குற்றங்கள் அதிகரித்து வருவது காவல்துறைக்கும் பெருமை சேர்க்கவில்லை.

● எஸ்.உஷா சுதர்ஷன், திருச்செங்கோடு

? சென்னையில் காற்றாடி பறக்க விடுவதற்கு கோர்ட் தடையுத்தரவு பிறப்பித்ததற்கு எதிராக காற்றாடி வியாபாரிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளார்களே?

! நெரிசல் மிக்க நகரில் பட்டம் விடுவதில் உள்ள அபாயங்கள் காரணமாகத் தடை நியாயமாகிறது. அதே சமயம், பட்டம் விடும் ஆர்வலர்களுக்கு ஒரு தனிஇடம் ஒதுக்கித் தருவது, ஏராளமான கௌரவ பட்டங்களைச் சூட்டிக் கொள்ளத் தயங்காத ஆட்சியாளர்களின் கடமையும் ஆகிறது.



* சாதனையை விஞ்சி...

சச்சின் டெண்டுல்கரின் சாதனை பற்றி..?

● எம்.சம்பத் வேலாயுதம்பாளையம்

? இந்தியாவில் செல்ஃபோன் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை ஐம்பது கோடியைத் தாண்டியதில் நமக்குப் பெருமைதானே?

! பெருமை தான். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கவும் வாய்ப்பு உண்டு. அதேசமயம், செல்ஃபோன் காரணமாக உடல் உபாதைகளும், நிராகரிக்கப்படும் பழைய செல்ஃபோன்கள் காரணமாகச் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் அதிகரிக்கப் போகின்றன. இவற்றைச் சமாளிக்க சரியான திட்டமில்லையெனில், இன்றைய பெருமை நாளைய சிறுமையாகிவிடும்.

● இரா.சக்கரபாணி, மதுரை

? ''இலங்கைத் தமிழர் நலனுக்கு எல்லா உதவிகளையும் செய்வேன்'' என்று ராஜபக்ஷ அளித்துள்ள உறுதியை நம்பலாமா?

! ஊஹூம். நம்பக்கூடாது என்பதற்கு



* 'ரெடி' சகோதரர்கள்!

உறுதியான சான்றுகள் கிடைத்துள்ளன. தங்கள் குடியிருப்புகளுக்குத் திரும்பிய தமிழர்கள் பலர், அவற்றில் சிங்களர் குடியேறிவிட்டதைக் கண்டு அதிர்ந்து போயிருக்கின்றனர். இதிலெல்லாம் உள்நோக்கங்கள் நிறையவே உண்டு!

● **ஜி.இந்திரா, பெங்களூரு**

? செட்டிப்புலம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் தலித் மக்களை வரவழைத்து, ஒரு நல்ல செயலைச் செய்த மாவட்ட ஆட்சியர் பற்றி...?

! அவரை மனமார வாழ்த்துவோம். தலித் மக்களைக் கோயிலுக்குள் வரவேற்பது செட்டிப்புலத்தில் சகஜமாகும்போது, ஆட்சியாளரின் முயற்சி முழுமை பெற்றதாகும்.

● **பி.ஜெயப்பிரகாஷ், சர்கார்பதி**

? தமது சண்டிகர் பயணத்தின் போது செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நபரின் குடும்பத்துக்கு பிரதமர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது குறித்து?

! அத்துடன் நின்றால் அது, கண் இழந்தவனுக்குக் கண்ணாடி வாங்கித் தரும் காரியம்! தமது காவல்துறை/பாதுகாப்பு அதிகாரிகள் மனித நேயம் மறக்கக்கூடாது என்பதை உணர்த்துவது, அவர்களுடைய கிட்டப் பார்வையைச் சரி செய்ய மூக்குக் கண்ணாடி அணிவிப்பதாகும்.

● **அ.யாழினி பர்வதம், சென்னை - 97**



* வருந்தத்தக்க மைனஸ்!

? கர்நாடகத்து ரெட்டி சகோதரர்கள் தங்கள் தொழில் வசதிக்காக பிரச்னை செய்ய, அதை மூத்த தலைவர்கள் தங்கள் வசதிக்கேற்ப தீர்த்து வைத்தது பற்றி...?

! பி.ஜே.பி. தலைமை பிளாக் மெயிலுக்குப் பணிந்தது. யெதியூரப்பாவே சொல்லி, அழுதும் விட்டாரே - தமது சுயநலத்துக்காக, நல்லவர்களையும் நாட்டையும் (மாநிலத்தையும்) பணயம் வைத்துவிட்டதாக! கவிழ்ப்பதற்கு 'ரெடி'யாக, ரெட்டி சகோதரர்கள் போல, மாநிலத்துக்கு மாநிலம் 'ரெடி சகோதரர்கள்' காத்திருக்காங்க!



* ஆளுங்கட்சி நியாயம்!

● **ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம்**

? நமது இந்திய மண்ணில் அகதிகளாகக் குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடிமக்களாக அங்கீகாரம் அளித்துவிட்டால், பிரச்னை தீர்ந்துவிடுமா?

! நிச்சயமாகத் தீராது. மேலும் மேலும்

அகதிகளாகப் பலர் இலங்கையிலிருந்து இங்கே வரும் சூழல்தான் திட்டமிட்டு உருவாக்கப்படும். இதற்கு நேர்மாறாக, ஆஸ்திரேலிய அரசின் செயல்பாட்டைக் கவனியுங்கள். தங்கள் நாட்டுக்கு வந்து சேர்ந்த இலங்கை அகதிகளைத் திரும்ப ஏற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்தி, வெற்றியும் கண்டிருக்கிறது.



* நம்புதற்கில்லை!

● **க.சந்தானம், திருவாரூர்**

? 'அ.தி.மு.க.வுக்கு ஒளி மயமான எதிர்காலம்' என்கிறாரே ஜெயலலிதா?

! அவர் நம்பிக்கை வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த நம்பிக்கை நிறைவேறும் விதத்தில் செயல் திட்டமோ கடந்த கால தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவமோ இல்லாதது வருந்தத்தக்கது.



* சம்பிரதாய இரங்கல்!

● **ஆர்.ராஜதுரை, சீர்காழி**

? ஜெயலலிதாவை வரவேற்கச் சென்ற மக்கள் தொடர்பு அதிகாரிகள் இரண்டு பேரை, தமிழக அரசு சஸ்பெண்ட் செய்தது சரியா?

! மதுரை மாவட்டச் சிறப்பிதழுக்காக மு.க.அழகிரியைப் பேட்டி காண (அப்போது அவர் எம்.பி.அல்ல) அவர் வீட்டுக்கு கல்கி நிருபர்கள் சென்றபோது, அங்கே மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரியும் உதவி அதிகாரியும் இருந்தனர். அது சரியென்றால், ஜெயலலிதாவை மக்கள் தொடர்பு அதிகாரிகள் இருவர் வரவேற்கச் சென்றதும் சரிதான்! ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயம் இருக்க முடியாது.

● **கு.அருணாசலம், தென்காசி**

? சச்சின் டெண்டுல்கரின் பேட்டிங் சாதனை...?

! அதைவிட மிகப் பெரும் சாதனை, மற்றவர்கள் போற்றிக் கொண்டாடும் தன்னுடைய சாதனைகளைப் பற்றி எந்தக் கர்வமும் இல்லாத டெண்டுல்கரின் அடக்கம்தான்.

● **கே.எஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்**

? 'பேச்சைக் குறை' என ஒரு சிலரும், 'கலகலப்பாக இரு' என வேறு சிலரும் அறிவுறுத்துகிறார்களே - உண்மையில் எப்படி இருக்க வேண்டும்?

! இரண்டு அறிவுரைகளுமே ஏற்கத்தக்கவைதானே! வளவளவென்று பேசாமல் அளவாகவும்; யாரையும் புறங்கூறாமல் கலகலப்பு உருவாகும் விதமாகவும் பேசப் பழகலாமே! ⊙

☐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம்

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
யாழினி பர்வதம், சென்னை - 78

கடைசியில், பூரணசந்திரனும் உதய மாயிற்று. ஏன்? இரண்டு நிலாமதியங்கள் ஒரே சமயத்தில் உதயமாயின. தஞ்சைக் கோட்டை வாசலண்டை குந்தவை தேவி தன் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தபோது, கோட்டைக் கதவுகள் தடால் என்று திறந் தன. உள்ளேயிருந்து தேவியை வரவேற்று அழைத்துப் போவதற்காக அரண்மனைப் பரிவாரங்கள் வெளிவந்தன. அந்தப் பரி வாரங்களின் முன்னிலையில் இரு பழு வேட்டரையர்களும் இருந்தார்கள். அது மட்டுமல்ல; அவர்களுக்குப் பின்னால், முத்துப் பதித்த தந்தப் பல்லக்கு ஒன்றும் வந்தது. அதன் பட்டுத் திரைகள் விலகி யதும் உள்ளே பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியின் சுந்தர மதி வதனம் தெரிந்தது.

குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந் தும் இறங்கினார்கள். நந்தினி விரைந்து முன்னால் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்றாள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கீகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகி களையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத்தி ரளின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ணமேனியாள்; குந் தவை செந்தாமரை நிறத்தினாள். நந்தினி யின் பொன்முகம் பூரணசந்திரனைப்போல் வட்ட வடிவமாயிருந்தது; குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல் சிறிது நீள வாட்டமாயிருந்தது. நந்தினியின் செவ்வரி யோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன் வண்டுகளைப்போல் அகன்று இருந் தன; குந்தவையின் கருநீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப் போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழு வழுவென்று தந்தத்தினால் செய்தது போல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப்பூவின் மொட்



அமரர் கல்கி

டைப் போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவழச் செப்பைப் போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது. நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச்செண்டுகளைப் போல் அலங்கரித்து இருந்தாள். குந்தவையின் கூந்தலோ 'இவள் அழகின் அரசி' என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப் போல் அமைந்திருந்தது.

இப்படியெல்லாம் அந்த இரு வனிதா மணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித்தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாதுதான். ஆயினும் பொதுப்படையாக இருவரும் நிகரில்லாச் சௌந்தரியவதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும் அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள். நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அசூயையும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினார்கள். ஆனால், இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளைய பிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

- 'பொன்னியின் செல்வன்' பாகம் இரண்டிலிருந்து...

நிலவைச் சந்தித்த நிலா!





வண்ணத் தூரிகை

மெட்டு மாறா

❋ சாருலதா மணி



ஆயிரமாயிரம் நவநாகரிக உடைகள் உலகில் வலம் வந்து கொண்டிருந்தாலும், பெண் களுக்குப் புடைவைகளின் மேல் ஒரு தனி ஈர்ப்பு இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு பெரிய துணிக் கடைக்குள் சென்றாலும், அங்கேயும் புடை வைகள் இருக்கும் இடத்தைச் சுற்றித்தான் அதிக அளவு பெண்கள் இருப்பார்கள்.

ஒரு ஜவுளிக் கடையின் கரையோரம் கொஞ்சமாக மழைச் சாரலுக்காக ஒதுங்கிய நேரம் அங்கே, சிறிதும் மழைக்கு அஞ்சாமல் புடை வைகளிலிருந்து கடைக்கண் களைச் சிறிதும் விலக்காமல் புடைவையின் கலை நயத்தை யும் அதன் விலைகளையும் சேர்த்து வாசித்துக் கொண் டிருந்த சில வனிதையர்களை சந்தித்து புடைவையின் புகழ் பாட சொல்லிக் கேட்டோம். ''காலம் காலமா கல்யாணம், ஒரு விசேஷம்ன்னா அதுல முதல்ல கலக்கலா வந்து நிக்கறது நம்ம காஞ்சிபுரத்து பட்டுச் சேலை தானே. இப்போ இதே பட்டுப் புடைவைல, ஜர்தோஸி, எம் பிராய்டரின்னு ஏகப்பட்ட கலை நயங்கள் கைகோத்துக்கிட்டு சும்மா களை கட்டுது. எவ்வளவு வருஷங்கள் ஆனாலும் சரி; நம்ம பெண் களுக்குப் புடைவை மேல இருக்குற ஆசை மட்டும் குறையவே குறையாது'' என்கிறார் உஷா ராஜ்.

அவரது பட்டு மொழியை அப்படியே மெட்டு மாறாமல் வழிமொழிந்தார், திருவனந்தபுரத்திலிருந்து சென்னைப் பட்டணத்தைத் தேடிப் பட்டெடுக்க வந்த அவரது தோழி சரஸ்வதி, ''சேலைல இருக்குற அழகு வேற எதுலேயுமே வராதுங்க.. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் ஏற்புடையது சேலைதான். ஒரு கண்ணியம், அழகு,

❋ சரஸ்வதி, உஷா ராஜ்.



மரியாதை எல்லாமே சேலை கொடுக்கும். ஒரு பெண் சேலை கட்டிக்கிட்டா போதும். அழகு ப்ளஸ் அடக்கம் தானாகவே வந்து அவகிட்ட ஒட்டிக்கும்'' என்கிறார்.

''எங்களை மாதிரி இளம் பெண்கள் சேலையை ரொம்ப விரும்பறோம் (அட நிசமாவா?) பார்ட்டி வேர் சாரீஸ், (பாட்டி வேர் பண்ண சாரீஸ்?), எம்பிராய்டரி சாரீஸ், ஹெவி வொர்க் கொண்ட சாரீஸ்ன்னு நிறைய வெரைட்டீஸ் வந்திருக்கறது ரொம்ப இன்ட்ரஸ்டிங்கான விஷயம்'' என்கின்றனர் கணினி துறையில் பணிபுரியும் ரம்யா மற்றும் முத்துலட்சுமி.

''இசைக் கலைஞர்களாகிய நாங்கள் பெரும்பாலும் உடுத்துவது நமது பாரம்பரியத்தைச் சீர் தூக்கிக் காட்டும் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளைத்தான். கச்சேரி மேடையில் காஞ்சிபுரம் பட்டு ஒரு கம்பீரத்தையும், அழகையும், மரியாதையையும் கொடுக்கக் கூடியது. அதுவும் நான், நல்ல ப்ரைட் நிறங்கள் கொண்ட பட்டுப் புடைவைகளைத்தான் உடுத்துவேன். இப்பொழுதெல்லாம் அதிக வேலைப்பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகள்தான் என்னோடு சேர்ந்து சங்கீத மேடைகளை அலங்கரிக்கின்றன'' என்கிறார் கர்னாடக இசைப் பாடகி சாருலதா மணி.



✱ ஜெயராமன்

'எல்லாம் சரி; சட்டு புட்டுன்னு பட்டுப் புடைவையை வாங்கிடணும்னு நமக்கும் ஆசையாத்தான் இருக்கு, ஆனா அதை அப்படியே பட்டுப் போகாம வெச்சுக்கறது எப்படின்னுதான் தெரியலை என்பவர்களுக்கு, பட்டு டிப்ஸ் தருகிறார் 35 வருடங்களாக ஜவுளித் துறையில் பணியாற்றி வரும் ஜெயராமன்,

பட்டு மொழி!

1. பட்டுப் புடைவையை முதல்ல கொடுக்கப்படற அட்டைப் பெட்டியிலிருந்தோ, வெல்வெட் பெட்டியிலிருந்தோ எடுத்து வெச்சிடணும். பல பேரு பண்ற தப்பு, வாங்கிட்டுப் போய் அப்படியே அதே அட்டைப் பெட்டியிலேயே வெச்சுடறதுதான்.

2. அடுத்து, பட்டுப் புடைவையை கட்டிக்கிட்டு வெளியே போயிட்டு வந்த உடனேயே 3 முதல் 4 மணி நேரம் காற்றாட கட்டாயம் காய வைக்கணும்.

3. அடிக்கடி புடைவையை மாத்தி மாத்தி மடிச்சு வைக்கணும். விலை உயர்ந்த புடைவை வாங்கிய கையோடு, அதுக்கு ஃபால்ஸ் தைச்சுக்கணும்.

4. பட்டுப் புடைவைக்கு எப்பவும் ட்ரை வாஷ்தான்... டோன்ட் ட்ரை எனி அதர் வாஷ்.

5. பட்டுப் புடைவை வைக்கும் ஷெல்ஃபில் வசம்பு போடுவது, பட்டுப் புடைவையின் ஆரோக்கியத்துக்கு நல்லது.



✱ ரம்யா, முத்துலட்சுமி

கட்டுரை மற்றும் படங்கள்:
நளினி சம்பத்குமார்

● லலிதா செல்லப்பா, சென்னை

அ, ஆ, இ, ஈ என்றால் உங்களுக்கு என்ன ஞாபகம் வரும்...?

அ என்றால் அம்மா... ஆ என்றால் ஆத்துக்காரி... இ என்றால் இல்லாள்... ஈ என்றால் ஈன்றவள்... இப்படி மனைவியும் தாயும்தான் மாறி மாறி ஞாபகத்துக்கு வரும்...!

● ப்ரியம்வதா, பெங்களூர்

வரதட்சணை வாங்கி திருமணம் செய்து கொள்ளும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?

Bribe - Grooms. அப்படி நடப்பது திருமணம் அல்ல... திருட்டு மணம்...!

● மா.உலகநாதன், திருநீலக்குடி

குலதெய்வம் சிறந்ததா? ... இஷ்ட தெய்வம் சிறந்ததா..?

குலதெய்வம் தாய். இஷ்ட தெய்வம் மனைவி. குல தெய்வத்திடம் பக்தி. இஷ்ட தெய்வத்திடம் பயம். இதுதான் பய பக்தி!

● கண்ணன், வேலூர்

நீங்கள் கிரேசி மோகனாவாகப் பிறந்திருந்தால்?

''சாக்லேட் கிருஷ்ணாவுக்கு பதில் 'பிஸ்கெட் பாமா' இல்ல 'ரசகுல்லா ருக்மணி' என்று நாடகம் போட்டிருப்பேன்!

● ஆர்.செண்பகவல்லி, திருவில்லிப்புத்தூர்

முதல் இரவில் மோகம்... கடைசி இரவில்?

மோகம் அன்பாகும் அமோகம்!

பா.அசோக் விருதுநகர்

மனைவியிடமிருந்து முத்தங்கள் பெறும்போது உடலில் மின்சார அதிர்வு

முத்தத்திலிருந்து



ஏற்படுகிறது. இதிலிருந்து மின்சாரம் எடுத்து 'பல்புகளை' எரிய வைக்க முடியுமா?

மிஞ்சி மிஞ்சி போனா பெட் ரூம் லைட்டை எரிய வைக்கலாம். அதுவும் முத்தம் முடிந்து அணைக்கும்போது அணைந்துவிடும். மேலும் முத்தத்தில் ஈரம் இருப்பதால் 'ஷார்ட் சர்க்யூட்' ஆகும் ஆபத்துண்டு. அப்புறம் முத்தம் கெடுத்த நீங்க மரணத்தை முத்தமிட்டதாகிவிடப் போகிறது!

இசையமுது, ஆரணி

முதலிரவில் மனம் விட்டு பேச வேண்டும் என்கிறார்களே. எதைப் பற்றிப் பேசுவது?

எதையாவது பேசித் தொலையுங்கள். கணவனாக நீங்கள் பேசப் போகும் கடைசி இரவு அதுதான்!

மின்சாரம்



கிரேஸியைக் கேளுங்கள்

● ஆர்.ராஜலட்சுமி, ஹூப்ளி

பண ஆசை அதிகம் உடையவர்கள் ஆணா அல்லது பெண்ணா?

ஆண்தான். 'ஆண்'டவன் புருஷோத்தமனுக்கே லக்ஷ்மியிடம்தான் பிரியம் அதிகம்!

மல்லிகா அன்பழகன், சென்னை

மனைவியின் காலை அமுக்கி விட்டதுண்டா?

மனைவி சமையல் அறையில் பிஸியாக இருக்கும்போது அவளுக்கு வரும் டெலிஃபோன் call-ஐ அமுக்கி விடுவேன்!

● சிவராமன், அம்பத்தூர்

தலையணை மந்திரம் என்றால் என்ன?

அது மந்திரம் அல்ல, தத்துவம் Pillowஸபி!

● பாக்யலக்ஷ்மி, விருதுநகர்

சில பெண்கள் தங்கள் ஜடையை முன்னால் போட்டுக் கொள்கிறார்களே...ஏன்?

'சவுரி'யத்துக்காக இருக்கலாம்!

● சௌபர்ணிகா, சென்னை

இளகிய மனம் யாருக்கு. ஆண்களுக்கா இல்லை பெண்களுக்கா?

Eveக்குத்தான் இரக்கம் உண்டு. ஈவிரக்கம்!

● சிவபாரதி, சிதம்பரம்

கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்...?

திருட்டு முழி முழிக்கும்!

● சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி

நகைகள் அணியும் பழக்கம் எப்போது தோன்றியிருக்கும்?

''பெண் தோன்றி பொன் தோன்றாக'' காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது!

●

வட்டமேஜை

கல்யாண விருந்து!

✉ எல்லாவற்றையும் ஆளக்கூடிய ஆற்றல் வ்ருத்தாவாக, அம்பாள் எப்படி இருக்கிறாள் என்பதற்கு கொடுக்கப்பட்ட உதாரணம் அற்புதம்! - **மைதிலி ஆராவமுதன், சென்னை - 10** ✉ இலங்கையில் கண்ணி வெடிகளை அகற்றுவது மட்டுமல்லாது, அங்கு வாழும் தமிழர்களிடம் நம்பிக்கையூட்டுவதும் அவசியம். - **பி.தர்சினி, குடந்தை-1** ✉ ''கேட்காதீங்க... கேட்காதீங்க... கேட்டுக்கிட்டே... இருக்காதீங்க..!'ன்னு அட்டைப்படத்தில் போட்டு, எங்களைப் பக்கத்துக்குப் பக்கம் படிக்க வைச்சுட்டீங்களே! - **எஸ்.உஷா சுதர்சன், திருச்செங்கோடு** ✉ ஜனநாயகத்தை பணநாயகம் தோற்கடிக்கிற கொடுமையை, வெளிச்சம் போட்டு அடையாளம் காட்டிய தலையங்கத்தைப் பலமுறை பாராட்டலாம். - **புலவர் எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம் - 1** ✉ இதுவரை வாழ்க்கையில் 'ரேடியோ'வே வாங்காத என்னை, உடனடியாக 'ரேடியோ' வாங்க தூண்டிவிட்டது, கல்கியின் 'எஃப்.எம்.' ஸ்பெஷல்! - **வி.என்.கதிர்வேல், வேலூர் - 6** ✉ தனசேகரின் பேட்டி பயனுள்ளது! - **அ.முரளிதரன், மதுரை-3** ✉ குரல்களாக மட்டுமே அறிமுகமான எத்தனையோ RJக்களை FM ஸ்பெஷலில் நேரடி தரிசனம் செய்ய வைத்த கல்கிக்கு நன்றி. - **எம்.ஜி.பரத், திண்டுக்கல் - 1** ✉ ஆர்.வெங்கடேஷின் காற்றில் வரும் தேவதை! எஃப்.எம்.ஹிஸ்டரி எஃப்.எம் குறித்த பல்வேறு விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது! - **சாந்தி சுந்தர், நெய்வேலி - 3** ✉ தடம் மாறினாலும் இடம் மாறாமல் சில பேர் இருப்பதைக் காட்டிய 'திருவல்லிக்கேணி - தடம் எண்-13 சிறுகதை மிகவும் பிரமாதம். - **எஸ்.கோபாலன், நங்கநல்லூர்** ✉ ''இயக்குநர் இமயமும் இயக்குநர் சிகரமும் இணைந்து நடிக்கும் படத்தில், கார்த்திக் ராஜா இசையில் உலக நாயகன் கமல் பாடுகிறார் என்றால், அது கல்யாண விருந்துக்குச் சமம். - **எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்** ✉ பெயரில் மட்டுமல்லாது, தமிழை முறையாகப் பயின்று, தமிழ் பேசி சீன வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளை அளிக்கும் தொகுப்பாளர்கள், தமிழர்களின் பாராட்டுகளுக்குரியவர்கள். - **கே.வி.ராமன், சென்னை-13**





'பெரிய' சாரதா

கலாக்ஷேத்ராவின் நிறுவனரான ருக்மிணி தேவியுடன் நெருங்கிப் பழகி, கலாக்ஷேத்ரா வின் மேன்மைக்காக உழைத்த நாட்டிய ஆசிரியை பெரிய சாரதா, அண்மையில் சென்னையில் காலமானார். அவருக்கு நடன கலைஞர்களும், நண்பர்களும் செய்யும் அஞ்சலி இதோ...

''கலாக்ஷேத்ராவில் நாங்கள் 'ரூபமு ஜூச்சி' வர்ணத்தை அப்போது கற்றுக் கொண்டிருந்தோம். வகுப்புக்கு வந்து, காலை மடித்துக்கொண்டு கம்பீரமாக அமர்ந்து பார்த்துக்கொண்டிருப்பார். பெரிய சாரதா டீச்சர். முன்னால் வளைந்து, ஒரு சிறு 'குலுக்கு'க்குப் பின் பாதங்களைத் தரையில் சரியான கோணத்தில் பதிப்பதி லேயே கவனமாக இருந்தோம். ஆசிரியை சாரதா ஹாஃப்மன் (சின்ன சாரதா) நாங்கள் எப்படிச் செய்கிறோம் என்று பார்த்துக் கொண்டிருந்தார். பலதடவை முயன்றும் சரியாக அமையவில்லை. அப்படியே உட் கார்ந்துவிட்டோம். 'பெரிய சாரதா டீச்சர் சொல்லித் தருவார், பாருங்கள்!' என்றார். அவர், செய்து காண்பித்தார். கற்றுக் கொண் டோம். மறக்க முடியாத வகுப்பு! ஓர் இறகு தரையில் படிவது மாதிரி, எவ்வளவு அமைதியாக வந்து அமர்ந்தாரோ, அவ் வளவு அமைதியாக, மலர்ந்த தாமரை குளத்துத் தண்ணீரில் இருந்து விலகிச் செல்வது போல அகன்று செல்வார்!'' என்று நெகிழ்ந்து கூறுகிறார் அனிதா ரத்னம்.

தியாசஃபிகல் பின்னணியில் வளர்ந்த பெரிய சாரதாவுக்கு கலாசாரம் தெரியும்; தத்துவம் தெரியும். சம்ஸ்கிருதத்தின் மீது பற்றுள்ளவர். நடனக் கலை பற்றி முழுமை யாக அறிந்தவர். மிருதங்கக்காரரிடம் 'தொப்பி'யிலிருந்து என்ன ஓசை வர வேண் டும்; புல்லாங்குழலிலிருந்து அழகான ஓர் ஒலி எழ எப்படி வாசிக்க வேண்டும் என்று சொல்வது மட்டுமல்ல; வயலின், வீணை உட்பட அத்தனை வாத்தியங்களையும் வாசிப்பார்.

''பெரிய சாரதா, சரஸ்வதி மாதா!'' என்று சொல்கிறார் நடனக் கலைப் பதிவு களில் தேர்ந்த ஆஷிஷ் கோக்கர்.

''சம்ஸ்கிருத பண்டிதரின் பேத்தி. எனவே அந்த அழகான மொழியிடம் அவ ருக்கு இயல்பான பற்று இருந்தது. அதுவே பொருத்தமான வார்த்தைகளை, சரியான இடங்களில் எடுத்துச் சொல்ல அவருக்கு ஆற்றலை அளித்தது!'' என்கிறார் கலா க்ஷேத்ரா இயக்குனர் லீலா சாம்ஸன்.

''பாடம் சொல்லிக் கொடுப்பதாகட்டும், பயிற்சிகள் சொல்லிக் கொடுப்பதாகட்டும், இரண்டையுமே எளிதாகக் கையாளக் கூடி யவர்'' என்கிறார் கபிலா வாத்ஸ்யாயன். எத்தனை பொருத்தமான பாராட்டு!

தொகுப்பு: **சாருகேசி**

அரங்கம் ட்ரஸ்ட் வெளியிட்ட 'நிர்மலம்' புத்தகத்திலிருந்து

மாங்கல்யதாரணம் அல்லது தாலி கட்டுதல் என்பது, இந்து திருமணத்தில் இன்றியமையாத முக்கியமான சடங்கு. பாரத தேசத்தில் ஹிந்து சமூகத்தில் தாலி ஒரு மங்கலப் பொருள் மட்டுமல்ல; கலாசாரச் சின்னமும்கூட. இந்தச் சின்னத்தை மையப்படுத்தி 'பெண்கள் தாலி அணிவது அவசியமா?' என்ற தலைப்பில், விஜய் டீவியில் கோபிநாத் 'நீயா நானா'வில் சமீபத்தில் விவாதித்தார். அந்நிகழ்ச்சி பெரும் சலசலப்பை உருவாக்கியது. இந்து சமூகத்தின் மனத்தைப் புண்படுத்தியதாகவும், இந்துக்களை அவமதிக்கும் விதமாய் இருந்ததாகவும் ஆர்.சுப்ரமணியம் என்ற வழக்குரைஞர் வழக்கு தொடுக்க சட்ட அறிவிப்புப் புகார் அறிவித்துள்ளார். 'விஜய் டி.வி மன்னிப்புக் கோர வேண்டும்' என இராம.கோபாலன் போன்றவர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இச்சூழலில் இதுகுறித்து பெண்களிடம் கருத்துக் கேட்டபோது...





டாக்டர் அருணா சுபாஷிணி: மடிசார், மூக்குத்தி, ஒத்தை ஜடை போன்ற சமுதாய பழக்கங்களை ஒதுக்கித் தள்ளும் மனம் உள்ளவர்களைப் போல, தாலி பற்றி அதிகமான கருத்துக்களைக் கூற அனுமதி மறுப்பது நியாயமல்ல! அதேநேரம், சுடிதார் எப்படி புடைவையை ஒதுக்கியதோ, அப்படி இயல்பாகவே இது நடைபெறும். அவசர யுகத்தில், போன்ற சாதனை செய்யத் துடிக்கும் பெண்டிரின் முயற்சிகள் தாலியைக் கொஞ்சம் தள்ளித்தான் வைக்கும். இது அவரவர் அந்தரங்கம்! மனம் சொன்னால் மறுப்பில்லை!



கருணா சுரேஷ்குமார்: ''பதினைந்து வருடங்கள் வட இந்திய வாசியாக இருந்தவள் நான். 'தாலி' என்பதை ஒரு பெண்ணுக்கு சகல மங்களங்களையும் அளித்திடும் ஒரு 'மங்கள சூத்ரா' என்றே அவர்கள் பார்ப்பார்கள். திருமணம் ஆன பெண், தன் உச்சந்தலையில் 'சிந்தூர்' இல்லாமல் வெளியில் எங்குமே செல்ல மாட்டாள் அங்கு. அதைப் பற்றி விவாதிப்பது என்பதே, பலரது மனத்தையும் புண்படுத்தக் கூடிய ஒரு விஷயமாகும். நிகழ்ச்சிப் பொறுப்பாளருக்கு, வேறு மதச் சடங்கை இப்படி விமர்ச்சிக்கும் திராணி உண்டா?

மௌலா தேவி:

விவாதிக்க எவ்வளவோ விஷயம் இருக்க, விஜய் டீ.வி செய்த இந்த டிராமா, விஷமத்தனமானது. 'தாலி' என்பதை பெண்கள், குறிப்பாக நம் தமிழ் நாட்டுப் பெண்கள் மிகுந்த மதிப்புடனும், மரியாதையுடனும் பார்க்கிறார்கள். நம் நாட்டைப் பொறுத்தவரை, தாலி என்பது மஞ்சள் கயிற்றில் இருந்தாலும் சரி; அது தங்கச் சங்கிலியில் இருந்தாலும் சரி, மதிப்புக்குரியதுதான்! சட்டசபையில் அமைச்சர் உறுதி மொழி எடுத்துக்கிறதை கிண்டலடிக்கிற மாதிரி, ஒரு மத அடையாளத்தை - சம்பிராயத்தைக் கிண்டலடித்த விஜய் டீ.வி., நிகழ்ச்சி கண்டிப்புக்குரியது.



இது ரொம்ப தப்பு!

கீதா சுப்ரமணியம்:

''விஜய் டீ.வி.யில், தாலியை வைத்து நடைபெற்ற ஒரு விவாதத்தை பார்த்து பெரிதும் வேதனையுற்றேன். அந்நிகழ்ச்சியில் தாலியை கழற்றிக் கொடுத்தது முதிர்ந்த வயது ஒரு பெண்மணி. வளரும் சந்ததியினருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டியவர், இப்படி நமது தமிழ்க் கலாசாரத்தை மீறும் விதத்தில் நடந்து கொண்டது ரொம்பவும் சங்கடமாக்கியது. நம் பண்பாட்டை நாமே இழிவு படுத்துவது என்பது, மல்லாக்கப் படுத்துக்கொண்டு வானத்தைப் பார்த்து எச்சில் துப்புவதைப் போன்றது. இது ரொம்பத் தப்பு!



ஸ்ரீலு சிவக்குமார்:

தாலி என்பது, நான் ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் தலைவி என்பதன் குறியீடு. நம் பண்பாடான திருமண பந்தத்தின் புனிதத்தையும், அன்பையும் எடுத்துரைக்கும் மிகப் பெரிய சீதனம் அது. எவ்வளவு மாடர்னாகவும் ஃபேஷனாகவும் ஒரு பெண் இருந்தாலும், அவள் கட்டாயம் தாலி அணிவாள். அதை வைத்து ஷோ நடத்தி நம் கலாச்சாரத்தை நாமே கொச்சைப் படுத்திக் கொள்வது அபத்தம். விஜய் டீ.வி.யின் இத்தகையப் போக்கு திருத்த வேண்டும்.

தொகுப்பு:
நளினி,
பாலா



அரசின் 'ஆட்டம்!'

தனது ஏழு ஆண்டுகால பா.ஜ.க. தொடர்பைத் துண்டித்துக்கொண்டு, காங்கிரஸில் இணைந்திருக்கிறார் திருநாவுக்கரசர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ராமநாதபுரத்தில் நடிகர் ரித்திஷிடம் தோற்றதுக்குப் பிறகு, பி.ஜே.பி.யோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்தார் அரசர். இவர் கட்சி தாவப் போவது தெரிந்த ரகசியம் ஆகிவிட்டதால், தமிழக பா.ஜ.க.வில் யாருக்கும் அதிர்ச்சி இல்லை. ஆனால், நிறைய வருத்தம்.



''கட்சியில் சேர்ந்தவுடன் தேசியக்குழு உறுப்பினர், மத்திய அமைச்சர், ராஜ்ய சபா உறுப்பினர் என்று சகல பதவிகளையும் அனுபவித்துவிட்டார் திருநாவுக்கரசர். அவரை மிகுந்த மரியாதையோடு நடத்தினோம். இப்போது முதுகில் குத்திவிட்டுப் போயிருக்கிறார். பா.ஜ.க.வில் இருந்து வெளியே போகும் எல்லோரும் சொல்லும் வழக்கமான குற்றச்சாட்டை, இவரும் சொல்லி இருக்கிறார். இவரால் கட்சிக்கு எந்தப் பயனும் இல்லை. அவரது செல்வாக்கால் ஒரு சட்டமன்ற உறுப்பினரைக்கூட உருவாக்க முடியவில்லை'' என்கிறார் ஒரு மூத்த தமிழக பி.ஜே.பி. பிரமுகர்.

''தி.மு.க.வின் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டாம் என்றுதான் கடந்த நான்கு மாத காலமாக அரசரைக் கட்சியில் சேர்க்காமல் தயங்கி வந்தது காங்கிரஸ். இப்போது ஒரு திட்டத்தோடு சேர்த்திருக்கிறார் ராகுல்'' என்கிறார்கள். 2011ல் சிதம்பரத்தை முன்னிறுத்தி தமிழக சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க காங்கிரஸ் திட்டமிட்டிருக்கிறது. அவர் கரங்களுக்கு வலு சேர்க்கவே, அரசரை அரவணைத்துக் கொண்டுள்ளது காங்கிரஸ். இனி கூடிய விரைவில் தி.மு.க.வின் மீது கடுமையான விமர்சனத்தை காங்கிரஸ் வைக்கும் என்கிறார்கள். ஆனால், திருநாவுக்கரசர் தனி கோஷ்டி அல்ல; சிதம்பரம் கோஷ்டி. இதற்கிடையில், சிதம்பரத்தை தமிழ்நாடு பாலிடிக்ஸில் முன்னிலைப்படுத்துவதை வாசன் கோஷ்டியினர் உக்கிரமாகப் பார்த்து வருகிறார்கள். அதனால்தானோ என்னவோ, கட்சியில் தமது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள மீண்டும் மாநில அரசியலுக்குத் திரும்புகிறேன் என்கிறாராம் வாசன். இனி தமிழக காங்கிரஸிலும் சில திருப்பங்கள் வரக்கூடும்.

''காங்கிரஸுக்கு நேரெதிர் கொள்கை கொண்ட பா.ஜ.க.விலிருந்து ஒருவரை கட்சியில் சேர்த்தது சரிதானா?'' என்று தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவிடம் கேட்டோம். ''மதவாத பா.ஜ.க.வை எதிர்ப்பதற்கு வரும் எவரையும், நாங்கள் அணைத்துக் கொண்டு செயல்படுவோம். திருநாவுக்கரசர் அந்தக் கட்சிக்குள்ளிருந்து அதன் உண்மை சொரூபத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார். சோனியா, ராகுல் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ள அவரைப் போன்றவர் காங்கிரஸில் சேருவதன் மூலம், கட்சி இன்னும் உயிர்த்துடிப்போடு செயல்படும்'' என்கிறார் தங்கபாலு.

- ப்ரியன்

திரை விமர்சனம்



◆ ஐ.டி.ஃபீல்டில் புரையோடிப் போயிருக்கும், பாலியல் தடுமாற்றங்களை சொல்ல முனைந்திருக்கும் படம்.

◆ 'உவ்வே' என்று வாமிட் எடுக்க வைக்கும் கலவையாக வந்திருக்கும் காட்சிகளோ கண்ணுக்கும், மனசுக்கும் அபாய உறுத்தல்.

◆ பாலியல் உணர்வுக்குத் தூபம் போடும் படம் போல காட்சிகளை அமைத்துவிட்டு, இப்படியெல்லாம் இளைஞர்கள் கெட்டுப் போகக்கூடாது என்று சொல்வது முட்டாள்தனம்.

◆ பார்ப்பவர்களை எல்லாம் பள்ளியறைக்குள் வீழ்த்தத் துடிக்கும் 'பால்' கேரக்டர்கள் சமூகத்திலும் இருக்கத்தான் செய்கின்றனர். அதற்காக அந்தக் கேரக்டர் மீது அத்தனை வெளிச்சம் ஏன்?

◆ காதைப் பொத்திக் கொள்ள தோன்றும் இரட்டை அர்த்த வசனம் எழுத எதற்கு வசனகர்த்தா? பேசாமல் அவர் வேறு ஏதாவது செய்யலாம்.

◆ 'அர்ஷத்கான்' தான் ('பால்' கேரக்டர்) படத்தின் இயக்குநராம்.

அதுதான் படம் முழுக்க ஆபாச வாடை!

◆ இந்த லட்சணத்தில் கதை இருக்க, சிறுபிள்ளைகள் விளையாடும் சா...பூ...த்ரி... எதற்கு தலைப்பாக வைத்தார்கள்?

◆ அப்பாஸ் ரபியின் பின்னணி இசை நச். பாடல்கள் ஜலதோஷம் பிடிச்ச 'ஹச்'

◆ சா...பூ...த்ரி - டபுள் 'ஏ'

- நந்தினி



ச.ந.கண்ணன்


சாய்னா, சானியா. இருவரும் ஒரே பிரதேசத்திலிருந்து கிளம்பியவர்கள் என்றாலும், சானியாவுக்குக் கிடைத்த திடீர் புகழ் சாய்னாவுக்கு வாய்க்கவில்லை. ஆனால், பரபரப்புக்காக மட்டுமே பேசப்பட்ட சானியாவைத் தாண்டி, இன்று வெகுதூரம் முன்னேறி வந்துவிட்டார் சாய்னா நெஹ்வால். பேட்மிண்டன் போன்ற ஒரு சர்வதேச விளையாட்டில் சாய்னா ஆறாவது நிலையில் இருப்பது இந்தியாவின் பாக்கியம் என்றுதான் கூறவேண்டும். அடுத்த லண்டன் ஒலிம்பிக்கில், இந்தியாவின் மிகப்பெரிய நம்பிக்கையும் சாய்னாதான்.

அபினவ் பிந்திரா போல சாய்னாவின் தந்தை ஹர்விர் சிங்குக்கு வளம்கொழிக்கும் செல்வங்கள் கிடையாது. ஹைதராபாத்தில் Oilseeds Research செய்யும் ஒரு சாதாரண விஞ்ஞானி. நானி பிரசாத் ராவ் என்கிற பேட்மிண்டன் பயிற்சியாளர் சானியாவின் ஆட்டத்தைப் பார்த்து நல்ல யோசனை சொன்னார். ''இந்தப் பெண்ணை என் கையில் கொடுத்துவிடு. நான் சாம்பியன் ஆக்கிக் காட்டுகிறேன்.'' அதுவரை சாய்னாமீது பெரிய நம்பிக்கை வைக்காத ஹர்விருக்கு, பயிற்சியாளரின் வார்த்தைகள் நம்பிக்கையை உண்டாக்கின.



பயிற்சிக்காக தன் மகளை ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு தினமும் 50 கிமீ பயணம் செய்வார் ஹர்விர் சிங். 'அலைச்சல் காரணமாகப் பலநாட்கள் பின் சீட்டில் தூங்கியபடி வருவாள் சாய்னா' என்கிறார் அவர். 1998ல் மாதம் 12,000 ரூபாயை சாய்னாவின் பயிற்சிக்காகச் செலவு செய்தார் ஹர்விர். இதனால் வீட்டில் மூன்றுவேளை உணவுக்குப் பங்கம் ஏற்பட்டது. பணச்சுமை தாளாமல் பி.எஃப் பணம் ஒரு லட்சத்தை எடுத்து வீட்டுக்கும் சாய்னாவுக்கும் செலவு செய்ய ஆரம்பித்தார். ஆனால், இந்தக் கஷ்டம் எதுவும் தெரியாமல் போட்டிகளில் பெரிய பெரிய வெற்றிகளைத் தொட ஆரம்பித்தார் சாய்னா. 2005ல் மிட்டல் நிறுவனம் சாய்னாவின் திறமையைப் பார்த்து ஸ்பான்ஸர் செய்ய முன்வந்தபோதுதான், ஹர்விர் சிங்கின் சுமை பாதியாகக் குறைந்தது.

'விளையாட்டுதான் அவள் உணவு, பொழுதுபோக்கு எல்லாம்' என்கிறார் ஹர்விர்சிங். பீஜிங் ஒலிம்பிக்கில் ஒரேயொரு தோல்வி மூலம் பதக்கத்தை இழந்தார் சாய்னா. ஆனாலும் அவரால் தான் உலக பேட்மிண்டன் வரைபடத்தில் இந்தியாவின் பெயர் பளிச்சென்று இடம்பெற்றிருக்கிறது. அரசின் உதவி மற்றும் தனியார் ஸ்பான்ஸர் எல்லாமே சாதித்த பிறகே கிடைக்கிறது. அதுவரை முட்டி மோதி ஒரு சாதனையாளனைப் படிப்படியாக உருவாக் கும் தகப்பன்களை இந்தச் சமூகம் எப்போதும் மறந்து விடுகிறது.


சாதனையாளர்களைப்
படிப்படியாக உருவாக்கும்
தகப்பன்களை இந்தச் சமூகம் எப்போதும்
மறந்துவிடுகிறது

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.



